Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 06 திங்கட்கிழமை (20.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :113

## ஜெனீவா உடன்பாட்டை அமுல்படுத்தக் கோரி வடக்கு-கிழக்கில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

### கூட்டமைப்பு - புலிகள் சந்திப்பில் முடிவு

கிளிநொச்சி,மார்ச் 20

ஜெனீவா இணக்கப்பாட்டை நடைமுறைப் படுத்துமாறு கோரியும் -

அதிஉயர் பாதுகாப்பு வலயம், இராணுவ நெருக்குவாரங்களை நீக்கி மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தக் கோரியும் - மாபெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - விடுதலைப் புலிகள் சந்திப்பில் இந்தப் போராட்டம் குறித்து ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜெனீவாப் பேச்சுத் தொடர்பாக விளக்கமளித்தார்.

ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே எமது விருப்பம் என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 4 மாணவர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்

திருகோணமலை, மார்ச் 20

திருகோணமலை நகரில் பெரிய கடற்கரைப் பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற நான்கு மாணவர்கள் திடீரென அடித்த அலையில் சிக்குண்டு, கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு, கடலில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்களும், சகோதரர்களுமான மனோஜ் கிஸான் (வயது-19), ஸ்னோஸ் ரொஸான்

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் பாதுகாப்பு உத்தரவாதம் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை

கிளிநொச்சி,மார்ச் 20

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகள் மீண்டும் அரசியல் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்புக் குழுவிடம் பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், விடுதலைப் புலிகளின் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது அரசியல் பணிகளை ஆரம்பிக்க முடியும். எனினும், போராளிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கவேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடாக அரசுக்குத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றை நாளை கூட்டமைப்பு பகிஷ்கரிக்கும்

கிளிநொச்சி,மார்ச் 20

ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்காததைக் கண்டிக்கும் வகையில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவிருக்கின்றனர்.

நாளை நாடாளுமன்றம் கூடும்போது தனது கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை நடத்தவிடாமல் குழப்பும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தை எந்த வடிவத்தில் முன்னெடுப்பது என்பது குறித்து ஆராய இன்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு கூடும் என கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# தேசிய அரசா? பொதுத் தேர்தலா?

# ஜனாதிபதி விரைவில் தீர்மானம்!

## ஜே.வி.பியின் நெருக்குதல்களை சமாளிக்க புதிய வியூகம் வகுப்பு

கொழும்பு,மார்ச் 20

ஜே.வி.பியின் தொடர் நெருக்குதல்களால் அமைதி முயற்சிகளை முன்நகர்த்த முடியாது திண்டாடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு சமாதான நடவடிக்கைகளை ஆக்கபூர்வமான திசையில் கொண்டுசெல்லவும் நாட்டின் அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொண்டு பொருளாதார நிலையை மேம்படுத்தவும் புதிய திட்டங்களை வகுத்து வருகின்றார்.

நெருக்குதல்கள் தருகின்ற ஜே.வி.பியின் ஆதரவில் இனிமேலும் தங்கி இருக்காமல், எதிரணியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஓர் அரசைச் செயற்படுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்தல் அல்லது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி புதிய அரசை உருவாக்குதல் என்ற இந்த இரண்டு திட்டங்களில் ஒன்றைச் செயற்படுத்துவது குறித்து ஜனாதிபதி விரைவில் முடிவெடுப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச் சுடரில்

உயர்தர மாணவர்களின் தமிழ் வினாத்தாள்,
இந்துநாகரிகம் விடைக் குறிப்புகள்.
தரம் 10, 11 - ஆங்கிலம் வினாத்தாள்,
தரம் 9 - கணிதம் வினாத்தாள்.

## நோர்வே தூதரகம் நோக்கிப் பேரணி

கொழும்பு,மார்ச் 20

நோர்வேயை சமாதான அனுசரணைப் பணியிலிருந்து விலகவேண்டும் என்று கோரி எதிர்ப்புப் பேரணி ஒன்றினை தேசிய பிக்குகள் முன்னணி நாளை நடத்தவுள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு அருகில் இருந்து ஆரம்பமாகும் பேரணி இலங்கைக்கான நோர்வேத் தூதரக அலுவலகம் நோக்கிச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது. (3-13)

## குடாநாட்டிலும் இன்று தபால் வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் நடைபெறும் என்று யாழ்.தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகின்றன என்றும் திட்டமிட்டபடி வாக்களிப்பு இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3)

## துணைப்படை விவகாரம் அடுத்த பேச்சில் பெரும் சவாலாக இருக்கப்போகின்றது

### கண்காணிப்புக் குழுத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 20

"அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கான அறிக்கையை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தயாரித்து வருகிறது. இரண்டாம் சுற்றுப் பேச்சுகளில் துணைப்படை விவகாரம் பெரிய சவாலாக இருக்கப்போகிறது."

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மேற்கண்டவாறு கூறினார் எனச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

"கடந்த ஒரு மாதகாலத்தில் மட்டும் சுமார் ஐம்பது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வடக்கு - கிழக்கில் தமிழர் மீதான இராணுவச் சித்திரவதை தொடர்பாகவும், வயது குறைந்தோரை தமது இயக்கத்தில் புலிகள் சேர்ப்பது தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் சில பாரதூரமானவை. எனினும், எந்த ஒரு தரப்பும் 2ஆம் சுற்றுப் பேச்சுக்களில் இருந்து வெளியேறுவதற்குக் காரணமாகக் காட்டும் அளவுக்கு இவை மோசமானவை அல்ல"

- இப்படி அவர் மேலும் கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தற்பொழுது தயாரித்துவரும் அறிக்கை, இரண்டாம் சுற்றுப் பேச்சின்போது, கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்ரிக்சனால் சமர்ப்பிக்கப்படும். கடந்த மாத நிலைமை பற்றியதாக அந்த அறிக்கை இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் தற்பாதுகாப்பு பயிற்சியால் அரசு அச்சம்

### நேரடி ஆயுதக் கொள்வனவில் இறங்கி இருப்பதாகத் தகவல்

கொழும்பு,மார்ச் 20

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு தற்பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்படுவது குறித்து இலங்கை அரசு அச்சம் கொண்டிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த அச்சம் காரணமாக இலங்கை அரசு ஆயுதக் கொள்வனவில் நேரடியாக இறங்கியிருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுத் தரகர்களை நம்பி ஏமாறுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே அரசு ஆயுதக் கொள்வனவில் நேரடியாக இறங்கியிருக்கிறது.

உள்நாட்டுத் தரகர்கள் மூலம் அண்மையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் 20 ஆண்டுகள்

(16ஆம் பக்கம் பார்க்க)



நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் நினைவுதின ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்படுவதையும் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும் மலரஞ்சலி செலுத்தப்படுவதையும் படங்களில் காணலாம். (செய்தி 14ஆம் பக்கத்தில்) (படங்கள்:- ஒளி அதிரன், நேசன்)

### மட்டுவில் பன்றித்தலைச்சி ஆலயத்தில்

# பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி,மார்ச்,20

வரலாற்று சிறப்புமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவத்தையொட்டி அங்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்வோரையும், ஆலயத்துக்கு வரும் அடியார்களையும் சுகாதாரம் பேணுமாறு சாவகச்சேரி பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் கோரியிருக்கின்றனர்.

உணவுக் கடைகள், இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள், ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபடும் வான்கள், கச்சான் விற்பனையாளர்கள் சுகாதார நடவடிக்கைகளை கைக்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிசோதகர் ஆர்.சிரேஸ்டகுமார் கேட்டுள்ளார்.

இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்பவர்கள், கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து தொற்றுக்கள் ஏற்படாதவாறு பாதுகாத்து அவற்றை விற்கவேண்டும்.

உணவுச் சாலைகள் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டு தற்பொழுது நடைமுறையில் உள்ள சுகாதார நடவடிக்கைக்கேற்ப நடத்துதல் வேண்டும்.

ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள், ஐஸ்கிறீம் வானில் விற்பனை செய்பவர்கள் 2006 இற்கான உரிமம் பெற்றிருப்பதுடன் சுகாதார நடைமுறைக்கேற்ப தொற்றுக்கள் ஏற்படாதவாறு விற்பனை செய்தல் வேண்டும்.

கச்சான், கடலை வியாபாரிகள் சுகாதார முறைக்கேற்ப பொலித்தீனினால் மூடி விற்பனை செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆலய சூழல் பகுதி சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஆலய சூழலில் கூடும் அடியார்களும் தமது சுகாதார நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அடியார்கள் ஆலய சூழலில் பொலித்தீன் பொருள்களின் பாவனையைக் குறைத்துக் கொள்வதுடன் பாவிக்கப்பட்ட ஐஸ்கிறீம் 'கப்பு'கள், பொலித்தீன் பைக்கற்றுக்களை ஆலய சூழலில் வைக்கப்பட்டுள்ள கழிவுத் தொட்டிகளில் போடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மலசல கூடங்களைப் பாவிப்பவர்கள், அவற்றை சுத்தமாகப் பாவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-31)

## கல்விப் பூங்கா திறப்பு

வரணி, தாவளை இயற்றாலையில் அமைக்கப்பட்டுள்ள துர்க்கா மழலைகள் கல்விப் பூங்கா கட்டடத் தொகுதிகள் இன்று திங்கட் கிழமை திறந்துவைக்கப்படவுள்ளன.

'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இந்த மழலைகள் கல்விப் பூங்காவை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைப்பார். (3-117-203)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

நீர்கொழும்பு கடியல பிரதேசத்தில் நேற்றுக் காலை இரு கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

# நல்லூர் பகுதி வீடு ஒன்றில் அம்மன் சிலை நேற்று மீட்பு!



வலி.வடக்கு,மார்ச் 20

நல்லூர் அரச வீதியில் ஆள்கள் அற்ற வீடொன்றில் இருந்து அம்மன் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலையில் அப்பகுதி கிராம அலுவலருக்கு பொதுமக்கள் கொடுத்த தகவலின் பெயரில் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்ற கிராம அலுவலர் உரப் பையில் கட்டப்பட்டு அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த இந்தச்சிலையை மீட்டுள்ளார்.

இந்த விடயம் யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு அறிவிக்கப்பட்டது. அவரின் உத்தரவின் பேரில் அந்த இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலீஸார் சிலையை எடுத்துச்சென்றுள்ளனர். அத்துடன் செப்புத்தகடுகள் சிலவற்றையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக நல்லூர், திருநெல்வேலிப் பகுதியில் உள்ள பல கோயில்களில் திருட்டுக்கள் இடம்பெற்றதுடன் விக்கிரகங்களும் களவுபோயிருந்தன. (3-86)

# கல்வியியற் கல்லூரியில் ஆங்கில பாடநெறிக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில பாடத்துறைக்கு 30 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன. தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு-

எஸ்.றஜிகலா - உசன், மிருசுவில், ரி.பொன்னம்பலநாதன் - கரவெட்டி, பி.சுமன் - யாழ்ப்பாணம், கே.கார்த்திகா - யாழ்ப்பாணம், ரி.சோபா - வவுனியா, எஸ்.அரியரட்ணம் - புதுக்குடியிருப்பு, வி.ஜெனாத்தனி - வவுனியா, ஏ.எவ்.சுகந்தி - கிளிநொச்சி, சி.எஸ்.மனோராஜன் - யாழ்ப்பாணம், ரி.சோபியா - யாழ்ப்பாணம், ஈ.எட்வார்ட் - சுண்டிக்குளி, ஜே.ஆர்.ரவீந்திரகுமார் - உரும்பிராய், பி.இந்துரை - சாவகச்சேரி, ஏ.தர்சன் - பருத்தித்துறை, ஜே.சிந்துரை - யாழ்ப்பாணம், பி.நிசானி - மானிப்பாய், எஸ்.நளினி - ஆனைக்கோட்டை, எவ்.பிரசாத் -யாழ்ப்பாணம், ஜி.விஜயதர்சினி - சண்டிலிப்பாய், என்.பிரசாந்தன் - நீர்வேலி, என்.அருள்வாணி - சங்கானை, ஜே.ஜெயப்பிரியா - உரும்பிராய், பி.றூபா - சாவகச்சேரி, கே.கபிலா - வவுனியா, எஸ்.லாவன்யா - வட்டுக்கோட்டை, என்.கல்பனா - வவுனியா, சி.நிசாந்தி - யாழ்ப்பாணம், எஸ்.சுவதிகா - வட்டுக்கோட்டை, கே.தேவதர்சிகா - காரைதீவு, வினோதா - காரைதீவு. (3)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் லீக் முறையிலான ஆண், பெண் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழகக் கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் புங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணி - பெண்கள் பிரிவு - பட்டபிளை வி.க.எதிர் உடுவில் வி.க.
* பிற்பகல் 4.30 மணி - ஆண்கள் பிரிவு - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் ஒல்கோல்ஸ் வி.க. (3-190)

# இங்கிலாந்து 400 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா 3 விக்கெட்டுகளை இழந்து திணறல்

மும்பை,மார்ச்20

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்டில் 2ஆம் நாள் முடிவில் இந்தியா 3 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. முன்னதாக இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்களைக் குவித்தது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 273 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பிளின்டொவ் 17 ஓட்டங்களுடனும் கொலிங் வூட் 11 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள்.

இந்த ஜோடி அடித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் இங்கிலாந்து அணி 101 ஆவது ஓவரில் 300 ஓட்டங்களைக் கடந்தது. ஸ்கோர் 326 ஆக இருந்தபோது கொலிங்வூட் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை ஸ்ரீசந்த் கைப்பற்றினார். கொலிங்வூட் 104 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து காயம் காரணமாக நேற்றைய ஆட்டத்தின் பாதியிலேயே வெளியேறிய ஷா களம் இறங்கினார். சிறிது நேரத்தில் பிளின்டொவ் அரைச் சதம் அடித்தார். அவர் 81 பந்துகளில் 3 சிக்ஸர் மற்றும் 6 பவுண்டரிகளுடன் அரைச் சதத்தை நிறைவுசெய்தார். இது அவருக்கு 21 ஆவது அரைச் சதமாகும்.

அரைச் சதம் அடித்த சிறிது நேரத்திலேயே கும்ப்ளே வீசிய பந்தில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து பிளின்டொவ் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 328 ஆக இருந்தது. 6 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ஜோன்ஸ் களமிறங்கினார்.

அவர் வந்த வேகத்திலேயே ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் பவிலியன் திரும்பினார். அவரது விக்கெட்டை ஸ்ரீசந்த் வீழ்த்தினார். 7 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக உதால், ஷாவுடன் இணைந்தார். மதிய உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்பிற்கு 345 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷா 55 ஓட்டங்களுடனும், உதால் 8 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்கு பிறகு இங்கிலாந்து தொடர்ந்து விளையாடியது. அந்த அணி வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களை எடுத்தனர்.

356 ஓட்டங்கள் இருந்தபோது உதால் 9 ஓட்டங்கள் பெற்ற நிலையில் பட்டேலின் பந்தில்

(15ஆம் பக்கம் பார்க்க)

# 4 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் வென்றது

கொழும்பு,மார்ச்20

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற 2ஆவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் முதலாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில் 1:0 என்ற ஆட்டக் கணக்கில் பாகிஸ்தான் முன்னிலையில் நிற்கிறது.

பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்திய இந்தப் போட்டியில் துடுப்பாட்ட வீரர்களால் இலகுவாக ஓட்டங்களைக் குவிக்கமுடியாமல் போனது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

டில்ஷான் திறமையாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த நிலையில் 132 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 44.4 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (3-13)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222

# பேரினவாதிகளுக்குத் தமிழினம் நன்றி கூறக் கடமைப்பட்டது

இவ்வளவு பட்டறிவுப் பாடத்தின் பின்னரும் தென்னிலங்கை திருந்துவதாக இல்லை. கடும்போக்குப் பேரினவாதத்திலிருந்து தன்னை விடுவித்துத் திருந்தும் எண்ணம் அதற்கு கிடையவே கிடையாது போலும்.

சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் ஒட்டுமொத்த வடிவமாக இருக்கும் அரசியல் கட்சிகளில் - பௌத்த தர்மத்தின் பேரில், பஞ்சசீலத்துக்கு எதிரான போக்கில் இனவாதம் கக்கும் - ஜாதிக ஹெலஉறுமய முக்கியமானது.

பௌத்த தர்மம் போதிக்கின்ற அடிப்படைக் கோட்பாடுகளுக்கே முரணான வகையில், அடுத்த இனத்தை அடக்கி, ஒடுக்கும் கொடூரப் போக்குக் கொள்கையை ஓங்கி ஒலிக்கும் இக்கட்சிதான் இலங்கையின் பௌத்த துறவிகளை மையமாகக் கொண்டு இயங்குவது.

அதன் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க ஆங்கில ஏடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இனவாத நஞ்சைக் கக்கியிருக்கின்றார் - அது தனது இனத்துக்கே தான் விதைக்கும் வினை என்று அறியாமல்!

''கொழும்பில் சிங்களச் சமூகத்துக்கு மத்தியில் தங்கியிருந்துகொண்டு'' பேச்சுகளில் விட்டுக்கொடுப்பு இல்லை என்றால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் 40 ஆயிரம் துருப்புகளைச் சடலமாக ஏற்கச் சிங்களவர்கள் தயாராக வேண்டியிருக்கும்' - என்று மனோகணேசன் கூறுகின்றார். அப்படியானால், கொழும்பில் வாழும் நான்கு லட்சம் தமிழர்களின் சடலங்களை ஏற்க கிளிநொச்சி தயாராக இருக்கவேண்டும் என அவர் கூறவேண்டியிருக்கும்'' - இப்படி எச்சரித்திருக்கின்றார் சம்பிக்க ரணவக்க.

யுத்தத்துக்கெனப் புறப்பட்ட துருப்பினர் கொல்லப்பட்டால் பதிலுக்குப் பத்து மடங்கு அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவார்கள் என்று எச்சரிக்கின்றார் தென்னிலங்கையின் சிங்களப் பேரினவாதி.

''நாற்பதாயிரம் அரச துருப்புக்கள் கொல்லப்பட்டால் எண்பதாயிரம் புலிகளைக் கொல்வோம்'' - என்றோ அல்லது ''புலிகள் இயக்கத்தையே கூண்டோடு நிர்மூலம் செய்வோம்'' என்றோ அவர் சூளுரைத்திருந்தால் அது வேறு விடயம்.

அதை விடுத்து யுத்தம் புரியச் சென்ற துருப்புக்களின் உயிர் பாதுகாப்புக்கு சிங்கள மக்கள் மத்தியில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின் உயிரையும் உடைமையையும் கூண்டோடு பணயம் வைக்கும் தென்னிலங்கையின் கேவலம் மிக்க அடிநாதச் சிந்தனையை அப்படியே அம்பலப்படுத்தி வெளிப்படுத்துகின்றார் அவர்.

தமிழ்மக்களின் உரிமைக்கான நியாயக்குரலுக்கு நீதியான பதிலைத் தரமுடியாத சிங்களம், இதேபோக்கில்தான் 1977 இல் ஆவணி அமளியை, 1983 இல் ஆடிக்கலவரத்தை, தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது.

அதற்கு விலையாகத்தான் இவ்வளவு உயிர், உடைமை இழப்புக்களையும் நாசங்களையும் இலங்கைத் தீவு இன்னும் செலுத்திக்கொண்டிருக்கின்றது என்ற அடிப்படை 'ஞானம்' சிங்களத்துக்கு இன்னும் உறைக்கவில்லைப்போலும். அதனால்தான் இந்த பீற்றல் இன்னும் குறையாமல் தொடர்கின்றது.

ஒரு சில 'டசின்' உறுப்பினர்களோடு இருந்த தமிழர்களின் உரிமைக்கான சிறிய இயக்கங்களை ஓரினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கான பெரும் இராணுவ - அரசியல் சக்தியாக விஸ்வரூபம் எடுக்கவைத்ததில் 1983 கலவரத்துக்குப் பெரும் பங்குண்டு.

விடுதலை இயக்கங்களை வீச்சாகப் பரிணமித்து விரிவடையவைத்ததே இந்தக் கலவரங்கள்தாம்.

இந்த வகையிலும் - தங்களின் விடுதலைப் போராட்டத்தை உந்தி, ஊக்குவித்து, உயர்வடையச் செய்ததில் சிறப்புப் பங்களித்தமைக்காக - 1983 ஆடிக் கலவரத்தின் சிற்பிகளாகவும், வழிகாட்டிகளாகவும் இயக்குநர்களாகவும், பிதாமகர்களாகவும் இருந்த தென்னிலங்கையின் பேரினவாதத் தலைவர்களுக்குத் தமிழினம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் போராட்டத்தின் பாய்ச்சலான உயர்ச்சிக்கு 83 கலவரம் உதவியது போல, அந்த விடுதலைப் போராட்டம் அதன் இறுதி இலக்கை அடைவதற்கான திசையில் அதை உந்திவிடும் முயற்சிகளுக்கு உதவ சம்பிக்க ரணவக்க போன்றோர் முன்வந்திருக்கின்றனர் என்றே கருதவேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்த்திற்கு எதிரான தங்களின் போரியல் நடவடிக்கைகளில் தங்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்காக தென்னிலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கு மத்தியில் வாழும் தமிழர்களைப் பணயம் வைத்து அழிப்பதற்குச் சிங்களம் முயலுமானால் - அதன் வடிவமாக இன்னொரு கலவரம் வெடிக்குமானால் -

அது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அதன் இறுதி இலக்கை நோக்கிய திசையில் ஒரேயடியாகத் நெட்டித் தள்ளிவிடும் என்பது நிச்சயம்.

சுருக்கமாக - நேரடியாக - விடயத்தைக் கூறுவதானால் -

சம்பிக்க ரணவக்க எச்சரித்தமை போன்ற நிகழ்வு இடம் பெறுமானால் கேள்விக்கு இடமின்றி தமிழர் தாயகத்தில் ஒரு தனி அரசு அமைவதை உறுதிப்படுத்தும் நிலைக்கும் அது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்நகர்த்தி விடும் என்பது நிச்சயம்.

பேரினவாத விஷத்தை இப்படிக் கக்குவதன் மூலம் தமிழர்களின் விடுதலை வேட்கையை மேலும் தீவிரப்படுத்த வழிசெய்கிறார் அவர்.

பேரினவாதக் காட்டுக் கூச்சல் கிளப்பி, இனவாதக் கருத்துக்களை விதைத்து, அதன் மூலம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தி ஊக்குவிக்கும் தென்னிலங்கை இனவாதிகளுக்கு இந்தக் காரணங்களுக்காக தமிழினம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது.



முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கை நெறியில் ஆரம்ப நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: தமிழினியன்)

# முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கை திறந்த பல்கலையில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலமான முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் திறந்த பல்கலைக்கழகத்தில் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற்றது.

பிராந்திய இயக்குநர் எஸ்.ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்மொழி மூலமான முன்பள்ளி கல்விச் சான்றிதழ் திட்ட கற்கை நெறியின் இணைப்பாளரும் விரிவுரையாளருமாகிய திருமதி கு.விஜயரகுநாதன், விரிவுரையாளர்களான செல்வி தயாளினி நடேசு, கணேசன் கிரிதரன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி பயிற்சிநெறியினை ஆரம்பித்து வைத்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள், பயிற்சி மாணவர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-190)

# அழகெழல் போட்டிகள் 24 ஆம் திகதி முதல் நடக்கும்

அச்சுவேலி, மார்ச்20

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் நுண்கலைத் துறையினால் நடத்தப்படும். அழகெழல் போட்டிகள் இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மாணவர் மத்தியில் அழகியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'அழகெழல் - 2006' போட்டிகளில் இசை, நடனம், சித்திரம், நாடகம் ஆகிய துறைகளில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

(எ-11)

# சமாதானத்துக்கான யுத்தம் திணிக்கப்படுவதை தவிர்க்க தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்காக வாக்களிப்போம்!

## கஜேந்திரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்20

மீண்டும் ஒரு சமாதானத்திற்கான யுத்தம் அரசினால் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படுவதைத் தடுப்பதற்கும்-

எமது விடுதலைப்போராட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுதற்கும் ஏதுவாக தமிழ்த் தேசியத்துக்காக வாக்களிப்போம்.

-இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

எதிர்வரும் 30ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்றும்-

தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய நாம் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரியிருந்தோம். ஆனால், எமது கருத்துக்கு மதிப்பளிக்காமல் வடக்கு -கிழக்கு பகுதிகளிலும் தேர்தலை நடத்துவதற்கான மறைமுகமான சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜெனீவாப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவில்லை, அவசரகாலச் சட்டம் நீக்கப்படவில்லை, சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடுகள் நிறுத்தப்படவில்லை. இந்த நிலையில் மக்கள் சுயமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவோ தமது வாக்குரிமைகளை சுதந்திரமாக பயன்படுத்தவோ முடியாதநிலை காணப்படுகின்றது.

எனவே,

✱மீண்டும் ஒரு சமாதானத்திற்கான யுத்தம் அரசினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதனை தடுப்பதற்கும்-

✱இராணுவத்தினரையும் துணை ஆயுதக்குழுக்களையும் எம் மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கும்-

✱எமது விடுதலைப் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தினை பெறுவதற்கும்-

✱மீண்டும் ஒரு தடவை தமிழரின் அரசியல் பலத்தினை சர்வதேசத்திற்கு நிரூபிப்பதற்கும் -

அற்பசொற்ப சலுகைகளுக்கு விலைபோகாது தமிழ்த் தேசியத்துக்காக வாக்களிப்போம் - என்றுள்ளது.

(எ-222)

**உதயவாக்கு**

எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்.
- ஓர் அறிஞர்

**நாளை**

பங்குனி 07
செவ்வாய்க்கிழமை
21.03.2006
திதி : சஷ்டி
முற்பகல் 10.08
நட்சத்திரம் : அனுஷம்
காலை 06.42
சுபநேரம் : 10.47-12.17
ராகுகாலம் :03.17-04.47
(யாவும் பழைய நேரப்படி)

# மணற்காட்டில் வீடமைப்பு பணிகள் இடைநிறுத்தம்

கரவெட்டி, மார்ச்20

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மணற்காட்டில் அமைக்கப்பட்டுவந்த வீட்டுப் பணிகள் உரிய நிதி கிடைக்காமையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என மக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்களுக்கான வீடுகளை அமைக்கவென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச நிதியிலிருந்து ஒருதொகை நிதியை ஒதுக்கியிருந்தார். அந்த நிதியைப் பயன்படுத்தி மணற்காட்டில் 42 வீடுகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வீடமைக்கும் பணிக்கான முதலாவது கட்டக் கொடுப்பனவு சகல பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டக் கொடுப்பனவு 20 பேருக்கு மட்டும் வழங்கப்பட்டது. ஏனையோருக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவும், சகலருக்குமான மூன்றாம் கட்டக் கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால், வீடமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பயனாளிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் கே. கணேஷிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-70-202)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு வாடகைக்கு

ஆலடிச்சந்தி, 6ஆம் ஒழுங்கை பலாலி றோட்டில் உள்ள சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.:2226769 (48312)

### வாடகைக்கு

வேம்படிச் சந்தி, முதலாம் குறுக்குத் தெரு, இல . 175 இல்அமைந்த மேல்மாடி வீடு 9 அறைகளுடன் 2கோல் (A/C) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்குகந்தது. தொடர்பு: க.கோபால், T.P. : 077636 6020, 021 4591885. (48152)

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 50m முன்பாக உள்ள ஜன சக்தி காப்புறுதி நிறுவனம் இயங்கும் கட்டடத்தொகுதியில் உள்ள இல.1 கடை (32 அடி நீளம் 11அடி அகலம்) முற்பணத்துடன் / முற்பணம் இல்லாமல் வாடகைக்குண்டு. தொடர்பு:-T.P. 077 3039422. (48131)

6 C, உப்புமடம் சந்தி, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நகைக் கடைக்கான கடை ஒன்று அலுமினிய பிற்றிங் அடித்தபடியே கடை வாடகைக்கும். பிற்றிங் விற்பனைக்கும் உண்டு. தொடர்பு: கு.வசந்தகுமார், 94/1, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் T.P.:0712522882, 0776158705(48321)

### தவறிவிட்டது

பூபாலரத்தினம் ஜெயகணேஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை K.K.S. வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 403, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.(48318)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு:- நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (48148)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை நடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம்-வட்டுக்கோட்டை, கரன்-ஆலடி உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48229)

### மணமகள் தேவை

யாழ், இந்து, 1977, திருவாதிரை நட்சத்திரம், சிங்கப்பூரில் எஞ்சினியராகத் தொழில் புரியும் யாழ். வரவுள்ள மணமகனுக்குப் பொருத்தமான, பண்பான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டு மணமகளும் விரும்பத்தக்கது. தொடர்பு: Email: jaffna06@yahoo.com T.P.: 006591482491, 0776176476 (48209)

### HOUSE FOR RENT

FULLY TILED A HOUSE LOCATED NO 27, OPPOSITE OF BOSSCO SCHOOL, WITH 4 BED ROOMS, 3 HALLS, 3 ATTACHED BATH - ROOMS AVAILABLE FOR RENT. SUITABLE FOR N.G.O.s CONTACT PHONE NO 0015 1974 24163 (CANADA) Email: mkandiah @ hotmail.com. (48206)

### விற்பனைக்கு

Pentium II கணனிகள் 17'' மொனிட்டருடன் 6மாத உத்தரவாதத்துடன் உண்டு. *(18,750/-)* Sky, 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம் *(யாழ்.கச்சேரிக்கு அருகில்).* T.P.: 222- 9109 கணனிசார் அனைத்து உதிரிப்பாகங்களும் உண்டு. அத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். (சி/48207)(32.26.19.11)

## ஊர்காவற்றுறையில் வீதி திருத்தப்பணிகள்

ஊர்காவற்றுறை,மார்ச்20

'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை ஞானவைரவர் ஆலய வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வீதித் திருத்தப் பணிகளுக்கென 11 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பிரதேசசபை மூலம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)


திருப்புல் இல. 1694

18.03.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

**11 40 58 68 (06)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300971450 இலிருந்து 300987581

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 2,30,41,050/-வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 2,30,41,050/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | [illegible] |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 28 | 5,000/- | 1,40,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 432 | 1,000/- | 4,32,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,369 | 500/- | 6,84,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,986 | 40/- | 8,38,840/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,721 | 20/- | 3,94,420/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,97,833 | 10/- | 29,78,330/- |
| மொத்தம் | | | 74,67,890/- |
| [illegible] | 5 | 1,00,000/- | 8,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,40,358 | | 80,67,890/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 2,38,36,350/-

| | |
|---|---|
| [illegible] | 300975049-8-98 |
| [illegible] | 300982243-4-48 |
| [illegible] | 300983982-6-64 |
| [illegible] | 300977548-1-61 |
| [illegible] | 300986274-7-72 |

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள் 764

மேடம் சிவப்பு

17-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5072912-5087267

வெற்றி இலக்கங்கள் **18 22 41 45**

ஜக்பொட் பரிசு ரூபா 5106,950/-வெல்லப்பட்டுள்ளது

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 1,20,78,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,15,330 | 10/- | 31,53,300/- |
| 2 இலக்கங்கள் | 28,866 | 20/- | 5,77,320/- |
| 1 இல+லக்கினம் | 28,726 | 30/- | 8,61,780/- |
| 2 இல+லக்கினம் | 2,687 | 100/- | 2,68,700/- |
| 3 இலக்கங்கள் | 780 | 500/- | 3,90,000/- |
| 3 இல+லக்கினம் | 74 | 5,000/- | 3,70,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 51,06,950/- | 51,06,950/- |
| மொத்தம் | | | 1,10,26,050/- |
| [illegible] | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,78,452 | | 1,20,78,300/- |

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 10,00,000/-

| | |
|---|---|
| காலி | 5078596-2-45 |
| அநுராதபுரம் | 5079553-3-95 |
| புத்தளம் | 5087034-7-95 |
| கொழும்பு | 5066224-0-51 |
| நுவரெலியா | 5074357-3-12 |

அபிவிருத்தி லொத்தர் சபை


## மரண அறிவித்தல்



### திருமதி செல்லத்துரை பாக்கியம்

கோண்டாவில் வடக்கு, குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பாக்கியம் (17-03-2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்புக் கணவரும் குமாரசாமி (கலைப்பீடாதிபதி, அலுவலகம் யாழ்.பல்கலைக்கழகம்), புஸ்பராணி, வசந்தா, நாகேந்திரம், மகேந்திரம் (கனடா), சந்திரதேவி, சறோஜினிதேவி, பவானி, காலஞ்சென்ற விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம் , அற்புதராசா, தங்கராசா, தம்பிமுத்து, வரதராசா, சிவராணி, விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20-03-2006) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தில்லையம்பதி, கோண்டாவில்.* (48335)(26.11.19) தகவல்: பேரப்பிள்ளைகள்.

## மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணம்

ஊர்காவற்றுறை,மார்ச்20

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபதில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்திரு.எஸ். யேசுதாசன் அடிகளார், ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன்கோயில் பிரதம குரு சிவஸ்ரீ க.சந்திரகாந்தக் குருக்கள் மற்றும் கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-16)

## கண்ணீர் அஞ்சலி



19-03-2006 ஞாயிற்றுக்கிழமை காலமான

திருமதி **செல்லக்கண்டு சந்திரோதயம்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் உறுவதோடு, அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதான வீதி, அச்சுவேலி. (சி/48441) (26.11.19) **சியான் ரேடர்ஸ் குடும்பம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 - 03 - 1973



மறைவு 18 - 02 - 2006

### திருமதி கிருஸ்ணகுமார் யமுனா

நாள்கள் முப்பத்தொன்று சென்றும்
ஆறவில்லை உன் துயரம்
பாதி வாழ்வில் எங்களை பரிதவிக்கவிட்டு
பறந்து சென்றதேனோ?

கொக்குவில் மேற்கு, கொக்குவில் (48329) (26.11.19) உங்கள் பிரிவால் துயருறும்: கு.ரதி (மச்சாள் )

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*தாய் மடியில் 28.10.1938*

*ஆண்டவன் அடியில் 31.03.2005*

### அமரர் செல்லையா மாணிக்கம்

*(உரிமையாளர்: ஆனந்தா ஸ்ரோர்ஸ், நெல்லியடி)*

திதி: பங்குனிமாத அபரபக்க சஷ்டி

புவி வாழ்வோர் போற்ற பாரினிலே வாழ்துதித்தீர்
வாழ்க்கை என்ற சொல்லிற்கு அர்த்தம் கொடுத்தீர்
வாழ்க்கை இதுவே என்று வாழ்ந்து காட்டினீர்
மனைவி, மக்கள், சுற்றம், சூழல் என்று
இனிமையாக இருந்தபோது பொறுக்காத யமன்
உன் உயிர் எடுத்து ஓராண்டுகள் சென்றும்
எம் கண்ணீர் ஆறுகள் வற்றவில்லை
நீண்ட பேரின்பப் பெரு வாழ்வு பெற்று
வானோருடன் வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொல்லந்தோட்டம், பொன் கந்தையா வீதி, நெல்லியடி. (48337) (39.26.11.19) **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# தமிழகத் தேர்தல் வரலாற்றில் வீசிய 'அலை'களும்... வீசாத 'அலை' களும்...



தமிழகத்தில் கடந்த காலங்களில் தேர்தல்கள் நடைபெற்றபோது ஒரு கட்சிக்கோ, ஒரு கூட்டணிக்கோ ஆதரவாக பல நேரங்களில் அலை வீசியது உண்டு.

சில நேரங்களில் எத்தகைய 'அலை'யும் வீசாமல் தேர்தல்கள் நடந்ததும் உண்டு.

அப்படி அலை வீசிய தேர்தல்களையும் அலை வீசாத தேர்தல்களையும் இங்கே நினைவு கூரலாம்.

**முதல் தேர்தலிலேயே காங்கிரஸ் எதிர்ப்பு அலை...**

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1952 பெப்ரவரியில் நடைபெற்ற முதலாவது சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலே காங்கிரஸுக்குப் பெரும் சோதனையாக அமைந்தது.

எதிர்க்கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஓரணியாகத் திரண்டு காங்கிரஸை எதிர்த்தன.

அன்றைய ஒருங்கிணைந்த சென்னை ராஜதானியில் இருந்த 375 தொகுதிகளில் 360இல் காங்கிரஸ் போட்டியிட்டது. 150 இடங்களில் மட்டுமே காங்கிரஸ் வென்றது. அதுவரை முதல்வராக இருந்த குமாரசாமி ராஜா உட்பட காங்கிரஸின் முக்கிய பிரமுகர்கள் தோற்றனர்.

காங்கிரஸை விட அதிக இடங்களில் வென்ற எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து ஆட்சியை அமைக்க முற்பட்டன.

ஆனால், மாணிக்கவேலரின் 'காமன் வீல்' கட்சியைச் சேர்ந்த 9பேர் உட்பட்டோரின் ஆதரவுடன் காங்கிரஸ் ஆட்சியை ராஜாஜி அமைத்தார்.

**ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய அலை**

தமிழகத்தில் மிகப் பெரிய திருப்புமுனையை - ஆட்சி மாற்றத்தை - 1967 சட்டப் பேரவைத் தேர்தல் ஏற்படுத்தியது.

அரிசி விலை உயர்வு, 1965 இல் இந்தித்திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஏராளமானோர் பலியான சம்பவம் காரணமாக காங்கிரஸுக்கு மாநிலம் முழுவதும் எதிர்ப்பு அலை வீசியது.



இந்நிலையில், 12.01.1967 இல் எம்.ஜி.ஆர். துப்பாக்கியால் சுடப்பட்டார். குண்டு பாய்ந்த கழுத்தில் கட்டுடன் கை கூப்பிய நிலையில் எம்.ஜி.ஆர். காட்சி தரும் சுவரொட்டிகள் அத்தேர்தலின்போது மாநிலம் முழுவதும் ஒட்டப்பட்டன.

மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 138 தொகுதிகளில் தி.மு.க வென்றது. அன்றைய பரங்கிமலைத் தொகுதியில் தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் எம்.ஜி.ஆர். வென்றார்.

233 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 49 இடங்களில் மட்டுமே வென்றது. காமராஜர் தமது சொந்த ஊரான விருதுநகரிலேயே தோற்றார்.

அன்று தொடங்கி, இன்றுவரை தமிழகத்தில் திராவிட இயக்க ஆட்சியே நடைபெற்று வருகிறது.

**வலுவான அணியை தோற்கடித்த அலை**

1972இல் தொடங்கப்பட்ட அ.தி.மு.க. ஆறே மாதங்களில் திண்டுக்கல் மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் மகத்தான வெற்றிபெற்றது. தமிழக மக்களிடையே எம்.ஜி.ஆருக்கு இருந்த செல்வாக்கைக் கண்டு தமிழகம் மட்டுமன்றி, அகில இந்தியாவே வியந்தது.

எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக வீசிய அலை 1977 தேர்தலின் போதும் தொடர்ந்தது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. 1980 மக்களவைத் தேர்தலில் ஜனதாவுடன் கூட்டு வைத்த அ.தி.மு.க.தமிழகத்தில் படுதோல்வியைத் தழுவியது. இதையடுத்து அ.தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. 1980 மே மாதத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றது.



நான் என்ன தவறு செய்தேன்? எதற்காக என் ஆட்சியை மத்திய அரசு கலைத்தது? என மாநிலத்தின் பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் சென்று எம்.ஜி.ஆர். கேட்டு பிரசாரம் செய்தார். ஆட்சி கலைக்கப்பட்டதால் எம்.ஜி.ஆர். மீது எழுந்த அனுதாப அலையானது அத்தேர்தலில் வலுவான அணியாகக் காட்சி அளித்த தி.மு.க. - காங்கிஸ் கூட்டணியைத் தோற்கடித்தது. எம்.ஜி.ஆர். மீண்டும் முதல்வர் ஆனார்.



**சுனாமியாக வீசிய அனுதாப அலைகள்**

1967 சட்டப் பேரவைத் தேர்தலைப் போலவே 1984, 1991ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப் பேரவை - மக்களவைத் தேர்தலிகளில் அனுதாப அலை வீசியது. இந்த அனுதாப அலையை எதிர்க்கட்சிகளை வாரிச் சுருட்டிச் சென்ற 'சுனாமி' என வர்ணிக்கலாம்.

1984 இல் எம்.ஜி.ஆர். உடல் நலமின்றி அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தார். டில்லியில் இந்திரா காந்தி தனது மெய்க்காவலர்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். எம்.ஜி.ஆர்., இந்திரா ஆகியோர் மீதான அனுதாப அலை ஆவேசமாக வீசியது. அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது.

அதேபோல 1991 இல் ஸ்ரீபெரும் புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதால் எழுந்த அனுதாப அலை தமிழகத்தில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தது. தேர்தலின்போது துறைமுகம் தொகுதியிலும், பிறகு எழும்பூர் தொகுதியிலுமாக மொத்தம் இரண்டே தொகுதிகளில் தி.மு.க. வென்றது.

இதேபோல 1996 இல் அ.தி.மு.க. அரசுக்கு எதிராக வீசிய அலை காரணமாக தி.மு.க. - த். மா.கா. கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அத்தேர்தலில் அ.தி.மு.க. 4 இடங்களில் மட்டுமே வென்றது.

1989,2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல்களின்போது 'அலை' ஏதும் வீசவில்லை.

- பா.ஜெகதீஸன்.

(நன்றி: தினமணி)



சேர்பியாவில் முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் சொலபொடான் மிலோசெவிக்கின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட சனத்திரள்.

# மிலோசெவிக்கின் சடலம் சொந்தமயானத்தில் அடக்கம்

பெல்கிரேட்,மார்ச்20

யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் சொலபொன் மிலோசெவிக்கின் பூதவுடல் சேர்வியாவிலுள்ள அவரது சொந்த நகரிலுள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

போர்க் குற்றங்களுக்காக ஹேக் நீதிமன்றத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த மிலோசெவிக் சிறை அறை ஒன்றில் கடந்தவாரம் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

சேர்பிய அரசு அவருக்கு அரச மரியாதை வழங்க மறுத்துவிட்டது. அதனால் சாதாரண முறையிலேயே அவரது அடக்கம் நடைபெற்றது.

மிலோசெவிக்கின் குடும்ப வீட்டின் பின்னணியில் ஒரு மரத்தின்கீழ் அமைந்த குழியில் சடலம் வைக்கப்பட்ட பேழை இறக்கப்பட்டது. சவக்குழி இரட்டையாக அமைக்கப்பட்டுள்ளது. அவரது விதவை மனைவி இறந்தபின் பக்கத்திலுள்ள குழியில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று விரும்புகிறார்.

அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பூதவுடல் சமஷ்டி நாடாளுமன்றத்துக்கு வெளியில் அவரது ஆதரவாளர்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது. (ப)

# குண்டு வெடிக்கச் செய்யும் கருவியுடன் பிரதமர் அலுவலகத்தில் ஒருவர் கைது!

புதுடில்லி,மார்ச் 20

குண்டு வெடிக்கச் செய்யும் கருவியுடன் பிரதமர் மன்மோகன் சிங்கின் அலுவலகத்திற்குச் சென்றவர் கைது செய்யப்பட்டார்.

டில்லியில் பிரதமர் அலுவலகம் அமைந்துள்ள சௌவுத் பிளாக் வளாகத்தின் 5 ஆம் எண் வாயிலுக்கு வெள்ளிக்கிழமை மாலை பீகாரைச் சேர்ந்த அசோக்குமார் சென்றார். அவர் கையில் குண்டு வெடிக்கச் செய்யும் கருவி (டெட்டனேட்டர்) வைத்திருந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதையடுத்து சிறப்புக் காவல் படையினர் அவரைப் பிடித்து விசாரணை நடத்தினர்.

அவர் பீகார் மாநிலம் ரோடாஸ் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

குண்டு வெடிப்புக்கு முயன்றதாக குற்றம் சாட்டி அசோக் குமாரை டில்லி பொலீஸார் கைது செய்தனர்.

தனது சகோதரர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் மறு விசாரணை நடத்தக் கோரி, நாட்டின் உயர் தலைவர்களுக்கு மனு அனுப்பி இருப்பதாகவும், அந்தக் கொலைக் குற்றவாளிகள் தன்னையும் கொல்லும் நோக்கில் தனது வீட்டில் குண்டு வெடிக்கச் செய்யும் கருவியை வைத்துச் சென்றுள்ளதாகவும் அசோக்குமார் விசாரணையில் தெரிவித்தாகக் கூறப்பட்டது. (ஐ)

# ஆப்கானிஸ்தானில் முன்னாள் ஆளுநர் சுட்டுக்கொலை

பக்தாத்,மார்ச் 20

ஆப்கானிஸ்தானின் காஸ்னி மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் தற்போதைய அரசாங்கத்தின் செல்வாக்குமிக்க பிரமுகருமான முல்லா தாஜ் மொகம்மத், தலிபான்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காரி மாமா என்றழைக்கப்படும் அவர் காரில் சென்று கொண்டிருக்கையில் அந்த மாவட்டத்தில் அவரது வீட்டுக்கருகில் தலிபான்களால் ஒளித்திருந்து சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடனிருந்த வேறு மூவரும் கொல்லப்பட்டனர்.

எண்பதுகளில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட்ட படைகளின் போராளிகள் குழுவுக்கு தலைமை வகித்தவர்களில் ஒருவர் இவர். பிற்காலத்தில் தலிபான்களுக்கு எதிராகவும் செயற்பட்டவர். (ப)

# ஐந்துவருட சிறைவாசத்தின் பின் ஈரானிய பத்திரிகையாளர் விடுதலை

லண்டன்,மார்ச் 20

ஈரானில் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச எதிர்ப்பாளரான பத்திரிகையாளர் அக்பர் கஞ்சி என்பவர் 5 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஈரானிய சீர்திருத்தவாதிகளின் வீரனாகக் கருதப்பட்டவர். 2001 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராகவும் எதிர்ப்பாளர்களின் கொலைகளுக்கு சிரேஷ்ட அதிகாரிகள் காரணமாக இருந்தாகவும் எழுதியமைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.

காவலில் இருந்த காலத்தில் தாம் தாக்கப்பட்டதாகவும் அதை வெளியிடக்கூடாதென எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சிறையில் இருந்த காலத்தில் பல தடவைகள் கஞ்சி உண்ணாவிரதம் இருந்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (ப)



தமிழ்நாட்டில் சேலத்தில் 20இற்கும் மேற்பட்ட கோழிகள் திடீரென இறந்ததால், பறவைக்காய்ச்சல் பரவியிருக்குமோ என பீதி மக்கள் மத்தியில் ஏற்பட்டது. திடீரென இறந்த கோழிகளுடன் கோழி வளர்ப்பில் ஈடுபட்ட பெண்களைப் படத்தில் காணலாம்.

# தென்மராட்சியில் 5 பாடசாலைகளில் முறைசாராக் கல்வி பயிற்சிநெறிகள்

தென்மராட்சி,மார்ச்20

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் நிலையங்களில் இந்த வருடத்திற்குரிய முறைசாராக் கல்வி பயிற்சிநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிகளில் பங்குபற்றவுள்ள பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் உரிய விண்ணப்பப்படிவத்தினை பயிற்சி நடைபெறும் பாடசாலைகளில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

கணனி மென்பொருள் பயிற்சிநெறிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றிலும் -

கணனி மென்பொருள் பயிற்சி நெறி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் தையல் பயிற்சி நெறிகள் வரணி மகா வித்தியாலயத்திலும் -

சிகை அலங்காரம், கேக் ஐசிங் பயிற்சி நெறிகள் கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்திலும் -

பேச்சு மூல ஆங்கில பயிற்சி நெறிகொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,மார்ச்20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் அறவழி நிலையத்துக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அறவழி நிலையம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களின் நலன்கருதி கல்வி அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்திவருகின்றது. இந்தத் திட்டத்தில் இணைந்து கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் சென்ற கழக உறுப்பினர்கள், அறவழி நிலையத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், செயலாளர் எம்.கே. ஜீவகதாஸ் ஆகியோரிடம் இவற்றைக் கையளித்தனர். இந்தக் கல்வித் திட்டத்தில் 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26 - 05 - 1944

மறைவு 18 - 02 - 2006

### திருமதி சிவம் மணிவதனம்

அம்மா ஆறாத உமது துயரங்களுடன்
முடிவில்லாத பாதைகளில்
பயணிக்கும் எமக்கு நல் வழிகாட்டுவீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'வைரவி'
இணுவில் மேற்கு.

(சி- 48412)
(54-11-45)

வ.சிவம்
குடும்பத்தினர்.

## 59ஆவது அகவை காணும் சேவையின் மைந்தனை வாழ்த்துகின்றோம்

### திரு. அரியரத்தினம் வைகுந்தநாதன்

(All Ceylon J.P., உள்ளூராட்சி மன்ற Tax Officer)



*வடமராட்சி வேலையுடையா பகுதி, துன்னாலை புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சமூகத் தொண்டனும் அன்பு மனம் கொண்ட, ஆயிரத்தில் ஒருவனாகவும் திகழும் வடமராட்சியின் மைந்தன் திரு. அ. வைகுந்தநாதன் அவர்கள் இன்று (20.03.2006) திங்கட்கிழமை தனது 59ஆவது அகவை காணும் இந்நாளில் அவரையும் அவர் குடும்பத்தினரையும் பல்லாண்டு காலம் இப் பார்தனிலே சீரும் சிறப்புடனும் வாழ வல்லிபுர ஆழ்வாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

சி. கதிரவேற்பிள்ளை
[மாவட்ட வைத்திய அதிகாரி, ஆதாரவைத்தியசாலை D.M.O. மந்திகை]

சி. சிவபாலசிங்கம்
[கிராம சேவகர் J/389, வல்லை வடமத்தி]

(48207)
(54-11-45)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கவாசகர் இரத்தினபூபதியம்மா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி மாணிக்கவாசகர் இரத்தினபூபதியம்மா அவர்கள் (17.03.2006) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் திருமதி இரத்தினசோதி சித்திரஞ்சனி (கனடா) அவர்களின் பாசமிகு தாயும் க.இரத்தினசோதி (கனடா) அவர்களின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி ஐயாத்துரை மற்றும் திருமதி சிவபாக்கியம் தம்பிராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பத்மநாதன் (பழனி) அவர்களின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, பாலகிருஷ்ணன் மற்றும் சின்னராசா ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூதர்மடம், கோப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
**பூதர்மடம்,**
**கோப்பாய்.**

(48328)
(24- 54-11-45)

தகவல்:
***ஸ்ரீதரன் (அப்பன்),***
***சித்திரஞ்சனி (ராசா).***



## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

**(முன்னாள் யாழ். ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள் 17.03.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் பாசமிகு கணவரும் பாஸ்கர் (மகேஸ் கண்ணா -நோர்வே), சுதாகர் (நோர்வே), சுமதி (பிரான்ஸ்), சுகந்தினி (ஆசிரியை - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா (நோர்வே), ரஜனி (நோர்வே) கருண ராஜா (பிரான்ஸ்), மோகனகுமார் (**North sea Limited**) ஆகியோரின் மாமனாரும் மயூரி, யதுஷிகா, சிந்திகா, சோபியா, தனுஷன், டிலுக்ஷன், யதுஷன், சஹானா ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியலக்சுமி, சீதாலக்சுமி, கனகலிங்கம், உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சிவசுந்தரம், தேவராணி, மனோரதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2006) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 47, புங்கன்குளம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(48330)
(54-11-45)

தகவல்:
**கே. மோகன்**
**(மருமகன்)**

## உடற்பயிற்சிப் போட்டிகளில் கொக்குளாய் பாடசாலை முதலிடம்

புதுக்குடியிருப்பு,மார்ச்20

கரைதுறைப்பற்று கோட்டமட்ட உடற பயிற்சிப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் கொக்குளாய் அ.த.க. பாடசாலை அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வுகளில் தமிழீழத் தேசியக் கொடியை கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி மா. அன்ரனி ஜெகநாதன் ஏற்றினார். கோட்டக் கொடியை செம்மலை மகாவித்தியாலய அதிபர் ந. இரங்கநாதன் ஏற்றி வைத்தார்.

போட்டிகளில் 12 பெண்கள் அணிகளும் 10 ஆண்கள் அணிகளும் பங்குபற்றின.

ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் மூன்றாம் இடத்தை வற்றாப்பளை மகாவித்தியாலயமும் பெற்றன.

பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் மூன்றாம் இடத்தைச் செம்மலை மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

(எ-353-202)

## வளர்மதி கிரிக்கெட் சுற்றுப்போட்டி
# ஜொலிஸ்ரார் வி.கவை பல்கலைக்கழகம் வென்றது

வலி.வடக்கு,மார்ச்20

கொக்குவில்வளர்மதி சனசமூக நிலையம் மற்றும் முன்னேற்றக்கழகமும் இணைந்து அமரர்கள் விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்தமாக அமைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும்லீக் முறையிலான மட்டுப்படுத்திய பந்து பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வி.கவும் ஜொலிஸ்ரார் வி.கவும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 9 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனகன் 33,அருண்குமார் 27, கோபிநாத்21 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர்.

ஜெயந்தன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சர்வானந்த் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அருள்ராஜ் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழகஅணி 7 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களைப்பெற்றுவெற்றி பெற்றது.

அருள்ராஜ் 45, கௌரி 29ஓட்டங்களை ஆகக்கூடிய ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர்.

தீபன் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ஜனார்த்தனன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் நாதன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பல்கலைக்கழக அணி 8 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இருக்கும் போது தமது 5, 6, 7 விக்கெட்டுகளை ஓட்டம் பெறாமலே இழந்தமை குறிப்பிடத்தக்கது.

(3-86)

## சிறப்புற நடைபெற்ற விளையாட்டு விழாக்கள்

பரந்தன்,மார்ச் 20

புன்னைநீராவி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த புதன் கிழமை பாடசாலை அதிபர் ஆ.பே. சச்சிதானந்தசுந்தரம் தலைமையில் சிறப்புற நடைபெற்றன.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் ஏற்றினார். விளையாட்டுத் தீபத்தை பாடசாலை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் வா.லோகேஸ்வரன் ஏற்றி விளையாட்டை ஆரம்பித்து வைத்தார்.

கருத்துரைகளை பாடசாலை அதிபர், பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.எஸ். செல்வநாதன்,கண்டாவளைக் கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராசகுலசிங்கம் ஆகியோரும்-

சிறப்புரையை கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசாவும் நிகழ்த்தினர்.

இதேவேளை-

பூநகரி சாமிப்புலம் அ.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகளும் கடந்த 11 ஆம் திகதி பாடசாலை அதிபர் ந.நித்தியானந்தன் தலைமையில் இடம் பெற்றன.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை சாமிப்புலம் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை டாக்டர் பூரணி ஏற்றினார். விளையாட்டுச் சுடரை பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஏற்றினார்.

(எ-352-202)

# யாழ்.கோட்ட வலைப்பந்தாட்டப் போட்டி வேம்படி, திருக்குடும்பம், சுண்டுக்குளி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ்.கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களில் திருக்குடும்ப கன்னியர்மடம், வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியன வெற்றிபெற்று கோட்ட மட்டச் சம்பியனாகின.

வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இறுதியாட்டங்கள் இடம் பெற்றன.

15 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அணியும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணியும் மோதின.

திருக்குடும்ப கன்னியர்மடம் 18:02 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியும் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அணியும் மோதின.

வேம்படி மகளிர் கல்லூரி அணி 9:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியும் திருக்குடும்ப கன்னியர் மட அணியும் மோதின.

வேம்படி மகளிர் கல்லூரி 21: 15 என்ற புள்ளி அடிப்படையில்வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அணியும் மோதின.

சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி 14:02 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் திருக்குடும்ப கன்னியர்மட அணியும் மோதின.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 19:16 என்ற புள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியும் வைத்தீஸ்வராக் கல்லூரி அணியும் மோதின.

வேம்படி மகளிர் கல்லூரி அணி 45: 07 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(3-190)

## எவரெடி கிண்ண முதலாவது ஆட்டம் மன்னார் லீக்குக்கு இலகு வெற்றி

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் எவரெடி வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் -

19 வயதுப் பிரிவினருக்கான - உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் மன்னார் மாவட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட லீக் அணி மோதியது.

மன்னார் மாவட்ட லீக் அணி, எதிர்த்து விளையாடிய யாழ்.மாவட்ட லீக் அணியை 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எம்.பி. பார்சூர், எஸ். கனீயூட், எஸ் அஜித் ஆகியோர் கடமையாற்றினர்.

(3-190)



தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் பாடசாலை அதிபர் வ. பரமேஸ்வரம்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதம விருந்தினராக வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி ரி.பாபு, வலிகாமம் கல்வி வலய இளைப்பாறிய கணித பாட ஆலோசகர் க.நடராசா மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்ட விருந்தினர்களைப்படத்தில் காணலாம்.

(படம்: தொல்புரம் செய்தியாளர்)

# நல்லூர்ப் பிரதேச உதைபந்தாட்டம்: பொற்பதி விளையாட்டுக் கழகம் சம்பியன்

வலி.வடக்கு,மார்ச் 20

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் கொக்குவில் நேதாஜி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடத்தில் நேதாஜி விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து முதல் பாதி ஆட்டம் முடிவடைய முன்னர் பொற்பதி விளையாட்டுக் கழகமும் ஒரு கோலைப் பெற்று முதல்பாதி ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழகம் மேலும் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் நின்றார்கள். ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் மேலதிக கோல்களைப் பெறாமையால் பொற்பதி விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக் கழகத்தை வெற்றிக்கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(எ-86)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் எவரெடி வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் 19 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் பருத்தித்துறை மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ். லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி மோதவுள்ளது. (எ-190)

# நல்லூர்ப் பிரதேச கரபந்தாட்டம் அரியாலை ஐ.வி.சம்பியனானது

வலி.வடக்கு,மார்ச் 20


நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் நல்லூர் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 25:20, 25:16 என்ற புள்ளிகள் கணக்கில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.கதீஸ் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பபட்டார்.

(3-86)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் க. நந்தகுமாரன் உரையாற்றுவதையும், கயிறு இழுத்தல் போட்டியில் மாணவர்கள் பங்குகொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)

## மாவட்டமட்ட போட்டிகளில் பங்குபற்ற முழங்காவில் ம.வி. தெரிவு

வெள்ளாங்குளம்,மார்ச்20

பூநகரிக் கோட்டமட்டத்தில் நடைபெற்ற பெருவிளையாட்டுக்களில் முழங்காவில் மகாவித்தியாலயம் 14 விளையாட்டுக்களில் வெற்றிபெற்று மாவட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தெரிவாகியுள்ளது.

கடந்த 11ஆம், 12ஆம் திகதிகளில் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கோட்டமட்ட பெருவிளையாட்டுக்கள் இடம்பெற்றன. கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் பங்குபற்றிய இப்போட்டியில் 16 விளையாட்டுகள் இடம்பெற்றன.

இதில், 14 விளையாட்டுக்களில் முழங்காவில் ம.வி. வெற்றிபெற்றது.

ஏனைய பாடசாலைகளுக்கும் வெற்றிகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-415-202)

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் யாழ்.கிளைகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

இந்நிலையில் யாழ்.வர்த்தகர்களில் இலங்கை வங்கிக்கிளைகளில் கணக்கு வைத்திருப்பவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களை கலந்துகொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (எ-202)


கூரை அமைப்பின் புதிய அலை
அன்டன் சுபர் ஷெல்டா
ANTON Super Shelta
கூரைத்தகடுகள்

- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- திறம் மாறாதது
- குடியிருப்பு, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள் இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

செண்ட் அந்தனீஸ் ருவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்

நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.



1வது பிறந்தநாள் வாழ்த்து



மதியழகன் - லலிதா தம்பதியரின்

செல்வப் புதல்வன்

கிருசிகன்.

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.03.2006) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார் இவரை அம்மா,அப்பா, அம்மப்பா,அம்மம்மா,அப்பப்பா,அப்பம்மா,மாமாமார், அத்தைமார்,சித்தப்பாமார்,தாத்தா,பாட்டி மற்றும் உறவினர்கள் அனைவரும் கயிற்றசிட்டி அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இரத்தினம் (அம்மப்பா)



தவில் அரங்கேற்றம்

திருநாவுக்கரசு (குஞ்சு) ரஞ்சன் தம்பதியரின் மூத்த புதல்வனும் தவில் ஆசிரியர் M.தர்மலிங்கம் (நெல்லியடி). அவர்களின் மாணவனுமாகிய

T.குகஞானம் (குகன்)

(கொடிகாமம் நாவலடி,அரசினர் வித்தியாலய O/L மாணவன்)

அவர்களுடைய தவில் அரங்கேற்றம்.

இடம் : கண்ணகை அம்மன் ஆலயம், மிருசுவில்.
காலம் : இன்று (20.03.2006) திங்கட்கிழமை
நேரம் : மாலை 6.30 மணி

நிகழ்ச்சி நிரல்

மிருசுவில் ஆஸ்பத்திரி முன்பாக, மிருசுவில்.



திருநாவுக்கரசு (குஞ்சு)ரஞ்சன்.



IIS CITY CAMPUS

New Batches Start on :

01/04/2006 (Weekend Batch)

03/04/2006 (Weekday Batch)

at 10.00 A.M.

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

COMPUTER COURSES

**Diploma in Software Engineering**
- Introduction to Information Technology
- System Analysis and Design
- Data Analysis and Database Design
- Software Engineering Techniques
- Software Engineering Implementation Project
- Introduction to Programming
- Visual Programming

**Diploma in Internet Engineering**
- Introduction to Information Technology
- Multimedia and Internet Technology
- Data Communications and Networking
- Advanced Web Site Management
- Internet Engineering Implementation Project
- Internet Science
- Web Site Management

**Diploma in Business Information Systems (Accounting)**
- Introduction to Information Technology
- Skills for Manual Accounting Systems
- Financial Accounting and Quantitative Methods
- Fundamentals of Financial Management
- Computerized Accounting Packages
  ACCPAC, Quick Book Pro, Tally & TATA EX - Next Generation
- Business Information Systems Implementation Project

**Diploma in Hardware Engineering**
- Introduction to Information Technology
- Computer Platforms
- Computer Networking
- Multimedia
- Hardware Engineering Implementation Project
- Troubleshooting PC Hardware
- Troubleshooting Software
- Preventive Maintenance

கற்கைநெறிகளின் சிறப்புகள் :
- முழுமையான சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- மேற்படி கற்கைநெறிகளில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் HND கற்கைநெறிக்கான பாடவிதான விலக்கைப் பெற்றுக்கொள்வதுடன் கட்டணச் சலுகையும் பெற்றுக்கொள்ளமுடியும்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் பிரயோகம்
- முழுமையான பிரயோகக்கல்வியினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைமை
- ஒரு பிரிவில 20 மாணவர்களுக்கு மட்டுமேயான அனுமதி
- தகுதியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை


## நகரசபை நூலகத்தில் மீண்டும் சிறுவர் பகுதி

தென்மராட்சி,மார்ச்20

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தில் 7 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் சிறுவர் பகுதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னர் இயங்கிய சிறுவர்களுக்கான வாசிப்புப்பிரிவு, உடனுதவும்பிரிவு ஆகியவற்றுடன் புதிதாக சிறுவர்களுக்கான புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதியும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## ஊர்காவற்றுறைச் சந்தைக்கு முன்பாக மினிபஸ் நிறுத்ததடை

குருநகர், மார்ச் 20

ஊர்காவற்றுறை மத்திய பொதுச் சந்தைக்கு முன்பாக பஸ்கள் மற்றும் மினி பஸ்கள் நிறுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை துறைமுக வீதியில் தனியார் பஸ் சங்க மினி பஸ்களுக்கு தனியான பஸ்தரிப்பிடமும், இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்களுக்கு தனியான பஸ் தரிப்பிடமும் அமைக்கப்பட்டுள்ளன.(எ-51)

## அரசசார்பற்ற நிறுவன இணையத்திற்கு புதிய நிர்வாகம்

குருநகர்,மார்ச்20

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவராக சர்வோதய அமைப்பைச் சேர்ந்த அ.கி.சிவசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேற்படி இணையத்தின் பொதுக்கூட்டம் கடந்த ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை யாழ். கோவில். வீதியில் அமைந்துள்ள இணையத் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ்.அரசஅதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ரி.தேவனாந்த் உபதலைவராகவும், ஸ்ரீசக்திவேல் செயலாளராகவும், திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் பொருளாளராகவும், திருமதி சறோஜா சிவச்சந்திரன் உபசெயலாளராகவும், சி.கமலநாதன் கணக்காய்வாளராகவும், பொ.விக்னேஸ்வரன், மு.கதிர்காமத்தம்பி ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவாகினர். (எ-51)

# 'ஒலிம்பியாட்' விளையாட்டு அல்ல; பௌதிகவியல் மாணவனின் தோழன்

*பௌதிகவியல் கற்கும் மாணவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும், அந்தத் துறை மீதான தமது ஆர்வத்தை வளர்க்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்' போட்டிப் பரீட்சையின் நோக்கம், பலாபலன்கள் குறித்து விளக்குகிறார் கட்டுரையாளர்.*

அறிமுகம்

37 ஆவது சர்வதேச பௌதிவியல் ஒலிம்பியாட் என்ற தலைப்பை வாசிக்கும் எவரும் நிச்சயமாக இக் கட்டுரை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி பற்றிய ஒரு கட்டுரை என்றுதான் எண்ணுவர். அத்துடன் சிலருக்கு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கும் பௌதிகவியலிற்கும் என்ன சம்பந்தம் என வியப்பாகவும் இருக்கும். சர்வதேச பௌதிகவியல் ஒம்பியாட் என்பது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி போன்றே சர்வதேச ரீதியில் பௌ்திகவியலில் நடைபெறும் ஒரு போட்டிப் பரீட்சையாகும். உண்மையில் இதை ஒரு போட்டி என்று கூறுவதை விட உலகிலுள்ள உயர்தர வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் பௌதிகவியல் மாணவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்கும் பௌதிகவியல் துறையில் ஆர்வத்தை வளர்ப்

## போதிய வழிகாட்டுதல்கள் கிடைப்பின் சர்வதேச அரங்கில் பிரகாசிக்கலாம்

பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகவே கொள்ளவேண்டும்.

சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் உலகெங்குமுள்ள உயர்தர மாணவர்களின் பௌதிகவியல் அறிவை பரீட்சிக்கும் வகையில் நடத்தப்படுகிறது. முதன் முதலில் இப்போட்டியானது 1967 ஆம் ஆண்டில் போலந்து (Poland) நாட்டில் நடத்தப்பட்டது. அன்று முதல் இன்றுவரை வருடாந்தம் வேறு வேறு நாடுகளில் இப்போட்டி நடத்தப்பட்டு வருகிறது. தவிர்க்க முடியாத காரணங்களால் இடையில் இரண்டு ஆண் டுகள் இப்போட்டி நடைபெறவில்லை.

இப் போட்டியில் சர்வதேச ரீதியாக 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். அத்துடன், இப் போட்டியில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்த வண்ணமும் உள்ளது. அந்த வரிசையில் சென்ற வருடம் எமது நாடும் முதன் முதலில் பங்கேற்றது. இதற்கான சந்தர்ப்பத்தை இலங்கைப் பௌதிகவியல் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்து அயராது உழைத்து வருகிறது. இவ் வருடம் இலங்கை இரண்டாவது தடவையாகப் பங்குபற்றுவதால் மிகத் திறமையாக மாணவர்களைத் தயார்ப்படுத்தி அனுப்பவேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரைச் சார்ந்ததாகும்.

இவ் வருடம் நடைபெறவுள்ள 37 ஆவது சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் எதிர்வரும் ஜுலை மாதம் 8ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்றவுள்ள ஒவ்வொரு நாடும் முதலில் தமது நாட்டிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பெ்ளதிகவியலில் ஒரு போட்டிப் பரீட்சையை நடத்தும். அதில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்குவார்கள். பின்னர் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்கி சர்வதேசப் போட்டியில் பங்குபற்றுவதற்காக தயார்செய்து அனுபிவைப்பார்கள்.

**போட்டியில் யார் பங்குபற்றலாம்?**

இப் போட்டியானது உலகெங்குமுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களிற்கிடையே நடத்தப்படுகிறது. இதில் க.பொ.த. உயரதர பரீட்சையில் ஒருமுறை அல்லது இருமுறை தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருப்பவர்களும் 2006 ஆம் வருட க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாகிக் கொண்டிருப்போரும் பங்கு பற்றலாம். இப் போட்டி நடைபெறும் திகதியில் பல்கலைக் கழகப் படிப்பைத் தொடங்கியிருக்கக் கூடியவர்கள் இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

அத்துடன் குறிப்பாக இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோரின் வயது ஜுன் 30 ஆம் திகதியன்று 20 வயதிற்கு மேற்படாததாக இருக்க வேண்டும். ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை பேரும் இப் போட்டியில் பங்குபற்றலாம். பௌதிகவியலை ஒரு பாடமாகக் கற்கும் எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம் என்றாலும், அவர்களின் கணித அறிவு மிகவும் சிறந்ததாக இருக்க வேண்டும்.

இப் போட்டியில் பங்குபற்றக் கூடிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக இங்கு நடத்தப்படும் போட்டிப் பரீட்சை 'இலங்கைப் பௌதிகவியல் ஒலிம்பியாட்' என அழைக்கப்படுகிறது. நமது நாட்டில் இப் போட்டியினை 'இலங்கைப் பௌதிகவியல் சங்கமும்' (I nsti-tute of Physics, Sri Lanka) கொழும்பு பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தி வருகின்றன.

**போட்டிப் பரீட்சை எவ்வாறு இருக்கும்?**

இலங்கையில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சை எமது வழமையான க. பொ.த. உயர்தர பௌதிகவியல் வினாத்தாள் போன்றே இருக்கும். ஆனால் சற்றுக் கடினமாக இருக்கும். இப் போட்டிப் பரீட்சையின் கால அளவு இரண்டு மணித்தியாலங்களாகும். வினாத்தாளில் கேட்கப்படும் கேள்விகள் க.பொ.த. உயர்தர பௌதிகவியல் பாடத்திட்டத்திற்கு அமைவாக 20 பல்தேர்வு வினாக்களையும் (MCQ), 2 கட்டமைப்பு (Structured) வினாக்களையும் கொண்டிருக்கும்.

இப் போட்டிப் பரீட்சையானது கொழும்பு, பேராதனை, களனி, ருகுண, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாத்திரம் நடத்தப்படுகிறது. இப் போட்டியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு இலங்கைப் பௌதிகவியல் சங்கம் பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்கிக் கௌரவித்து வருகிறது. போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு உயர்தரப் பரீட்சை முடிந்தபின், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச போட்டியில் பங்குபற்றுவதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படும். பின்னர் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் பங்குபற்றுவதற்காக இரண்டு ஆசிரியர்களின் துணையுடன் அனுப்பி வைக்கப்படுவர்.


2005 இல் நடைபெற்ற ஒலிம்பியாட்டில் இலங்கை சார்பில் பங்குபற்றியோர்.

சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி இரு பிரதான பிரிவுகளாக நடைபெறும். முதலாவது பிரிவில் மூன்று நீண்ட பௌதிகவியல் வினாக்கள் கொடுக்கப்பட்டு அவற்றிற்கான விடைகளை எழுத ஐந்து மணித்தியாலங்களும் வழங்கப்படும். இரண்டாவது பிரிவுப் பரீட்சையில் மாணவர்களின் செயல்திறனைப் பரீட்சிக்க இரண்டு பரிசோதனைகள் கொடுக்கப்பட்டு பரீட்சிக்கப்படுவர்.

இலங்கையில் இப் போட்டி தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற மும்மொழிகளிலும் நடைபெறும். மாணவர்கள் தமக்கு விரும்பிய மொழியில் பரீட்சை எழுதலாம். சர்வதேச போட்டியின் அலுவலக மொழி ஆங்கிலமாகும். ஆயினும் மாணவர்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டால் அவர்களின் தாய் மொழியிலேயே வினாத்தாள்கள் வழங்கப்படும். இதன் மூலம் எந்தவித மொழி வரம்புகளுமின்றி மாணவர்களின் பௌதிகவியல் திறமையை மட்டும் பரீட்சித்துப் பார்க்கும் ஒரு போட்டியாக சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் திகழ்கிறது.

**போட்டியில் பங்குபற்ற எவ்வளவு செலவாகும்?**

இப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் ஒரேயொரு செலவு பரீட்சைக் கட்டணமான ரூபா250/- மட்டுமே. இப்பணம் கூட பங்குபற்றும் மாணவர்களிற்கு ஒரு பொறுப்புணர்ச்சி இருக் வேண்டும் என்பதற்காகவே அறவிடப்படுகிறது. இவசமாகப் பரீட்சை வைக்கப்பட்டால் கோயில் தேர்த்திருவிழாக்கள் போல் எல்லோரும் பங்குபற்றி பெருமளவு மனித உழைப்பையும், உன்னதமான நோக்கங்களையும் கெடுத்துவிடுவார்கள். இதை




விட பரீட்சை நிலையத்திற்கு சென்றுவரும் செலவு மாத்திரமே ஏற்படுகிறது.

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வசதியில்லாதவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சு கடிதமொன்றைச் சமர்ப்பித்தால் அம் மாணவர்கள் இலவசமாகப் பரீட்சையை எழுத முடியும். திறமையாகப் பரீட்சையெழுதி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் சிங்கப்பூர் பயணத்திற்கான செலவை இலங்கைப் பௌதிகவியல் சங்கமும், இம் முறை போட்டி நடை பெறவுள்ள நாடான சிங்கப்பூரில் தங்குமிட வசதி, உணவு போன்ற சகல செலவுகளையும் சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டின் ஏற்பாட்டுக் குழுவினரும் பொறுப்பேற்பர். இவற்றைவிட இடங்களைச் சுற்றிப் பார்த்தல், கலை, கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றல் போன்றவற்றையும் ஏற்பாட்டுக் குழுவினர் ஒழுங்குசெய்வர்.

**போட்டியில் பங்குபற்றுவதால் ஏற்படும் அனுகூலங்கள்**

இப் போட்டியில் பங்குபற்றுவதால் என்ன நன்மை ஏற்படும் என ஒருவர் கேட்கலாம். இலங்கையில் நடத்தப்படும் பரீட்சை நமது க.பொ.த. உயர்தர வகுப்பு பாடத்திட்டத்திற்கு அமைவாக இருப்பதால், உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களிற்கு முன்னோடிப் பரீட்சைகள் போன்று தயார்ப் படுத்தலாகவும், மேலதிகமான பயிற்சிகள் கொடுப்பதாகவும் இருக்கும்.

அதாவது இப் பரீட்சையை எழுதும் போது மாணவர்களிற்கு தாம் உயர்தரப் பரீட்சைக்கு எவ்வளவு தூரம் தயாராகவுள்ளார்கள் என்பது புரியும். அதன்படி அவர்கள் தாங்கள் படிக்கும் முறையை மாற்றியமைத்து சரியான முறையில் உயர்தரப்பரீட்சைக்குத் தயாராக முடியும்.

இப் போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களிற்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் கிடைப்பதோடு, அவர்களிற்கு இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களைச் சந்தித்துப் பழகும் அரிய சந்தர்ப்பமும் கிடைக்கிறது. இது அவர்களிற்கு ஒரு சிறப்பான அனுபவமாக அமைவதுடன் நல்ல நட்புறவைக் கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்பாகவும் இருக்கிறது. அத்துடன் அந்த நட்பு பல்கலைக் கழக மட்டத்திலும் தொடர்ந்து பல வழிகளிலும் மாணவர்களின் ஆளுமையையும் பெருக்கும் வாய்ப்பாகவும் அமைகிறது.

அத்துடன், மிகத் திறமையாக சித்தியடையும் ஐந்து மாணவர்களுள் ஒருவராக வருபவர்களுக்கு எத்தனையோ நாடுகளைச் சேர்ந்த சக மாணவர்களைச் சந்தித்துப் பழகுவதன் மூலம் அவர்களின் கலை, கலாசாரம், சமயம் போன்ற விடயங்களில் அறிவைப் பெருக்கிக்கொள்ள முடிவதுடன் நல்ல நட்பும் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. அத்துடன், போட்டி நடைபெறும் இடத்தில் கலை, கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுவதாலும், இடங்களைச் சுற்றிப் பார்ப்பதாலும் கிடைக்கும் அனுபவங்கள் அவர்களின் வாழ்வில் எவ்வளவோ வழிகளில் உதவும்.

இலங்கையில் நடைபெறும் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25.03.2006 அன்று காலை 9.30 முதல் 11.30 மணி வரை நடைபெறவுள்ளது. வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளிற்கான போட்டிப் பரீட்சை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இது க.பொ.த.உயர்தர பரீட்சை நடை பெறுவதற்கு கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் முன்பே நடைபெறுவதால், உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களிற்கு மிகவும் உதவியாக இருக்கும். அத்துடன் ஏனைய விடயங்கள் க.பொ.த. உயர்தர பரீட் சையின் பின்னரே நடைபெறவுள்ளதால் இது மாணவர்களின் உயர்தர பரீட்சைக்கான தயார்ப்படுத்தலை எவ்விதத்திலும் பாதிக்காது.

சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் பற்றிய போதிய விழிப்புணர்ச்சி இல்லாததால் எமது மாணவர்களின் நன்மை கருதி

**கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*பௌதிகவியல்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,*

இக்கட்டுரையை எழுதியுள்ளேன். இக் கட்டுரையைப் படிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களையும் பரீட்சை எழுதி பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கும் மாணவர்களையும் இப்போட்டியில் பங்குபற்றுமாறு தூண்டுவதோடு, சர்வதேச ரீதியில் எமது தமிழ் மாணவர்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

போர்ச் சூழலில் அல்லற்பட்டு நீண்டகாலமாக கஷ்டப்பட்ட எமது மாணவர்களிற்கு இப்போட்டி ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

இப்போட்டி பற்றிய மேலதிகமான விடயங்களை அறிய விரும்புவோர் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். இப் போட்டி பற்றிய தகவல்கள் சகல பாடசாலைகளிற்கும் ஏற்கனவே டிசெம்பர் மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. ஆயினும் இங்கிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக மிகக் குறைந்தளவு மாணவர்களே பங்குபற்ற விண்ணப்பித்துள்ளனர். அதனால் இப் போட்டி பற்றிய தகவல்கள் சகல பாடசாலை களிற்கும் மீண்டும் அனுப்பிவைக்கப்பட் டுள்ளன.

இப்போட்டி பற்றிய தகவல்கள் இன்னும் கிடைக்கப் பெறாத மாணவர்கள் இக் கட்டுரை மூலம் பயனடையலாம். விண்ணப்பங்களை பரீட்சை நடைபெறும் நாளிலேயே பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்கலாம். எமது தமிழ் பிரதேசத்திலுள்ள திறமையான மாணவர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்குபற்றி சர்வதேச ரீதியில் எமது தாயக மண்ணின் பெருமையை மேம்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளுடன் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

* * *

## சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் விண்ணப்பம்

தென்மராட்சி,மார்ச்20

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி, விவசாயம், விசேட கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம்), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்குரிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு-I அல்லது வகுப்பு 2-I ஐச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## மல்லாகம் சந்தியிலுள்ள பஸ்நிலையத்தில் வெள்ளம் பயணிகள் பெரும் சிரமம்

மல்லாகம் சந்தியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்றும்- இதனால் பஸ்தரிப்பிடத்துக்கு வரும் பொதுமக்களும், பாடசாலை மாணவ மாணவியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கூறப்பட்டது.

பஸ்தரிப்பிடம் அமைந்துள்ள நிலப்பகுதி தாழ்வாகக் காணப்படுகின்றது. இதனால் மழைகாலங்களில் பல்வேறு இடங்களிலும் இருந்து வடிந்துவரும் வெள்ளம் பஸ் நிலையப் பகுதியில் தேங்கி நிற்பதாகவும் - எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்- பயணிகள் கோரியுள்ளனர். (எ-86)

## சாந்தையில் கூட்டுடன் புறாக்கள் திருட்டு

சில்லாலை, சாந்தைப் பகுதியில் புறா வளர்ப்பில் ஈடுபட்டு வந்த ஒருவரின் வீட்டிலிருந்து 14 புறாக்களும் அவற்றின் குஞ்சுகளும் இரவு வேளையில் புறாக்கூட்டுடன் திருட்டுப்போயுள்ளன.

புறா வளர்ப்பில் அதிக ஆர்வமுடைய இவர் நீண்டகாலமாக புறாக்களை வளர்த்து வந்தவர் என்றும் - வெளிநாட்டு இனத்தை சேர்ந்தவை உட்பட அழகிய புறாக்கள் பல இவரது பராமரிப்பில் இருந்தன என்றும் கூறப்பட்டது.

சில்லாலை, சாந்தைக் கிராமத்தைச் சேர்ந்த செ.ரஞ்சித்குமார் என்பவரின் வீட்டிலிருந்த புறாக்களே இவ்வாறு கூட்டுடன் திருடப்பட்டுள்ளன. (எ-135)

☑ யாழ் நகரில் எங்கும் இல்லாதவாறு....
☑ என்றும் விற்பனையின் முன்னணியில்...
☑ அறிமுக விலைக் கழிவுடன்...
☑ நம்பிக்கை, உத்தரவாதத்துடன்...
☑ விற்பனைக்கு பின்னரான சேவை....
☑ அதிநவீன P4 கணனிகளையும்...
☑ அனைத்து உதிரிப்பாகங்களையும்...
☑ அனைத்தும் ஓரிடத்தில்...

Logitech SONY ASRock

Asrock, Sony, Logitech நிறுவனங்களின் இலங்கைக்கான உத்தரவு பெற்ற முகவரான *Fine Technology Zone* நிறுவனத்தின் வடபகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவராகிய நாம், தற்போது கணனி மற்றும் அனைத்து உதிரிப்பாகங்களையும் அறிமுக விலைக்கழிவுடன், உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்!

CICS Computer Technologies

# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610
E-mail: cicsjaffna@gmail.com

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15-11-1927

மறைவு 23-03-1995



அமரர்
**கதிர்காமு சின்னத்துரை**
(முன்னாள் கீரிமலை ஆண்கள் கேணி பாதுகாவலர்)

இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(48248)
(26.19.14)

ஆறாத்துயருடன்...
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்களை வழங்குவதற்குத் தகுதியுடைய வர்த்தகர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. பிணைச்சல், பூட்டு திறாங்கு, யன்னல் கொழுக்கி போன்றவை
2. நீர்க்குழாய்கள், நீர்க்குழாய் இணைப்புக்கள், வால்வுகள் மற்றும் ஏனைய நீர்க்குழாய் பொருள்கள்
3. ஒட்டுப் பலகைகள், கதவுகள்
4. செரமிக் உபகரணங்கள்
5. தீந்தைகள்,வானிஸ் பிறஸ்கள்
6. மின்சாரப் பொருள்கள்

கேள்விப்பத்திரப் படிவங்களை மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 1000,00 உம் மீளளிக்கத்தக்க வைப்புப்-பணமாக ரூபா 5000.00 இனையும் காசாக யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் அல்லது யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை கணக்கு இலக்கம் 1-62-090501-2 இல் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 20.03.2006 தொடக்கம் 24.03.2006 வரை யாழ்.பல்கலைக்கழக நிதிப்பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 27.03.2006 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திர கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் UJ/F/SK/T/03/06 கட்டடப் பொருள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 27.03.2006 அன்று பி.பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (சி/48413)(26.19.14)

## யாழ்.மாநகரசபை
## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிட்ட வீதிவேலைக்காக யாழ்.மாநாகரசபையில் பதிவுசெய்துள்ள இக்ராட் பதிவுடன் கூடிய இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் செல்லுபடியாகும் உறுப்புரிமையுடைய ஒப்பந்த காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசி திகதி :24.03.2006 நண்பகல் 12 மணிவரை**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி: 27.03.2006 நண்பகல் 12 மணிவரை**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி: 27.03.2006 பிற்பகல் 3 மணிவரை**

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் வீதி செப்பனிடுவதற்கான கேள்வி என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டுவரும் வீதி வேலைப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும்

| தொ. இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவுத்தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புக் கட்டணம் வற்வரி உட்பட ரூபா |
|---|---|---|---|---|
| 01 | தலையாழி ஒழுங்கை கொக்குவில் | M9 | 3750.00 | 1250.00 |
| 02 | கோணாந்தோட்ட வீதி, கொட்டடி | M8 | 10000.00 | 1500.00 |
| 03 | கன்னார் வீதி, நாயன்மார்கட்டு | | 2500.00 | 1000.00 |
| 04 | கனகரத்தினம் மகாவித்தியாலய ஒழுங்கை, அரியாலை | M9 | 3000.00 | 1250.00 |
| 05 | கச்சேரி ஒழுங்கை, அரியாலை | M9 | 2500.00 | 1000.00 |
| 06 | பருத்தித்துறை வீதி, சங்கிலியன் வீதி, இணைப்பு ஒழுங்கை, நல்லூர் | M9 | 4500.00 | 1500.00 |
| 07 | நொத்தாரிஸ் ஒழுங்கை, அரியாலை | M8 | 10000.00 | 1500.00 |
| 08 | கச்சேரி கிழக்கு ஒழுங்கையின் உப ஒழுங்கை, அரியாலை | M9 | 2500.00 | 1000.00 |
| 09 | பென்ரிக்கோஸ் சபை ஒழுங்கை, அரியாலை (1 பகுதி) (பிரப்பங்குளம் ஆ.வ.வீதி இணைப்பு) கொழும்புத்துறை | M9 | 2500.00 | 1000.00 |
| 10 | நாகராசாவீதி உப ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு | M9 | 1500.00 | 575.00 |
| 11 | (கோவில் வீதி, உப ஒழுங்கை)நெல்லி ஒழுங்கை, நல்லூர் | M9 | 1000.00 | 575.00 |
| 12 | (கோவில் வீதி, உப ஒழுங்கை) கந்தன்கருணை ஒழுங்கை, நல்லூர் | M9 | 2250.00 | 800.00 |
| 13 | துரைராசா வீதி, வண்ணார்பண்ணை | M9 | 3500.00 | 1150.00 |
| 14 | நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை | M9 | 5250.00 | 1725.00 |
| 15 | மூத்ததம்பி அவனியூ, நல்லூர் | M9 | 3500.00 | 1150.00 |
| 16 | ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்.நகர் | M9 | 3250.00 | 1150.00 |
| 17 | மூளாய் ஒழுங்கை, யாழ்நகர் | M9 | 2500.00 | 800.00 |

குறிப்பு: 1.கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்விச்சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.
2.வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 2 மாதங்களுள் நிறைவுறுத்தி ஒப்படைக்கவேண்டும்.

**சீ.வீ.கே.சிவஞானம்,**
**மாநகர ஆணையாளர், மாநகர சபை.** (சி/48434)(26.19.14)

## இளவாலையில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

இளவாலைப் பகுதியில் பொதுமக்களுக்கு உபத்திரவம் கொடுத்துவந்த கட்டாக்காலி நாய்கள் கடந்த 16ஆம் திகதியன்று பிடித்து அழிக்கப்பட்டன. வலி.தென் மேற்குப் பிரதேச சபையின்பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தின் அனுசரணையுடன் இளவாலை பொது சுகாதாரப்பரிசோதகர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (எ-135)

டாரி
எயர் கொம்பிரசர்
DARI AIR COMPRESSORS

டிரெக்ட் கப்பல் மற்றும் பெல்ட் டிரீவன்.

உள்ளடக்கம்
24 முதல் 240 லீற்றர்



ஏக முகவர்கள்:
செண்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 நேரடி : 2337286
பெக்ஸ்: 2446554

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடம் கிடைக்கின்றன

Swan
சுவான் டீசல் என்ஜின்

● நம்பிக்கையில் தலைசிறந்தது
● 4 ஸ்ரோக் என்ஜின்
● தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
● உதிரிப்பாகங்கள் உண்டு



ஏக முகவர்கள்:
செண்ட் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்

## சேவைநலன் பாராட்டு



## திருமதி லோகநாயகி இரகுபதி

(ஸ்ரீலங்கா அதிபர் தரம் I)

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி லோ.இரகுபதி அவர்கள் 01-03-2006 அன்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவர் 01-10-1970 அன்று யா/ஏழாலை மகா வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்று விஞ்ஞான ஆசிரியராகப் பதவியேற்றார். பின்பு யா/ பலாலி ஆசிரிய கலாசாலையில் 2 வருடங்கள் ஆசிரிய பயிற்சி பெற்று, பின் கே/மாவனெல்ல பதுரியா மகளிர் கல்லூரி, அனு/இக்கிரிக் கொல்லாவ முஸ்லிம் மகாவித்தியாலயம், யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம், யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

01-06-1991இல் இலங்கை அதிபர் சேவையில் இணைந்து கொண்ட இவர் யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றினார்.

29-07-1994 இல் கொழும்பு இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்த இவர் இக் கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும் கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் கல்வி மாணிப் பட்டம் (B.Ed.), பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளையும் பூர்த்திசெய்துகொண்டார்.

இவர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவியும் ஆவார்.

\- பழைய மாணவர்கள்.

(48304) (24.26.19.14)

# மக்களின் நலன்களைப் பேணக்கூடிய தொழில் நிலையங்கள் மிக அவசியம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

அக்கராயன்,மார்ச்20

மக்களின் நலன்களைப் பேணக்கூடிய தொழில் நிலையங்கள் உருவாவது மிகவும் அவசியமாகும்.

- இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக் குளம், குஞ்சுக்குளம் - கிராமத்தில் அரிசி ஆலையைத் திறந்துவைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

குஞ்சுக்குளம் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தில் பழைமை வாய்ந்த கிராமம்.

இக்கிராமத்தில் அரிசி ஆலையை திறந்து வைப்பதன்மூலம் இக்கிராம மக்கள் சிறு கைத்தொழில்களை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் உருவாகியுள்ளன - என்றார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர் சுலோஜினி, கிளிநொச்சி மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள், கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், மருத்துவர் க.முருகானந்தன் உட்படப் பலர் உரையாற்றினர்.

'நியாப்' திட்டத்தின் கீழ் இந்த அரிசி ஆலை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-420)

## கிராம அபிவிருத்தி வங்கியின் வாடிக்கையாளர் மையம்

ஒட்டுசுட்டான்,மார்ச்20

ஒட்டுசுட்டான், கற்சிலைமடுக் கிராமத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கி வாடிக்கையாளர் மையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.கடந்த 14 ஆம் திகதி இதன் ஆரம்ப வைபவம் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் கரிகாலன் மையக் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.இதன்போது சூடடிக்கும் இயந்திரம், அருவிவெட்டும் இயந்திரம், சூரியமின் கலம், தையல் இயந்திரம் ஆகியன கடனடிப் படையில் வழங்கப்பட்டன.

(த-341)

## தருமபுரம் ம.வியில் ஆண்டுவிழா

கிளிநொச்சி,மார்ச்20

தருமபுரம் மகாவித்தியாலய ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.பூலோகராசா தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

(த-307)

## கருவேலன்கண்டலில் பொது மருத்துவமுகாம்

ஒட்டுசுட்டான்,மார்ச் 20

ஒட்டுசுட்டான் பிரதேசம், கருவேலன் கண்டல் கிராமத்தில் நடமாடும் பொது மருத்துவமுகாம் ஒன்று கடந்த 14 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கருவேலன் கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் செல்வானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் 600 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

(த-341)

# நெடுங்கேணி சுற்றயல்கூறு ஆஸ்பத்திரி ஏப்ரல் தொடக்கம் புதிய கட்டடத்தில்!

அக்கராயன்,மார்ச் 20

வவுனியா வடக்கு, நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனை எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்தார்.

புதிய கட்டடவேலைகள் நிறைவுபெற்றுள்ளதாகவும் ஏப்ரல் மாதத்தில் இதனை இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனை 1997 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காப் படை மேற்கொண்ட ஜயசிக்குறு படை நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் - 03 நடவடிக்கை மூலம் புலிகள் நெடுங்கேணிப் பிரதேசத்தை மீட்டெடுத்தனர்.

அழிவடைந்த மருத்துவமனைக் கட்டடத்தில் நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனை இயங்கிவந்தது.

இந்த நிலையில் இதற்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் ஏப்ரல் மாதம் முதல் நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனை இயங்கவுள்ளது. (த-420)

## வள்ளிபுனத்தில் தற்காப்புப் பயிற்சி

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள வள்ளிபுனம் வலய மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த வாரம் வள்ளிபுனம் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமானது.

இப்பயிற்சியில் ஆண்கள், பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (த-307)

**கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்**

# இயற்கை உரம் தயாரிக்கும் இயந்திரங்கள் பழுதடைந்தன

கிளிநொச்சி, மார்க் 20

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் திண்மக் கழிவுப் பொருள்களைக்கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் தொழிற்சாலையில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் இயற்கை உர உற்பத்தியை மேற்கொள்ள முடியாதுள்ளதாக வவுனியா நகரசபை செயலாளர் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் வேப்பங்குளத்தில் இயற்கை உர உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. உற்பத்திமேற்கொள்ளத் தேவையான இயந்திரங்கள் தற்போது செயலிழந்துள்ளன.

இதனால் மக்களிடமிருந்து பெறப்பட்ட கழிகளில் இருந்து பசளை உற்பத்தியை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது. இயற்கை உரத்தை விரும்பி வாங்கும் விவசாயிகள் மீண்டும் இரசாயன உரங்களைப் பயன்படுத்தவேண்டியுள்ளனர்.

சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத இயற்கை உரப்பசளையை மீண்டும் பெற உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-307 - 204)

# பசுமைப்புரட்சி நிறுவனத்தின் மாவட்டச் செயலகம் திறப்பு

பசுமைப்புரட்சிக்கான நிறுவனத்தின் மாவட்டச் செயலகம் முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பெயர்ப்பலகையினை முல்லை. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சிவனடியான் திரைநீக்கம் செய்துவைத்தார். கட்டடத்தை முல்லை. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

விவசாய அபிவிருத்தி நிறுவன செயலகத்தை உலக உணவுத் திட்ட இலங்கைக்கான பணிப்பாளர் ஸ்ரீவ் நாடா வெட்டித் திறந்து வைத்தார். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் சிறப்புரையாற்றினார். (த-325)

# கிருஷ்ணபுரத்தில் முன்பள்ளி திறப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணபுரம் கிராமத்தில் றொபேட் முன்பள்ளிக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.டெனிஸ்' அகதிகள் பேரவையின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் இந்த முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிக் கட்டடத்தின் பெயர்ப்பல கையினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பிரதான கட்டடத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக லண்டன் பொறியியலாளரான கனகசுந்தரம் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, அலுவலக அறையை கிராம அலுவலர் காண்டீபன் திறந்துவைத்தார்.

(த-307)

## ஆண்டான்குளத்தில் தொழிற்பயிற்சி

பரந்தன்,மார்ச்20

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளம் கிராமத்தில் தொழில்சார் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் சமூக, மீள்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது.

இதில் பிரதானமாக மிக்ஷர் உணவுப் பண்ட உற்பத்தி பற்றிய விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

(த-307)

# செட்டியார் தரைவெளியில் அனர்த்தக் குழு அமைப்பு

தமிழீழ சுகாதார சேவையினரின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவினரால்நோய் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய பிரதேசங்களில் உடனடி நடவடிக் கைக் குழுக்கள்அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் செயற்பாடாக பூநகரி செட்டியார் தரைவெளியிலும் இக்குழுஅமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக இ.இராஜபோல்டனும் செயலாளராக பா.தணிகாசலமும் பொருளாளராக மி.மேரிறோஸும் உறுப்பினர்களாக பதினான்கு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்குழுவிற்கான இணைப்பாளராக தமிழீழ சுகாதார சேவைகளின் பூநகரிப் பிரதேச சுகாதார இணைப்பாளர் அரவிந்தன் கடமையாற்றுகின்றார்.

(த-307)

## கௌதாரிமுனையில் பற்சிகிச்சை

தமிழீழ சுகாதார சேவையின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவினரும் பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையினரும் இணைந்து கடந்த 17 ஆம் திகதி பூநகரி, கௌதாரிமுனை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பற்சிகிச்சை, பொதுமருத்துவம் போன்ற சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் பற்சுகாதாரக் குறைபாடு உள்ளவர்களும் பல்வேறுபட்ட நோயுடன் சம்பந்தப்பட்டவர்களுமாக 150 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.(த)

# கட்டட பொறியியல் தொழிலாளரை பதிவுசெய்யும் செயற்பாடு ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச்20

தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தால் தொழிலாளர்களைப் பதிவு செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 15 ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருகிறது என்றும்-இதன் அடிப்படையில் கட்டட பொறியியல்துறை தொழிலாளர்கள் யாவரும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் தமிழீழ கட்டுமானப் பொறியியற் செயலகம்அறிவித்திருக்கிறது.

(த)

# வட்டக்கச்சிப் பகுதியில் உணவகங்களில் சோதனை

கிளிநொச்சி, மார்ச் 20

தமிழீழ சுகாதார சேவையின் விசேட நடவடிக்கைப் பிரிவினர் வட்டக்கச்சிப் பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது காலாவதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

வட்டக்கச்சி கட்சன் வீதிப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும் பல்பொருள் வியாபார நிலையங்களிலும் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சுகாதாரத்திற்கு சீர்கேடான முறையில் இயங்கிக் கொண்டிருந்த இச் சிற்றூண்டிச் சாலைகள், தேநீர்ச் சாலைகள் என்பனவற்றில் சுகாதாரத்தைச் சிறந்த முறையில் கையாளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கடைகளில் இருந்த காலாவதியான பல பொருள்களும் அழிக்கப்பட்டன.

வெதுப்பகங்களிலும் இத் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் தமிழீழ சுகாதார சேவையின் நடவடிக்கைப் பிரிவினரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(த-307)



பூநகரி பிரிவுக்குட்பட்ட மன்னார் வீதியில் நாச்சிக்குடா சந்திக்கும் 19 ஆம் கட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளகடற்கரும்புலி ஜெகநாதன் குடியிருப்பு பெயர்ப்பலகை சமீபத்தில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது.பூநகரி - முழங்காவில் இணைப்பாளர் சிவசாமி பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

# குசுமன்துறை மயானத்தைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

வலி.தென்மேற்கு,மார்ச்20

மாதகல், குசுமன்துறை மயானத்தில் தகனஞ்செய்வதற்குக் கடற்படையினரால் விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாதகல் இந்துசமய விருத்திச் சங்கம் கடந்த வாரம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மாதகல் பகுதியைச்சேர்ந்த ஐந்நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் கையொப்பத்துடன் இந்த மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாதகல் இந்துசமய விருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மாதகல் கடற்கரைக்குச் சமீபகமாகவுள்ள குசுமன்துறையில் உள்ள இந்துமயானத்தில் சடலங்களைத் தகனம்செய்யக் கொண்டுவர வேண்டாம் என்று அங்கு நிலைகொண்டிருக்கும் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இதனால், சுமார் 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மாரீசன்கூடலுக்குப் பிரேதங்களைக் கொண்டு சென்று தகனம் செய்யவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது என்றும் - அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் இங்கு இறந்த ஒருவரின் பூதவுடல் சுமார் ஆறு கிலோமீற்றர் தூரத்திலுள்ளதும் வசதியற்ற இடமுமான சம்வில்துறையில் தனியார் காணி ஒன்றிக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

பொன்னாலையிலுள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியின் எழுத்துமூலமான அனுமதியைப்பெற்ற பின்னர் குறிப்பிட்ட நபரின் பூதவுடல் இங்கு தகனஞ்செய்யப்பட்டது. (எ-135)

# சூளானை, காட்டுபுலம் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

வலி.தென்மேற்கு, மார்ச் 20

மாதகலுக்கும் பெரியவிளானுக்குமிடையில் உள்ள சூளானை மற்றும் காட்டபுலம் ஆகிய பகுதிகளில் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தினால் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரிய விளானுக்கும் மாதகலுக்குமிடையில் பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட நீண்ட மணல் அணையின் சுற்றாடலில் மிதிவெடிகள் இருப்பதாகவும்.

இதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் - மாதகல் விவசாயிகள் சம்மேளனம் உட்பட இப்பகுதி பொது நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

மேற்படிபகுதிகளில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளில் சிக்கி கடந்த காலங்களில் சிலர் காயமடைந்ததுடன், மேய்ச்சலுக்கு சென்ற மாடுகளும் காயமடைந்தும் இறந்தும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-135)

# கற்கடதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## யாத்திரிகர்களுக்கான படகுச்சேவைக்கு ஏற்பாடு

நெடுந்தீவு,மார்ச்20

கற்கடதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் திருப்பலி, திருச்சுருவ பவனி என்பவற்றுடன் நிறைவுபெறும்.

நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு.க. அருள்நேசன் அடிகளார் தலைமையில் இந்த ஆலயத்திருவிழா நடைபெறும்.

இதற்கிடையில் - மேற்படி தேவாலயத்துக்கு வருகை தரவுள்ள யாத்திரிகர்களின் நலன்கருதி படகுச்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் -

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கத்துக்கு சொந்தமான படகுகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான படகுகள் இவ்வாறு யாத்திரிகர்களை ஏற்றியிறக்கப் பயன்படுத்தப்படும் என்றும் - ஆலயப் பரிபாலகர் அறிவித்துள்ளார்.

கற்கடதீவுக்குப் பயணிப்பது தொடர்பாகக் கடற்படையினரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் -

யாத்திரிகர்கள்வழமைபோன்று குடி தண்ணீர் உணவு வகைகளைத் தம்முடன் எடுத்துவரவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-111)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

குருநகர்,மார்ச்20

யாழ். பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்ட விவரங்களைத் தயாரித்து எடுத்துவருமாறு யாழ்.பிரதேச திணைக்களத் தலைவர்களைப் பிரதேச செயலர் கோரியுள்ளார். (எ-51)

# சுகாதார பரிசோதகர் நியமனம்

வலி.தென்மேற்கு,மார்ச்20

வெற்றிடமாக இருந்து வந்த இளவாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவி நிரப்பப்பட்டுள்ளது.

நவாலி பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிவந்த பி.ஜோகதீபன் கடந்த 16.03.2006ஆம் திகதிமுதல் இளவாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-135)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,மார்ச் 20

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட முறைசாராக் கற்கை நெறிகளில் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தா.பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்துகொள்வார். (எ-117)



ஊர்காவற்றுறை, சின்னமடு றோ.க. பாடசாலையில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் நிக்கொட் திட்டத்தின் யாழ். மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.நவரட்ணராஜா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களில் காணலாம். பாடசாலை அதிபர் எஸ்.சண்முகம்பிள்ளையிடம் சூரிய ஒளியில் ஒளிரும் மின்கலத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் க.கணேஸ் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், அருட்திரு. எஸ்.யேசுதாஸ் அடிகளார் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கிருபைநாதன் ஆகியோரும் படங்களில் உள்ளனர். (படங்கள்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

# வழுக்கியாறு புனரமைப்பு குறித்த கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,மார்ச்20

வழுக்கியாறு புனரமைப்புத் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 9மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில், வழுக்கியாறு புனரமைப்புத் திட்டத்துக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி எஸ்.ஜெயசிங்கம், 'நியாப்' திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.க. முதலியார் உட்படப் பலர் கலந்துகொள்வர். (எ-135)

## மகப்பேற்று நிபுணரின் நியமனத்தை அடுத்து

# மந்திகையில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்படும் கர்ப்பிணிகளின் எண்ணிக்கை உயர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்20

பருத்தித்துறை - மந்திகை மாவட்ட வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டதையடுத்து அங்கு சிகிச்சைபெற்றுவரும் பிரசவத் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பிரசவம் தொடர்பான அறுவைச்சிகிச்சை உட்பட சகல வைத்தியமுறைகளும் மேற்படி வைத்தியசாலையில் தற்போது இடம்பெற்றுவருகின்றன. வடமராட்சி, வலிகாமம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படுகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

இதேவேளை - பிரசவம் தொடர்பான மேலதிக சிகிச்சைக்கென கர்ப்பிணிப் பெண்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவதும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு பிரசவ வைத்திய நிபுணர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்தவாரம் முதல் தமது பணியினைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-15)

# இறை தியான இல்லத்துக்குரிய புதிய கட்டடம் இன்று திறப்பு

கொழும்புத்துறை,மார்ச்20

யாழ். மறை மாவட்ட இறைதியான இல்லம் இன்று திங்கட்கிழமை முதல் புதிய கட்டத்தில் இயங்கவுள்ளது.

இந்நிலையத்துக்கென பழைய பூங்கா வீதியில் கொய்யாத்தோட்டம், மறவன் குளத்திற்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள புதிய கட்டடத்தை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இன்று காலை 9 மணிக்கு திறந்துவைப்பார்.

இங்கு திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் இறைதியானமும் குணமாக்கல் வழிபாடும் நடைபெறும். தற்போது இல்லம் இயங்கிவரும் இடத்தில் தொடர்ந்து திருவிவிலியப் போதனை புதன்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் என்று இறைதியான இல்ல இயக்குநர் அருட்திரு. லோறன்ஸ் அடிகள் தெரிவித்தார். (எ-30)

# சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உயரதிகாரிகள் ஊர்காவற்றுறைக்கு இன்று விஜயம் செய்வர்

ஊர்காவற்றுறை,மார்ச் 20

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கென அந்த நிறுவனத்தின் உயரதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இன்று ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்யவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட முகாமையாளர் எஸ்.ஜவியர், ஐக்கிய இராச்சியத்தின் நிதி ஆலோசகர்களான ஜோண் வில்லியன்சன், நலியா றொபின்சன், நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் ஜே.ஏ.அசோக்குமார் மற்றும் நிறுவன உயரதிகாரிகள் அடங்கிய குழுவே இன்று விஜயஞ்செய்யவுள்ளது.

இன்று காலை ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் பணிமனைக்கு விஜயஞ்செய்யும் இவர்கள், உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் மற்றும் பணிமனையின் அதிகாரிகளுடன் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடுவர்.

தொடர்ந்து எழுவைதீவு, தம்பாட்டி ஆகிய பகுதிகளுக்கு விஜயஞ்செய்யும் இவர்கள் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வருமான உயர்ச்சித் திட்டங்களை நேரில் பார்வையிடுவர். அத்துடன், பிரதேசத்தில் பரவலாகப் பொருத்தப்பட்டுள்ள சூரிய ஒளியில் ஒளிரும் வீதி விளக்குகளையும் இவர்கள் பார்வையிடுவர் என்று ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவர் பாதுகாப்பு- இலங்கை நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சமீபமாக நிறுவப்பட்டுவரும் சிறுவர் விளையாட்டுத்திடல், தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்பனவற்றையும் இந்தக் குழுவினர் பார்வையிடுவர். (எ-16)

# தவக்காலச் சிந்தனை 20

## இறைவனை எம் அடித்தளமாக்குவோம்

மனிதனுடைய வாழ்வு ஒரு வீடு கட்டுவதுபோன்றது. அடித்தளம் ஒன்றின் மீது வீடு கட்டுவதைப் போன்று மனித வாழ்வு ஓர் அடித்தளத்தின் மேலே கட்டப்படுகின்றது.

பல அடித்தளங்கள் இருக்கலாம். ஒருவர் எதற்காக வாழ்கிறாரோ அதுவே அவரது வாழ்வின் அடித்தளமாகிறது. பணத்துக்காக வாழ்ந்தால் - பணம், பெயர், புகழுக்காக வாழ்ந்தால் - பெயர், புகழ், சுகபோகங்களுக்காக வாழ்ந்தால் - சுகபோகம், பட்டம், பதவிகளுக்காக வாழ்ந்தால் பட்டம், பதவி அடித்தளமாக அமையும்.

ஒருவருக்கு இறைவன்கூட வாழ்வின் அடித்தளமாக அமையலாம். இறைவன் பற்றிய சிந்தனையாக இருப்பவர் இறைவனின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்றபடி தன் வாழ்வை அமைத்துக்கொள்வர். இறைவன் இல்லாமல் வேறு எதுவும் ஒருவருடைய வாழ்வின் அடித்தளமாய் இருப்பின் அந்த அடித்தளம் உறுதியான வாழ்வை அவருக்கு வழங்கமுடியாது.

இன்றைய நற்செய்தியும் எமக்கு எடுத்துக் கூறுவது இதுவே. குழந்தை யேசுவும் இறைவனைப் பற்றிய அறிவை கோயிலில் ''போதகர் நடுவில் இருந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார்'' (லூக்.2:46).

எமது பிள்ளைகள் மட்டில் எமது கரிசனை பட்டம், பதவிகளுக்கான கல்வியா? மனிதத்தை வளர்த்து அன்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் கல்வியை நிலைநாட்டுவோம்.

- கீதபொன்கலன், ஆனைக்கோட்டை.

# கோவா இலைகளை வெட்டி பயிரழிவை ஏற்படுத்தும் கருவண்டுகள்

## முறையான களை முகாமைத்துவம் இருப்பின் நல்ல அறுவடை கிடைக்கும்

**யாழ்.**குடாநாட்டில் கோவாப்பயிர் பரந்து பட்ட அளவில் செய்கை பண்ணப்பட்டு வருவது எம்மூர் கமக்காரர்களின் திறனையும் இப் பயிருக்கான அதிகரித்த தேவையையும் காட்டுகின்றது.

பொதுவாக, இப்பயிர் குளிர்கால நிலைமைகளில் செய்கை பண்ணக்கூடிய பயிராக



இனங்காணப்பட்ட போதிலும் எமது மண்ணில் இது சிறப்பாக செய்கை பண்ணப்படுகிறது.

இந்தப் பயிர்ச்செய்கையில் எம்மூரவர்களுக்குத் தலையிடி கொடுக்கும் விடயமாக அமைவது பூச்சிப்பீடை பிரச்சினையொன்று தான். பூச்சி அரித்திராத அல்லது துளையில்லாத முழுமையான கோவாவைக் காண்பது அரிதாகவே உள்ளது. இவ்வாறான பூச்சி உண்ட பகுதி இலைகளை நீக்கப் போய் கோவாவின் அளவு சிறிதாகிச் செல்வதைத் தவிர முழுமையாக பூச்சித் தாக்கமில்லாத கோவாவைப் பெற முடிவதில்லை

இத்தகைய தலையிடிக்கு மகுடம் வைத்தாற் போல கோவாப் பயிரில் (படம்-1) சிறிய கருவண்டின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மருதனார்மடம், ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் இந்தக் கருவண்டின் தாக்கம் அதிகரித்த அளவிலும், கோவாப் பயிரின் ஒவ்வொரு இலையிலும் காணப்படுகின்றது.

இந்தச் சிறிய கருவண்டினது (Flea beetle) நிறைவுடலிகள்(adults) கோவா இலையை வெட்டியரித்து உண்ணுவதனால் இலை கண்ணறை போல ஆகிவிடுகின்றன. (படம்-2) ஒரு இலையில் ஏறத்தாழ 20-25 வண்டுகள் ஆற அமர உட்கார்ந்து சேதத்தை ஏற்படுத்துகின்றன. நிறைவுடலிகளான கருவண்டுகளே கோவாப்பயிரில் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இந்த வண்டுகள் 2.5-3 மி.மீ. அளவுடையனவாகவும் கருநீலம் கலந்த கருமை நிறமாகவும் காணப்படுகின்றன.

இதில் வியப்பென்னவென்றால் இக்கருவண்டுகள் கோவாப் பயிரில் முட்டையிட்டு இனம் பெருக்குவது குறைவு. ஆனால், ஒன்று சேர எல்லா வண்டுகளும் கோவாப்பயிருக்குப் படையெடுத்து, முழுமையாக ஆக்கிரமித்து கோவா இலைகளை வெட்டியுண்ணுவதனால் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் இவற்றைக் கட்டுப்படுத்த பல கமக்காரர்கள்



தமக்குத் தெரிந்த பலவகையான பூச்சிநாசினிகளைத் தெளித்தும் பலனேதுமில்லாமல், இச்சிறிய வண்டுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றார்கள்.

**கோவாவில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அதிகம்**

இந்தச் சிறிய கருவண்டுகளை Phy llotreta SP (படம்-3) என பெயரிட்டுள்ளனர். அளவில் என்னவோ சிறிய வண்டுகளாக இருந்த போதிலும் இளம் கோவாப்பயிரில் இவை ஏற்படுத்தும் சேதம் மிகவும் பெரிது. இவ்வண்டுகளை அலட்சியப்படுத்தினால் கோவாப்பயிரினை முற்றுமுழுதாக சாப்பிட்டு ஏப்பம் விடக்கூடியனவாக உள்ளதோடு கோவாப்பயிரின் தலை உருவாவதில் பாதிப்பையும் ஏற்படுத்தி



விடும்.

இக் கருவண்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவை படையெடுக்கும் தன்மை, எங்கிருந்து வருகின்றன போன்றவற்றை சற்று ஊன்றி அவதானியுங்கள்.


வியப்பான சமாச்சாரம் இதுதான். இச் சிறிய கருவண்டுகள் முட்டையிட்டு இனம் பெருக்குவதற்கு தயிர்வேளை, தயிர்வளை அல்லது வெள்ளைவேளை (Gynandropis SP) (படம்-4) எனப்படும் களையினை ஆதாரமாகக் பயன்படுத்துகின்றன. இத்தகைய களைகள் கோவா பயிரிடும் நிலத்திலும் அதனை அண்மித்த வரம்புகளிலும் வயற்பரப்புகளிலும் அதிகமாக வளர்ந்திருப்பதைக் காணலாம். தயிர்வேளையின் இலைகளிலும் இக்கருவண்டின் சேதத்தைக் காணலாம்.

**பூச்சிநாசினிகளை மாறி மாறி விசுறுவதனால் மட்டும் பயனில்லை**

வெறுமனே பூச்சி நாசினிகளை மாற்றி மாற்றி கோவாப்பயிருக்கு விசுறுவதால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. பூச்சிநாசினி விசிறும் போது இத்தகைய களைகளுக்கும் சேர்த்துத் தான் விசிற வேண்டும். இது மட்டும் போதாது. தயிர்வேளை போன்ற களைகளை மறக்காது களையெடுக்கவும் வேண்டும். இத்தகைய களைகள் பயிர் நிலத்திலும், வரப்புகளிலும் மற்றும் அண்மித்த பயிர்ச்செய்கை பண்ணப்படாத இடங்களிலும் வளரவிடாது அழித்து விடுதல் நன்று. இக்களைகள்தான் இக்கருவண்டுகள் அதிகமாகப் பெருக்கமடையும் தளமாக அமைந்து பின் கோவா பயிர் செய்யும் இடங்களுக்கு வண்டுகளின் சேதமதிகரிக்க அடிப்படைக் காரணமாகவும் அமைகின்றன. எனவே தான் களை முகாமைத்துவம் மிகவும் அவசியம்.

கோவா மட்டுமல்லாது முள்ளங்கியிலும் இப் பூச்சியின் தாக்கம் காணப்படுகின்றது. இது தவிர நாய்க்கடுகு என்ற களையிலும் இப் பூச்சி பெருகுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

களையெடுப்பு செய்து முடித்துவிட்டீர்களா? இப்போது இக் கருவண்டைக் கட்டுப்படுத்த உங்களுக்குத் தெரிந்த பூச்சிநாசினிகளைக் கண்டபடி விசிறாதீர்கள். இக் கருவண்டினைக் கட்டுப்படுத்த கார்பரில் (Carbaryl 85% WP) என்ற பூச்சிநாசினியை ஒரு லீற்றர் நீரில் 20 கிராமினை கரைத்து விசிறலாம். திரவ நிலையில் கிடைக்கும் கார்ப்பரில் பூச்சிநாசினியை 10 லீற்றர் 25 மி.லீ.என்ற அளவில் கலந்து விசிற



லாம். என்டோசல்பான் ( Endosulfan 350 g/IEC) என்ற பூச்சிநாசினியை 10 லீற்றர் நீருக்கு 75 மி.லீ.என்ற அளவில் கலந்தும் விசிறலாம்.

எந்த வகைப் பீடைநாசினிகளாக இருப்பினும் கோவா அறுவடை செய்வதற்கு 20 நாள்களுக்கு முன்பே இவற்றைத் தெளிப்பதை அறவே நிறுத்திவிடவும்.

*கலாநிதி கு.மிகுந்தன்,*
*தலைவர், விவசாய உயிரியல் துறை,*
*விவசாய பீடம்,*
*யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்*

# தனி மனிதப் போட்டி, பகைமைகள் சமூகச் சீரழிவாக மாற அனுமதிக்கலாமா?

இறைவன் கொடுத்த மகத்தான உயிரைப் பறிக்கவோ, அழிக்கவோ, எவரையும் தீர்ப்பிட்டு நினைத்த மாத்திரத்தில் தண்டனை வழங்கவோ உடைமைகளை நாசப்படுத்தவோ எவருக்கும் அதிகாரம் இல்லை. இவை கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டவை. தவறுகளை விசாரித்து தீர்வு வழங்க நீதிமன்றங்கள் இருக்கும்போது எழுந்தமான முடிவுகள் தேவையற்றது.

தமிழர் தாயகம் அமைதியாக இருந்த, இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கு முந்திய காலத்தில் கொலைகள், கொள்ளைகள் அரிதாகவே இடம்பெற்றன. அவ்வாறு ஒரு கொலையோ, கொள்ளையோ நடந்தாலும் அது பேரதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் கணடனத்துக்கும் உரியதாகக் கருதப்படும். மனித உயிருக்கு உயர்ந்த மதிப்பும் பெறுமதியும் உத்தரவாதமும் கொடுக்கப்பட்டது.

இவற்றையும் மீறி போதையிலோ, தீராத பகைமையிலோ, அங்கொன்றுமிங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடந்தாலும் பயப்பீதியுடன் அதை மக்கள் வெறுக்கும் நிலை காணப்பட்டது.

**அன்று ஒரு காலம்**

மிகவும் பரபரப்புடன் பேசப்பட்ட கொலையொன்று 35 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றது. கிளிநொச்சிப் பகுதியில் கோகிலாம்பாள் என்ற பெண் தனது காதலுக்குத் தடையாக இருந்த கணவரைக் கொன்று எருக்குவியலுக்குள் புதைத்தாள். ஆனால் இன்று நிலைமைமாறி பல்வேறு தரப்பினரும் ஆண், பெண், இளைஞர், முதியோர், சிறுவர் என்று பாராமல் கொலைகளிலும், அச்சுறுத்தல்களிலும் வன்முறைகளிலும் ஈடுபடும் சம்பவங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த முதலாம் திகதி (01.03.2006) கொக்குவில் பகுதியில் ஒரு குடும்பப்பெண் இன்னொரு குடும்பப் பெண்ணைக் கத்தியால் குத்திக் கொலைசெய்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. அதுவும் காணித்தகராறு காரணமாக இடம்பெற்ற இக்கொலையில் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தைக் கண்ட யுவதியையும் பலமாகத் தாக்கியுள்ளார் கொலையாளி என சந்தேகிக்கப்படும் பெண்மணி.

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ். கில்னர் வீதிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்துவந்த 55 வயதுப் பெண் ஒருவரை வீட்டினுள் நுழைந்த மற்றொரு பெண் கண்மூடித்தனமாக கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்து தப்பிச் சென்றுள்ளார். பட்டப்பகலில் இச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இதற்கிடையில் கடந்த ஆண்டு ஆனைக்கோட்டைப் பகுதியில் வயோதிபத் தாயொருவரை மனநோயாளி என்று கூறப்படும் மகள் கொலைசெய்து கிணற்றடியில் புதைத்துள்ள சம்பவம் இடம்பெற்றது. நீதி நிர்வாகத்துக்கு பெரும் சவாலான நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

**பெண்களின் பெருமை எங்கே?**

தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகள் கலாசாரம், பண்பாடு, ஆன்மீகம், மனித மாண்புகள் கேள்விக்குறியாகிவிட்டதோ என எண்ணத்தோன்றுகிறது. பெண்கள் மென்மையானவர்கள், அமைதியானவர்கள் என்ற கருத்து ஒரு சிலரால் மாற்றப்பட்டு விடக்கூடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. சிறு பிணக்குகளுக்கும், தேவைகளுக்கும் பாரிய சம்பவங்களில் ஈடுபடுவது எதிர்காலத்திற்கு உகந்ததா?

பண்டைய இலக்கியங்களில் பல வீரதீரப் பெண்மணிகள் தோன்றியிருக்கின்றனர். நீதி கேட்டுக் கண்ணகி மதுரையை எரித்தாள். கூனியின் சூழ்ச்சியால் இராமன் காடுறைந்தான். சூர்ப்பனகையின் மோகத்தால் இராவணன் சீதையைக் கடத்தக் காரணமாய் இருந்து மூக்கறுபட்டான். இவை அநீதிக்கெதிராகவும் ஆட்சி மோகத்திலும் செயற்பட்ட பெண் பாத்திரங்கள்.

ஆனால் இன்றைய பெண்களில் சிலர் வன்மனப் போக்குகளுடன் வேண்டப்படாத செயல்களில் இறங்குவது அனைவரையும்; கவலையும், விசனமும் கொள்ளவைத்துள்ளது.

ஆனால் இதைவிடவும் ஆண்களே முன்னணியில் நிற்கிறார்கள். பெரியோரும், இளைஞரும் கொலைகளிலும், அடி,குத்து , வெட்டுகளில் பெருமளவு ஈடுபட்டுவருகிறார்கள். இரு நபர்களுக்கிடையே முரண்பாடு என்றால் அவர்களுக்குப் பின்னால் பல 'பிரெண்ட்ஸ்' அணிதிரண்டு பெரும் குழு மோதல்களில் இறங்கி உயிர், உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது வழக்கமாகிவிட்டது. எம்மைத் தட்டிக்கேட்க யார் உண்டு என நினைக்கிறார்கள் போலும்.

மனித உயிரின் மாண்பும் பெறுமதியும் உணரப்படுவதில்லை. கஷ்டப்பட்டுத் தேடிய உடைமைகளை அழிப்பது அடாவடி இல்லையா? தயவு தாட்சணியம், இரக்கம், புரிந்துணர்வு இருந்தால் சச்சரவுகளை பேசித் தீர்க்க முடியாதா?இவை சினிமாவை அடியொற்றிய பாணிகளா? அல்லது மனத்தாக்கம், வன்மம் தீர்க்கும் காழ்ப்புணர்வு, மனநோய்ப் பாதிப்புக்களா?

விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் பல விலைகொடுத்து வரும் இவ்வேளையில் தனிமனித, சமூக, போட்டி பகைமைகளில் மூழ்கி அழிவுறுவது நியாயமா எனக் கூறினார் ஒருவர்.

இந்நிலை தொடர்பாக மேலும் ஒரு பெரியவர் கருத்துக் கூறுகையில்:

குடாநாட்டில்சிவில் நிர்வாக நடைமுறைகள், சட்டம், ஒழுங்கு சீரின்மையும் குற்றவாளிகள் பணத்தால், செல்வாக்கால் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. மனித உயிரை மிருகங்களைப்போல கருதுவதும் கொலை செய்வது பாவமில்லை என்ற கருத்து வளர்ந்து வருவதுமே இவற்றிற்குப் பின்னணியாக இருக்கிறது- என்று கூறினார்.

**மன்னிக்கும் மனோபாவம்**

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தமக்கும் பாதிக்கப்படுவோருக்கும் ஏற்படும் பின் விளைவுகளைச் சிந்திப்பதில்லை. சிறு தவறுகளை பெரிதுபடுத்தாது மன்னிக்கும் மனநிலையை உருவாக்க வேண்டும். மன்னிப்பதும் ஒருவர் திருந்த நாம் வழங்கும் உளவியல் ரீதியான தண்டனையே.

குறை, குற்றங்களை சீர்ப்படுத்த நீதி வழங்க உரிய நிர்வாகக் கட்டமைப்புகளை நாடி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதே மனித இனம் ஒரு விழிப்புள்ள, நாகரிகமுள்ள மக்களாக வாழ வழி வகுக்கும்.

மனிதத்திற்குகெதிரான சமூக, தனிநபர் வன்முறைகளைத் தடுக்க பாதுகாப்பு, நீதி, நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் உடனடிக் கவனம் எடுத்து மக்கள் அச்சமற்று வாழ வழி சமைக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும். நீதியை, சட்டத்தை விரைந்து நிலைநாட்டக் கூடிய உறுதியான நிர்வாக அமைப்பொன்றே இவற்றைக் கட்டுப்படுத்தும் சக்தியாக அமையும்.

**செய்திக்கட்டுரை**
**-எஸ். யேசுதாஸ்**
**(கொழும்புத்துறைச் செய்தியாளர்)**




பிரிட்டிஷ் பிலினஸ் ஸ்கூலின் ஆதரவுடன் அரியாலையிலும் புலோலியிலும் உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காகவும், வறுமை காரணமாக பாடசாலை செல்ல முடியாத மாணவர்களுக்காகவும் விசேட பாடசாலைகள் (God own Children) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. அரியாலையில் திறவப்பட்ட பாட சாலையை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் ஸ்டீபன் சுந்தர்ராஜ் திறந்து வைப்பதையும், புலோலியில் திறவப்பட்ட பாடசாலையை சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய திருமதி விஜயராணி ருத்ரேஸ்வரன் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். முகாமையாளர் ம. நிகன், நிர்வாக அலுவலர், செல்வி ஏ.எஸ்.மெற்றில்டா ஆகியோரும் படங்களில் உள்ளனர். (எ)


**ரேடியோ, ரீ. வி.**

**தொழில்நுட்பவியலாளர்கள் தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு ரேடியோ, ரீ.வி. பழுதுபார்க்கும் அனுபமுடைய தொழில்நுட்பவியலாளர்கள் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் கொழும்பு பகுதிகளில் வேலை பார்க்க விருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 2834, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.


# நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதிக்கு நேற்று உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மார்ச்20

இந்திய வல்லாதிக்க அரசுக்கு எதிராக உண்ணா நோன்பு இருந்து உயிர்த்தியாகம் செய்த நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதியின் நினைவு தினத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகளும் தமிழீழ நாட்டுப்பற்றாளர் தினமும் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நேற்று எழுச்சியு டன் அனுஷ்டிக்கப்பட்டன.

நேற்று நண்பகல் உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த எழுச்சி நிகழ்வு நடைபெற்றது.

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரினை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்கியல்துறை விரிவுரையாளர் கதிரமலை, முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் இராமஜெயம், வணிகத்துறை விரிவுரையாளர் திலகரட்ணம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தொழில்நுட்ப நிறுவனத்தின் பதில் அதிபரும் பதில் பணிப்பாளருமான கருணாநிதி ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மாணவர்கள், விரிவுரையாளர் கள் மலரஞ்சலி செலுத்தினர். (த-86)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பொதுமக்கள் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் (படம்: சமூகசேவை அமைச்சு)

## சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்தும் பணிகள் ஆரம்பம்

**அமைச்சின் அறிக்கையில் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமூக நலத்துறை சார்ந்த திட்டங்களை குடா நாட்டில் நடைமுறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுவருகின்றார் என்று அமைச்சு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளினால் விதவைகளான பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பிரதேசம் தோறும் தையல் பயிற்சி நிலையங்களை நிறுவவும் - அவற்றிற்கு ஒருதொகுதி தையல் இயந்திரங்களை வழங்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினமும் ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் அமைச்சரைச் சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து அவரிடம் முறைப்பாடு செய்தனர் என்றும் - இத்தகைய முறைப்பாடுகளுக்கு உடனடியாகவே தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது என்றும் -அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிவமயம்

**திருமண வரவேற்புபசார அழைப்பு**

அன்புடையீர்!

சாவகச்சேரி சிவன் ,குப்பிளான் கற்கரை விநாயகர் அருளோடு, விடத்தற்பளை சம்பாவெளி விநாயகப் பெருமான் துணைகொண்டு சிலாபம் வடிவாம்பிகா சமேத முன்னைநாதர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற திருமணம்




மணமகன் **ஜெகன்**

மணமகள் **அபிரா**

புதுமணத் தம்பதிகளின் வரவேற்புபசாரம் முதலாம் கட்டையடி, கல்வயல், சாவகச்சேரி மணமகள் இல்லத்தில் 22.03.2006 புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற விருப்பதால் அத்தருணம் உறவினர்கள், அன்பர்கள், குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி எங்களை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ. ஸ்ரீமதி ஸ்ரீநிவாசக் குருக்கள்
56/26, தாப்பாவத்தை,
சிலாபம்.

-: சுபமஸ்து :-

ஸ்ரீ. ஸ்ரீமதி நி. நடராஜக்குருக்கள்
முதலாம் கட்டை, கல்வயல்,
சாவகச்சேரி.

(28336)
(54-11-45)



**4ஆம் ஆண்டு நினைவலைகள்**



மலர்வு
05 - 04 - 1934

உதிர்வு
02 - 04 - 2002

**அமரர் கந்தையா இராசலிங்கம்**

**(லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

*மன்னவன் குடியிருந்த மாளிகை - இன்று*
*மாயமாய் மறைந்து போனதேன்*
*நிஜமாய் நின்ற நின்னுருவம் - இன்று*
*நிழலாய்த் தோன்றி மறைவதேன்.*

*எங்கள் ஊனாய் உடலாய் மறைந்து நிற்கும் எம் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

இல.14, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(48342)
(54-11-45)

குடும்பத்தினர்.



**மரண அறிவித்தல்**

*திருமதி செல்லக்கண்டு சந்திரோதயம்*



அச்சுவேலி தெற்கு, நாவலம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு சந்திரோதயம் நேற்று (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லக்கண்டுவின் அன்பு மனைவியும் ஸ்ரீகுகன் (ச.தொ.ச.யாழ்ப்பாணம்), சுரேன், சுகன்ஜா, ஹரிகரன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் அற்புதரமணி (கனடா), காலஞ்சென்ற மதி வதனி மற்றும் சகலகலாநிதி (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), கலாவதி (ஆசிரியை, ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியா சாலை), அற்புத வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரமலர் (கனடா), குணரத்தினம் (R.D.A.), பத்மினிதேவி (ஆசிரியை, ஆவரங்கால் மகாஜன வித்தியாசாலை), ரவீச்சந்திரன், விஜய ஸ்ரீதரன், காலஞ்சென்ற ஆசை, மற்றும் இரத்தினம், இராசு, நேசம், சாந்தம் ஆகியோரின் மைத்துனியும்சயிந்தவி,ரவிவர்மன் பொன்மாறன், இளங்கீதன்ஆகியோரின் அத்தையும் லக்ஸன், லஸ்மினி ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2006) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலம்பதி,
அச்சுவேலி.

(சி-48440)
(54-11-45)

தகவல்:
செ.ஸ்ரீகுகன் (மகன்).



**அன்றும் இன்றும் என்றும் யாழ் நகரில் தமக்கெனத் தனியிடம் வகித்துவரும்**

**சுப்பலோ**



எப்பொழுதும் தொழில்நுட்பத்துறையில் முன்னணி வகித்துவருகின்றது. அந்தவகையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கையில் முதன்முறையாக அறிமுகமான உலக முதல்தர துரிதகதியில் பிரதியாக்கம் செய்யக்கூடிய FRONTIER - 570 என்னும் இயந்திரத்தைக் கொழும்பில் சென்ற ஆண்டு அறிமுகம் செய்த நாம் இப்பொழுது அதே தொழில்நுட்பத்துடன் கூடிய FRONTIER - 570 என்ற இயந்திரத்தை யாழ். நகரில் முதன்முறையாக அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதில் புகைப்படச்சுருள், FLOPPY, CD, MO DISH, ZIP ஆகியவற்றில் இருந்துதுரித கதியில் 3R முதல் 12x18 அளவு வரை தேவைக்கேற்ற அளவுகளில் சிறந்த முறையில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மூலம் பிரதியாக்கம் செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம்:

**ரவி டிஜிட்டல் கலர் லாப் அன்ட் சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்**

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 2082

(C/48442) (24)



யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவின் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வும் மனைப்பொருளியல் கண்காட்சியும் நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பயிற்சிபெற்ற மகளிர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் பிரதம விருந்தினர் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பொருள்களையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதி மளிர்களையும் படங்களில் காணலாம்.
(படம்: ஒளி அதிரன், நேசன்)

# கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் பெண்கள் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவின் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வும் மனைப் பொருளியல் பொருள் கண்காட்சியும் நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றன.

கூட்டுறவு அபிவிருத்திச் சபையின் கொடியினை கூட்டுறவுச் சபைத் தலைவர் ஏ.கனகசபாபதி ஏற்றினார். மங்கள விளக்கை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் ஏற்றிவைத்தார்.

மனைப் பொருளியல் பொருள்காட்சிக் கூடத்தினை யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றன.

கூட்டுறவுக் கீதம் இசைத்தல், வரவேற்புரை, தலைமையுரை, சிறப்பு விருந்தினர் பிரதம விருந்தினர் உரைகள் இடம்பெற்றன.

பயிற்சி பெற்ற மகளிர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இறுதியில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (3-7)

# மருத்துவபீட மாணவர்களுக்கு ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக விடுதி

## கொரிய அரசு 18 கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கான விடுதி நகர்ப் பகுதியில் போதனா வைத்தியசாலைக்குச் சமீபமாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. உயர்கல்வி அமைச்சு நேரடியாக இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கென 18 கோடிருபா நிதியுதவியை வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் இணங்கியுள்ளது என்றும் -

யாழ். மருத்துவமனைக்கு அண்மையில் உள்ள வளாகம் ஒன்றில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த விடுதி சுமார் இருநூறு படுக்கைகள் கொண்டதாக அமையும் என்றும் - பதில் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (3-14)

# விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் பதவி விலகுகின்றார்?

கொழும்பு, மார்ச் 20

விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியிலிருந்து ஜீவன் குமாரதுங்க எந்த நேரமும் விலகலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகத்தின் ஒரு பிரிவில் நீண்ட காலமாக நடந்து வந்ததாகக் கூறப்படும் கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக இரகசிய பொலீஸ் விசாரணையின் மூலம் கசப்பான பல விவரங்கள் வெளியானதன் எதிரொலியாகவே இவர் பதவி துறக்க முன்வந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

அண்மையில் இவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகைக்கு அழைத்து இந்த விடயம்பற்றி விரிவாகப் பேசியுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

விளையாட்டுத்துறை அமைச்சின் பேரால், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் செல்வதற்காக தூதரகங்கள் மூலம் கடவுச் சீட்டுகளைப்பெற்று,அவற்றை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான 'விசா'க்களாக பெருந்தொகைப் பணத்துக்கு விற்பனை செய்வதன் மூலம் இந்த மோசடி அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

இந்த மோச்டி தொடர்பாக கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் கொடுத்ததாகக் கூறப்படும் தகவல்களையடுத்தே அமைச்சரை ஜனாதிபதி தனியாக அழைத்துப் பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சின்போது அமைச்சர் பதவியைத் துறக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனால், அமைச்சு வட்டாரங்கள் அதனை அடியோடு மறுத்துள்ளன.

(க-3)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்படவில்லை

## ரணிலிடம் நோர்வே நேரில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

ஜெனீவாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப்பேச்சின்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எந்தவிதமான திருத்தமும் செய்யப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நோர்வே தரப்பு தெரிவித்துள்ளது.

ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை தெரிவித்தார்.

உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நோர்வே சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மை அங்கு சந்தித்தபோதே எரிக்சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு ரணிலிடம் தெரிவித்துள்ளார் என திஸ்ஸ அத்தநாயக்க தகவல் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்புக் குறித்து திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்ததாவது -

ஜெனீவாப் பேச்சுக்களில் கலந்து கொண்ட அரசுக்குழு கொழும்பில் வைத்து தெரிவித்ததுபோல், பேச்சு மேசையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை. மாறாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பது தொடர்பாகவும், அமைதி முயற்சி தொடர்பாகவும் பேசப்பட்டது.

"இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தவிர்க்க இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்றே நோர்வேயும், உதவி வழங்கும் நாடுகளும் விரும்புகின்றன. இலங்கை இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வு தொடர்பாக இந்தியாவுடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார் - என்றார். (க-3)

# இங்கிலாந்து 400...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து 8ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ஷாவுடன் ஹோக்கார்ட் களம் இறங்கினார். இவர் முதல் பந்திலேயே ஆட்டம் இழந்தார்.

அடுத்து 9 ஆவது விக்கெட்டுக்காக அன்டர்சன் களம் இறங்கினார். இவருடன் இணைந்து ஷா சிறப்பாக விளையாடினார். இவர் 88 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்பஜனின் பந்தில் டிராவிட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து கடைசி விக்கெட்டாக பெனாசர் களமிறங்கினார். இங்கிலாந்து 400 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பெனாசர் ஹர்பஜனின் பந்தில் யுவராஜ் சிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார். இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா தரப்பில் ஸ்ரீசந்த் 4 விக்கெட்டும், ஹர்பஜன் 3 விக்கெட்டும், பட்டேல் 2 விக்கெட்டும், கும்ப்ளே ஒரு விக்கெட்டையும் கைப்புற்றினர்.

பின்னர் இந்திய அணி முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. இந்திய வீரர்கள் வரிசையாக சரியத் தொடங்கினர். ஷேவாக் 6, ஜாபர் 11, டென்டுல்கர் 1 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

4 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக டிராவிட்டுடன் யுவராஜ் சிங்களம் இறங்கினார். இவர் ஆட்டம் முதலே அடித்து விளையாடினார். மறுபுறம் நிதானமாக விளையாடினார். இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 37 ஓவரில் 89 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது 2 ஆவது நாள் ஆட்டம் முடிவுற்றது. டிராவிட் 37 ஓட்டங்களுட னும் யுவ ராஜ்சிங்.32 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் ஹோக் கார்ட் 2 விக்கெட்டையும் அன்டர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (3)

## மரண அறிவித்தல்கள்

### முதலித்தம்பி கிருபாலினி (கிருபா)



இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட முதலித்தம்பி கிருபாலினி 17.03.2006 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் முதலித்தம்பி - கனகமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் கமலேஸ்வரி தயாநிதி, அருணகிரி (டென்மார்க்), கண்ணப்பா (நோர்வே), முருகானந்தராசா (ஆனந்தன் - பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், நடராசா, குமாரசாமி (தங்கராசா), செல்வரஞ்சினி (ரஞ்சினி), பிருந்தா (மஞ்சு), சிவகாமி (வவா) ஆகியோரின் மைத்துனரும் ஆர்த்திகா (தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), தர்சிகா, கார்த்திகா, அன்பரசி, பார்த்தீபன், அபிராம், தசாங்கினி ஆகியோரின் மாமனாரும் தினேஸ், கீர்த்தன், அஜன் (டென்மார்க்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு.
(48344)
(17-12-25)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாக்கியலெட்சுமி - புலேந்திரன் (தேவி)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புலேந்திரன் - பாக்கியலெட்சுமி (தேவி) அவர்கள் நேற்று (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புலேந்திரனின் அன்பு மனைவியும் பாலசிங்கம் (மறுவன்புலோ) - ரெத்தினம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அன்னலெட்சுமி மற்றும் அருமைநாதன் (பிரான்ஸ்), தனலெட்சுமி, செல்வராணி, ருக்குமணி, சத்தியபாமா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் விமலாதேவி (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம், தேவராஜ், கந்தசாமி, கோணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் சுவேந்திரன், மதிவதனி, சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் தாயும் கயல்விழி, சந்திரகுமார், குணாளன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் நிரோஜா, வினோஜன், பிரதாயினி, பிரபாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தம்பு - சிவபாக்கியம், கணேஸ் - பவானி, விசாகரத்தினம் வசந்தாதேவி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.03.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் சுருவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
புளியங்கூடல்.
(48345)
(17-12-25-30)
தகவல்:
க.புலேந்திரன்
(கணவர் - அல்லா).

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கணபதிப்பிள்ளை பரமானந்தம்

இ.போ.சவின் தலைசிறந்த நடத்துனரே!
நேற்றுவரை எம்மோடு
நண்பனாய், மூத்தோனாய் கலகலப்பாய்
இருந்து
இன்று மாயமாய் மறைந்தவரே!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகளுடன்
நாம் விழியில் நீருடன்...

(சி-48444) (2517-12)
- 767, பஸ் இலக்க உறவுகள்.


நாகம்ஸ் சுன்னாகம்
ஜெயம்ரவி, காம்னா, பிரகாஷ்ராஜ்
இதயத் திருடன்

காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
மெர்க்குரிப் பூக்கள்
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பி.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்
தங்கர் பச்சான், நவ்யா நாயர்
நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது...

# புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர் இந்த வாரம் இலங்கை வருகிறார்

கொழும்பு,மார்ச் 20

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சுவீடன் நாட்டைச்சேர்ந்த உல்ப் ஹென்ரிக்சன், இந்த வாரம் கொழும்புக்கு வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புக்குழுவின் தலைவராக எதிர்வரும் முதலாம் திகதி உத்தியோக பூர்வமாகப் பதவியேற்கவுள்ள ஹென்ரிக்சன், இங்குள்ள கண்காணிப்பாளர்களைச் சந்திக்கும் பொருட்டே ஒருவாரம் முன்னதாகவே இலங்கைக்கு வரவுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், தற்போதைய கண்காணிப்புக் குழுவின் தலைவரான ஹொக்லெண்டைச் சந்திக்கவுள்ள ஹென்ரிக்சன், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் தற்போதைய நிலைகுறித்து அவருடன் கலந்துரையாடுவார் - என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலென் ஒலப்டொட்டிர் தெரிவித்தார்.

# பாதாள உலக கோஷ்டியால் வாசுதேவாவுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு,மார்ச் 20

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் முதன்மை வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் வாசுதேவ நாணயக்கார, தனது தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமுடியாதபடி பாதாள உலகக் கோஷ்டியினர் இடையூறு விளைவிக்கின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கொழும்பு புளூமண்டல் பகுதி உட்பட சில இடங்களில் வாசுதேவ நாணயக்காரவால் சுதந்திரமாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது இருப்பதாக கூறப்படுகின்றது.

தொட்டலங்கா மற்றும் புளூமண்டல் ஆகிய பகுதிகளில் உள்ள குப்பைமேடுகளை அகற்றுவது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார கொண்டிருக்கும் நிலைப்பாடே பாதாள உலகக் கோஷ்டியினரின் மிரட்டல்களுக்குக் காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பின் சுகாதாரத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாக விளங்கும் இந்தக் குப்பை மேடுகளை அகற்றி, நன்மை பயக்கும் வகையில் அவற்றை மீளப்பயன்படுத்தும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் அத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை இரண்டு சீன நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் போவதாகவும் வாசுதேவ தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்திருந்தார்.

இந்த இரண்டு குப்பைமேடுகள் மாத்திரமின்றி அன்றாடம் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளும் இந்த நிறுவனங்களிடமே மீள்பாவனைக்காக ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், கொழும்பில் குப்பைகளைச் சேகரித்து அவற்றை வகைப்படுத்தும் வியாபாரத்தில்பாதாள உலகக் கோஷ்டியினரும் சிலர் ஈடுபட்டுள்ளனர். புளூமண்டல் பகுதியில் உள்ள குப்பைமேட்டு வியாபாரத்தில் பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே வாசுதேவ நாணயக்கார பாதான உலகக் கோஷ்டியினரிடம் இருந்து அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# இலங்கையின் அமைதி முயற்சிகள் தனித்துவ அம்சங்கள் மிக்கவை

## அனுசரணைக்கான புதிய தூதர் போவர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 20

''இலங்கையில் நாம் மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகளை ஏனைய நாடுகளில் இடம்பெறும் அமைதி முயற்சிகளுடன் ஒப்பிடமுடியாது. இது தனித்துவமான அம்சங்களைக்கொண்டது'' - இப்படி இலங்கைக்கான நோர்வேயின் புதிய சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர் தெரிவித்துள்ளார்.

''ஏனைய நாடுகளில் மேற்கொண்ட சமாதான முயற்சியில் கிடைத்த அனுபவங்களை இலங்கையின் சமாதான முயற்சிகளில் அப்படியே பிரயோகிக்க முடியாது. இலங்கைப் பிரச்சினையிலுள்ள தனித்துவமான அம்சங்களை கவனத்தில் கொண்டே சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றோம்.

''என்றாலும், பலஸ்தீனத்தில் மட்டுமல்லாது மேலும் பல நாடுகளின் சமாதான முயற்சிகளில் நாம் பங்கெடுத்துக் கொண்ட நீண்டகால அனுபவம் இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல உதவும் என நம்புகிறோம். எனது இலங்கை விஜயம் குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் ஆலோசனை நடத்திவருகிறேன்'' - என்றார் போவர்.

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் அனுப்பியுள்ளோம்.

அவரின் பதில் கிடைத்த பின் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பணியாற்றச் செல்வர் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடந்த சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (3)

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் செயற்பாட்டை நோக்கும் போது எமக்கு நம்பிக்கையீனம் ஏற்படுகின்றது என்றும் - தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஜெனீவா உடன்பாட்டை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவேண்டும் என்று கோரியும் மக்களை இணைத்து மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அத்துடன்,, நாடாளுமன்றத்துக்குள்ளும் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் -

சர்வதேசத்துக்கு அரசின் போக்கை விளக்கிக் கூறுவது என்றும் - முடிவு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இம்மாத இறுதியில் மீண்டும் கூடி முடிவுசெய்யவிருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்படாவிட்டால், முழு அளவில் பிரசாரங்களை மேற்கொண்டு தமிழ்த் தேசியத்தன் ஒட்டுமொத்த ஆதரவை வெளிப்படுத்துவது என்றும் முடிவுசெய்யப்பட்டது - என்றார். (3)

## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழைமைவாய்ந்தவை. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்கள் இலங்கைக்கு பொருத்தமற்றவையாகவும் காணப்படுகின்றன.

எனவே, ஆசிய நாடுகளில் இருந்தே ஆயுதங்களை கொள்வனவு செய்ய இலங்கை அரசு விரும்புகிறது. ஆயுதக் கொள்வனவு தொடர்பாக சீனாவின் 'நொரின்கோ' நிறுவனத்துடன் இலங்கை அரசு ஒப்பந்தம் செய்யவுள்ளது. இதற்காக பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கோட்டபாய ராஜபக்ஷ மாத இறுதியில் சீனா செல்லவுள்ளார்.

உத்தேச ஒப்பந்தத்தின் பிரகாரம் ஓர் ஆண்டுக்குத் தேவையான ஆயுதங்கள் பிரஸ்தாப சீன நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படும்.

மற்றொரு ஆசிய நாடான பாகிஸ்தான் இலங்கைக்கு இரண்டரைக் கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை அண்மையில் வழங்கியிருந்தது - இப்படி அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (க-3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது-16), சிங்கள மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் குருகே ஜேக்கப் (வயது-17), சென். ஜோசப் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சேதுலிங்கம் விஜய் (வயது-17) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

கரையை அண்டியே இவர்கள் குளித்துக் கொண்டிருந்தனர் என்றும், ஆனால் திடீரென வந்து அடித்த அலையால் அவர்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அருகில் குளித்துக் கொண்டிருந்த சிலர் இவர்களை மீட்க முயன்றும் அது பலனளிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

நால்வரின் சடலங்களும் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக திருகோணமலை அரச வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருநதன (க-3)

# இரண்டாம் கட்டப் பேச்சை நடத்த சுவிஸ் அரசு இடம் தேடுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்திற்குமிடையில் எதிர்வரும் ஏப்ரலில் ஜெனீவா நகரில் நடைபெறவுள்ள பேச்சுகளுக்கென புதிய இடமொன்றைத் தெரிவு செய்வதில் சுவிஸ் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனரெனத் தெரியவந்துள்ளது.

ஜெனீவா - சட்டியூ டி பொய்ஸி அரண்மனையில் எதிர்வரும் ஏப்ரலில் பேச்சுகள் நடைபெறவுள்ள 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பிறிதொரு நிகழ்வொன்று இவ்வரண்மனையில் நடைபெறவுள்ளதன் காரணமாகவே மேற்படி அரண்மனையில் இரண்டாம் கட்டப் பேச்சுகள் நடைபெறாதென சுவிஸிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை பேச்சுக்கான புதிய இடம் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## தேசிய அரசா? பொதுத் தேர்தலா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது -

புதிய - மாற்று - ஏற்பாடாக தேசிய அரசு ஒன்றை அமைக்க முயல்வதா அல்லது புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடுவதா என்பதை அவர் விரைவில் தீர்மானிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைதி முயற்சிகள் தொடர்பாக சுதந்திரமாக - சுயாதீனமாக - முடிவுகளை எடுத்து செயற்படவிடாமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவரது அரசுப் பங்காளிகளான ஜே.வி.பியினர் இடக்குப்போட்டு வருகிறார்கள். இது குறித்து ஜனாதிபதி சீற்றமும் விசனமும் அடைந்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

தற்போது சமாதான முயற்சிகளின் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றவேண்டும் என வற்புறுத்திவரும் ஜே.வி.பி, ஜனாதிபதி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அடுத்த சுற்றுப்பேச்சுவரை - ஏப்ரல் 19ஆம் திகதிவரை - ஜனாதிபதிக்கு காலஅவகாசமும் வழங்கியிருக்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

ஜே.வி.பியின் இத்தகைய அழுத்தங்களுக்குத் தாம் அடிபணிந்தால் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முடியாமல் போகும் நிலை ஏற்படுவது மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் தாம் பெரும் அபகீர்த்திக்கும், செல்வாக்கு இழக்கும் நிலைக்கும் தள்ளப்படுவார் என்பதையும் ஜனாதிபதி மஹிந்த நன்கு உணர்ந்துள்ளார் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு ஒரேவழி இனிமேலும் ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு ஜே.வி.பியின் ஆதரவில் தங்கி நிற்காமல் விடுவதுதான் என்பதும் ஜனாதிபதிக்கு உறைப்பாகப் புரியத் தொடங்கியிருக்கின்றதாம்.

இதன் காரணமாக ஐ.தே.கட்சியுடன் ஒரு செயற்பாட்டு ஒழுங்குக்கு - ஏற்பாட்டுக்கு - வருவது குறித்து அவர் ஆலோசிக்கிறார்.

அத்தகைய உடன்பாடு அல்லது இணக்கம் ஏற்படுமானால் ஜே.வி.பியை ஓரம் கட்டுவது மாத்திரமல்லாமல், அமைதி முயற்சிகள் விடயத்தில் புலிகளையும் வலுவோடு சமாளிக்கலாம் என்றும் அவர் கருதுகின்றாராம்.

எனவே ஐ.தே.கவுடன் ஒரு செயற்பாட்டு ஒழுங்குக்கு வருவது குறித்து முயற்சிப்பது என்றும் அது பலனளிக்காமல் விட்டால் நாடாளுமன்றத்தை கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றுக்குப் போவது என்றும் ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் எனத் தெரிகின்றது.

எதிர்வரும் 30ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்று முடிந்ததும் இது குறித்து முடிவு எடுத்து செயற்படுத்தும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனீவாவில் நடைபெற்று முடிந்த பேச்சுகளில் எட்டப்பட்ட தீர்மானத்தை செயலில் நடைமுறைப்படுத்தும்படி விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வரும் சூழ்நிலையில் - எதிர்வரும் 30ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பின் பின்னர் இது தொடர்பாக புலிகளுக்குத் திருப்தியளிக்கக்கூடிய சில பிரதிபலிப்புகளை - நடவடிக்கைகளை - ஜனாதிபதி செயலில் காட்டுவார் என்பதும் எதிர்பார்க்கலாம் என ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-3)


THAMPI தம்பி
யாழ் - கொழும்பு - யாழ்
விமானசிட்டைகள்
மலிவு விலைகளில்
யாழ். நகரில்
90, கந்தப்பசேகரம் வீதி யாழ்ப்பாணம்.
T.P: 222 2823, 222 2504, Fax: 222 2040
கொழும்பு நகரில்
296/D4, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P: 0112360959, 011 2360960
Hotline: 0777 382343

கொழும்பு பல்கலைக்கழகத்தின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது,
விண்ணப்ப படிவங்களிற்கும், மேலதிக விபரங்களிற்கும், நேரில் வருக
BIT
Semester 2, Semester 4
மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புக்கள்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன
-MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project




இப்பத்திரிகை நியு, உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




வெளியீடு 01

## முதலாம் தவணைப் பரீட்சை தரம் 11

## மாதிரி வினாப்பத்திரம்


## கணிதம்

திரு. செ. தவராசா யாழ் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)

### பகுதி I ஒரு மணித்தியாலம்


எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

01. சுருக்குக. $-9 \times 7$
02. 2/5 க்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.
03. $(a+b)^2$ இன் விரிப்பைத் தருக.
04. பெறுமானம் காண்க. $(0.03)^2$
05. $x+3=5$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.
06. ஒரு கிலோகிராம் சீனியின் விலை ரூ. 41.00 எனின் 500g சீனியின் விலை யாது?
07. ஒரு பக்கத்தின் நீளம் 5.4cm ஆன சமபக்க முக்கோணி ஒன்றின் சுற்றளவைக் காண்க.
08. கூட்டுக. 1.01+0.101+10.1
09. இந்த வென் வரிப்படத்தில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற் பப் பின்வரும் கூற்றில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.





$P^1 = \{..............\}$

10. $3:5=9:x$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க. (10 புள்ளிகள்)
11. சுருக்குக. $\frac{7}{\sqrt{3}}+\sqrt{3}$
12. தரப்பட்ட வென் உருவைப் பயன்படுத்தி கீறிட்ட இடத்தை நிரப்புக.
    i) $P \cap Q$
    ii) $(P \cup Q)^1$





13. சுருக்குக. $\frac{1}{x-3}+\frac{1}{x+3}$
14. $x=\sqrt{3}$ எனின் $x^2-1$ இன் பெறுமானத்தைக் காண்க.
15. காரணிகளைக் காண்க. $3m-m^2$
16. வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.





17. பெறுமானம் காண்க. $\log_3 81^{1/4}$
18. அடி ஆரை r உம் சாயுயரம் 2r உம் ஆன திண்ம செங்கூம் பொன்றின்
    I) வளைப் பரப்பளவு யாது?
    II) மொத்தப்பரப்பளவு யாது?




19. வரிப்படத்தில் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் காண்க.
    i) AD க்குச் சமனான பக்கம்
    ii) நாற்பக்கல் BCEF இன் சிறப்புப் பெயர்





20. $x^2-8x+$ ............ எனும் கோவை நிறைவார்க்கம் கோவையாகும்.
    i) விடுபட்ட உறுப்பைக் காண்க.
    ii) இக்கோவையை நிறைவார்க்கம் வடிவில் தருக. (20 புள்ளிகள்)
21. எண்கோணியின் ஏழு கோணங்களின் பருமன்கள் முறையே $145^0, 130^0, 122^0, 151^0, 117^0, 109^0, 148^0$ எனின்,
    i) எண்கோணியொன்றின் அகக் கோணங்களின் கூட்டுத்தொகை யாது?
    ii) தரப்பட்ட ஏழு கோணங்களில் கூட்டுத்தொகையைக் காண்க.
    iii) எட்டாவது கோணத்தின் பருமன் யாது?
22. $\frac{7}{\sqrt{3}}+\sqrt{3}$ ஐச் சுருக்கி விடையை, பகுதி எண் விகிதமுறு எண்ணாகத் தருக.
23. வென் உருவில் தரப்பட்டுள்ள தொடை Pயானது 2, 3, 5, 7 ஆகிய மூலகங்களைக் கொண்டுள்ளது. தொடை P யை வேறு மூன்று தொடைக் குறிப்பீட்டு முறையில் தருக.
    i) P =
    ii) P =
    iii) P =




24. தீர்க்க. $2(x-1)-(x+3)=5$
25. தரப்பட்டுள்ள முக்கோணி PQR இல் கோணம் QPR இன் இரு கூறாக்கி PS ஆகும் PS=QS, $P\hat{Q}S=32^0$ எனின் $P\hat{R}Q$ இன் பெறுமானத்தைக் காண்க.




26. i) $a^3+b^3$ எனும் கோவையைக் காரணிப்படுத்துக.
    ii) $13^3+7^3$ என்பதை காரணிபற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.
27. $7x-5y=11$ .............. (i)
    $5x-7y=1$ .............(ii)
    தரப்பட்டுள்ள ஒருங்கமை சமன்பாட்டில் xஇனதும் yஇனதும் பெறுமானத்தைப் பெறாது, x-yஇன் பெறுமானத்தைக் காண்க.
28. $10^x=8$, $10^y=5$ எனின் $10^{x+y}$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையை உபயோகிக்காது காண்க.
29. $T=2\pi\sqrt{\frac{l}{g}}$ எனும் சூத்திரத்தில் gயை எழுவாயாக மாற்றுக.
30. கோணம் $A\hat{B}C=120^o$, BC இலிருந்து 5cm தூரத்திலும், AB, BC இலிருந்து சமதூரத்திலும் BC இற்கு A இருக்கும் அதே பக்கத்திலும் அமையும் புள்ளியைத் தரப்பட்ட உருவில் அமைத்துக் காட்டுக. (30 புள்ளிகள்)





### 2 மணித்தியாலம் பகுதி II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் ஐந்து வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்குக. மேலதிகமான விடைகள் பரீட்சகரால் புள்ளிகள் வழங்கப்படாது வெட்டப்படும்.

01. a) ஒரு மரக்கறி வியாபாரி ஒரு Kg போஞ்சியை ரூ. 40 வீதம் கொள்வனவு செய்து ஒரு Kg 45 ரூ. வீதம் விற்றான்,
    i) அவன் அடைந்த சதவீத இலாபத்தைக் காண்க.
    ii) போஞ்சியின் கொள்வனவுக்கு ரூ. 800ஐ முதலிட்டிருந்தால் அவனுக்குக் கிடைத்த இலாபத்தைக் காண்க.
    III) சுருக்குக. $125^{2/3}$


b) வரிப்படத்தில் காணப்படுகின்றவாறு 24m x 20m அளவுடைய செவ்வக்காணித்துண்டிலே நான்கு மூலைகளிலும் 7m ஆரை கொண்ட கால் வட்டப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளது.




I) காணித்துண்டைச் சுற்றி ஒரு முட்கம்பி வேலியை அமைக்கும்போது அதற்குத் தேவையான முட்கம்பியின் ஒரு வரியின் நீளத்தைக் காண்க.
II) மூலைகளில் அமைக்கப்பட்டுள்ள பூப்பாத்திகளின் மொத்தப் பரப்பளவைக் காண்க.
III) புல் வளர்க்கப்பட்டுள்ள காணிப் பகுதியின் பரப்பளவைக் காண்க.


c) I) சுருக்குக. $(2a+3b)(a-2b)$
II) காரணிப்படுத்துக. $2m^2-2mn+mn-n^2$
III) சுருக்குக. $\frac{1}{x-2}+\frac{1}{(2-x)^2}$

d) 8cm நீளம் கொண்ட AB, BC எனும் இரு சமநாண்கள் 5cm ஐ ஆரையாகவும் Oவை மையமாகவும் கொண்டு வரையப்பட்ட வட்டத்தில் அமைந்துள்ளன. OM ⊥ AB, OM ⊥ BC. எனின், பின்வருவனவற்றைக் காண்க.





விடையைப் பெற்றதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.
I) BM இன் நீளம்
II) OM இன் நீளம்
III) OM இற்குச் சமனான வேறொரு பக்கம்
IV) முக்கோணி BMN எவ்வகையைச் சேர்ந்தது.

e) a ஓர் ஒருமைக் கணியமாக இருக்கும்போது $y=(x+a)^2$ எனும் சார்பின் வரைபானது உருவில் தரப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள வளையியைப் பயன்படுத்தி பின்வருவற்றைக் காண்க.




I) a இன் பெறுமானத்தைப் பெற்று சார்பின் சமன்பாடு.
II) சமச்சீர் அச்சின் சமன்பாடு
III) சார்பின் உயர்வு / இழிவுப் பெறுமானம்
IV) $Y<4$ ஆகவிருக்கும் x இன் பெறுமான வீச்சு.

02. ஒரு குறிப்பிட்ட மண்டபமொன்றில் நடைபெற்ற திருமணத்திற்கு வருகை தந்தோர் அருந்திய உணவு பற்றிய விவரம் பின்வருமாறு காணப்பட்டது.
மதிய உணவு (சோறு) உண்டோர் 495 பேரும் சிற்றுண்டி உண்டோர் 135 பேரும் குளிர்பானம் அருந்தியோர் 215 பேரும் எனக் காணப்பட்டன. அத்துடன் சிற்றுண்டி உண்டோர் அனைவரும் மதிய உணவும் உண்டனர். சிற்றுண்டியை உண்ணாது குளிர்பானம் அருந்தி மதிய உணவு உண்டோர் 125 பேர், மேற்குறிப்பிட்ட மூன்று வகை உணவையும் பெற்றோர் 55 பேர் ஆவர்.




R = (மதிய உணவு உண்டோர்)
T = (சிற்றுண்டி உண்டோர்)
C = (குளிர்பானம் அருந்தியோர்) மேற்போந்த தகவல்களை, தரப்பட்டுள்ள வென்னுருவைப் பிரதி செய்து அதில் குறிப்பிடுக. அதிலிருந்து பின்வருவனவற்றைக் காண்க.

a) I) குளிர்பானம் அருந்தாது சிற்றுண்டியும் மதிய உணவும் பெற்றோர் தொகை
II) மதிய உணவை மட்டும் பெற்றோர் தொகை
III) குளிர்பானம் மட்டும் அருந்தியோர் தொகை
IV) திருமண மண்டபத்திற்கு வருகை தந்தோரில் குறைந்தது ஓர் உணவையேனும் உண்டோரின் எண்ணிக்கை.

b) I) திருமணத்திற்கு வந்தோரில் 38 பேர் நோயின் காரணமாக எவ்வுணவையும் உட்கொள்ளவில்லையெனில், திருமண வைவத்திற்கு வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கையைக் காண்க.
II) திருமணத்திற்கு வந்தோரில் ஒருவர் குறைந்தது இரு உணவையேனும் அருந்தியதற்கான நிகழ்தகவைக் காண்க.


03. I) பெறுமானம் காண்க. $\left(\frac{32}{243}\right)^{2/5}$
II) தீர்க்க $\log 25+2\log x=2\log 50$
III) $\lg 3=0.4771$, $\lg 2=0.3010$ எனக்கொண்டு lg 15 இன் பெறுமானம் காண்க.
IV) சுருக்குக. $\frac{1}{x-2}-\frac{1}{2x^2-x-6}$

04. a மின்பிறப்பாக்கி ஒன்றின் விலை ரூ. 150,000 ஆகும். வாடகைக் கொள்வனவு முறையில் முதலில் ரூ. 78,000 ஐச் செலுத்தி மீதியை ஒவ்வொன்றும் ரூ. 3110 பெறுமதிகொண்ட 36 சம மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியும் மின் பிறப்பாக்கியைக் கொள்வனவு செய்யலாம்.
I) முதல் செலுத்துகையின் பின் எஞ்சிய கடன் பணம் எவ்வளவு?
II) ஒரு மாதத்தில் செலுத்தப்படும் கடனின் பெறுமானம் எவ்வளவு?
III) செலுத்தப்படும் மொத்த வட்டி எவ்வளவு?
IV) வட்டி கணிக்கப்படும் மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
V) மாத அலகு ஒன்றுக்கான வட்டி எவ்வளவு?
VI) வருடவட்டி வீதத்தைக் காண்க.

b) வருட வட்டி 10% படி ஒருவர் ரூ. 12 000 ஐக் கடனாக 1 1/2 வருடங்களுக்கு வழங்குகின்றார். அவர் 6 மாதத்திற்கு ஒரு தடவை வட்டியைக் கணித்துக் கடனுடன் சேர்க்கின்றார்.
I) முதல் 6 மாத முடிவில் தொகை எவ்வளவு?
II) ஒரு வருட முடிவில் தொகை எவ்வளவு?
III) 1 1/2 வருட முடிவில் தொகை எவ்வளவு?

05. a) சுருக்குக. $(x^{-4})^{1/2} \times \frac{1}{\sqrt{x^{-3}}}$
b) பெறுமானம் காண்க. $1/2 \log 9+2\lg 6-3\lg 3+2\lg 5$
உ) மடக்கை வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி,
$E\frac{97.16 \times \sqrt{0.2569}}{(0.9174)^3}$ என்பதில், E இன் பெறுமானத்தைக் கணித்து உமது விடையை மூன்று பொருளுடை ய இலக்கத்தில் தருக.

06. a) I) 4 cm பக்க நீளங் கொண்ட சமபக்க முக்கோணியொன்றின் பரப்பளவைக் கணிக்து.
II) 4 cm பக்க நீளங்கொண்ட ஒழுங்கான நான்முகியொன்றின் மொத்த மேற்றளப் பரப்பளவைக் காண்க.
b) 7cm ஆரையுடைய அரைக் கோளத்திண்மமொன்று : 7cm உள் குறுக்கு முக ஆரையும் 7cm உயரமுடைய உருளை வடிவ கண்ணாடி முகவையொன்றினுள், அரைக் கோளத்தின் தட்டையான பகுதி முகவையின் உள் அடிப்பாகத்தில் பொருந்துமாறு வைக்கப்பட்டுள்ளது. முகவையினுள் 3.5cm உயரத்திற்கு நிறமூட்டப்பட்ட நீர் ஊற்றப்பட்டுள்ளது.




I) rஆரையுடைய அரைக்கோளத் திண்மத்தின்

(IV பக்கம்பார்க்க)




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006

ஏப்ரல்

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

## வணிகக்கல்வி

1 மணித்தியாலம்　　திரு.B.S. பசீல் (B.B.A) யாழ்.

### வணிகக்கல்வி I பகுதி I

எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்திலேயே விடை தருக.

01 - 20 வரையான பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகச்சரியான விடைக்குரிய இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக. சுருக்கமானதும் நேரடியானதுமான வினாவுக்குரிய விடையை உரிய புள்ளிக்கோட்டில் சரியாக எழுதுக.

ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் மொத்தம் 40 புளளிகள் வழங்கப்படும்.

1. பின்வருவனவற்றுள் எது முதன்நிலைத் துறையாகக் கருதக்கூடியது?
(1) பீசா விநியோகம்　　(2) பீசா உற்பத்தி
(3) தக்காளி வளர்ப்பு　　(4) பழம் மற்றும் மரக்கறி மொத்த விற்பனை
(5) பால் விற்பனை

2. தனிவியாபாரத்தின் அனுகூலமாக கருதமுடியாதது?
(1) உரிமையாளரே தலைமை தாங்குதல். (2)முழு இலாபத்தையும் பெறுதல்.
(3) விரைவாகவும் இலகுவாகவும் ஒழுங்கு செய்தல்.
(4) தொழிற்பிரிப்பு இருத்தல்.　　(5)தொழில் திருப்தி இருத்தல்.

3. பின்வருவனவற்றுள் விருப்பமாகக் கருதக்கூடியது?
(1) உணவும் பானமும்　　(2) ஆடையணிகள்.
(3) பாதுகாப்பு.　　(4) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம்.
(5) அன்பு

4. பின்வருவனவற்றுள் எதனை நுகர்வோர் உரிமை என்ற பட்டியலில் அடக்க முடியாது?
(1) பாதுகாப்பிற்கு உரிமை　(2) எதையும் கொள்வனவு செய்யும் உரிமை
(3) தெரிவு செய்யும் உரிமை (4)கவன ஈர்ப்பு உரிமை
(5) தகவல் அறிவுக்கான உரிமை

5. நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் பணியாக் கருதமுடியாதது?
(1) நுகர்வோர் உரிமையைப் பாதுகாத்தல்
(2) நுகர்வோருக்குச் சந்தை தொடர்பான அறிவை வழங்கல்
(3) நுகர்வோர் நடத்தைகளை ஆய்வு செய்தல்.
(4) நுகர்வோர் சங்கங்களை உருவாக்குதல்.
(5) போட்டி விலையை உருவாக்குதல்.

6. அரசு வணிக நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் வழி?
(1) வரிக் கொள்கை　　(2) நாணயக் கொள்கை
(3) பண நிரம்பல்க் கொள்கை　　(4) நாணய மாற்றுக் கொள்கை
(5) மேற்கூறிய எல்லாம்.

7. பொதுவாக சிறு வணிகங்கள் கொண்டிருக்கும் பண்பு?
(1) மூலதன செறிவானவை　　(2) ஊழிய செறிவானவை
(3) வினைத் திறனற்றவை　　(4) நிதியிட இலகுவானவை
(5) மேற்குறிப்பிட்ட அனைத்தும் அடங்கியவை.

8. பங்குடமை ஒப்பந்தம் ஒன்றை எழுதி வைத்திருப்பதன் பிரதான நன்மை?
(1) பங்காளரின் கடமைகளை வெளிப்படுத்தும்.
(2) இலாபநட்டப் பகிர்வு இலகு.
(3) பங்காளர்களிடையே எழும் முரண்பாடுகளைக் குறைக்க உதவும்.
(4) பங்குடமையின் தொழிலை எடுத்துக் காட்டும்
(5) பங்குடமையின் குறிக்கோளை எடுத்துக்காட்டும்.

9. பொதுக்கம்பனி ஒன்றில் முதலீடு செய்திருப்பவர்களுக்குத் தேவையான தகவல் அடங்கியது?
(1) அமைப்பு புறவிதி　　(2) அமைப்பு அகவிதி
(3) மூலதன விபரக் கூற்று　　(4) சட்டமுறை அறிக்கை
(5) முன்விபரணம்

10. இலங்கை பொது முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் தொழிற்பாடாக கொள்ள முடியாதது?
(1) மறுசீரமைக்கும் தேவை கருதி கூட்டுத்தாபனங்களை ஆய்வு செய்தல்.
(2) தனியார் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கல்
(3) தனியார் மயமாக்கலை மேற்கொள்ளல்.
(4) பொதுத்துறை நிறுவனங்களின் உறுதியான கட்டுக்கோப்பை வளர்த்தல்
(5) அரச திறைசேரிக்கு சொந்தமான பங்குகளை முகாமை செய்தல்

11. கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் பொருத்தமற்ற கூற்று எது?
(1) சேவை நோக்கற்றது.
(2) பங்கின் பெறுமதி மாற்றமில்லாது இருத்தல்.
(3) ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்களிக்கும் உரிமை உண்டு
(4) உழைக்கும் இலாபம் எல்லாம் அங்கத்தவர்களுக்கு உரியது.
(5) பங்கு முதலுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டியுண்டு

12. பின்வருவனவற்றில் சாதாரண பங்குதாரர்களுக்கான நன்மையாகக் கருதிக் கொள்ள முடியாதது?
(1) கூட்டங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பு
(2) முகாமையில் பங்கு கொள்ளும் வாய்ப்பு
(3) நிலையான வருமானம் ஒன்றை பெறும் வாய்ப்பு
(4) வாக்களிப்பில் பங்கு கொள்ளும் வாய்ப்பு
(5) கம்பனியில் நிலைத்திருக்கும் வாய்ப்பு

13. சிறப்பியல்பு வாய்ந்த நிதிநிறுவனம் எனும் தொகுதியில் அடக்கப்படாதது?
(1) வணிகர் வங்கிகள்　　(2) சேமிப்பு வங்கிகள்
(3) குத்தகைக் கம்பனிகள்　　(4) முயற்சி மூலதனக் கம்பனிகள்
(5) காப்புறுதிக் கம்பனிகள்

(1) பூரணத்துவம்　　(2) தெளிவு
(3) பிழையின்மை　　(4) சுருக்கமாக இருத்தல்
(5) மேற்கூறிய எல்லாம்

15. பின்வருவனவற்றுள் எழுத்து மூலமான தொடர்பாடலின் அனுகூலமாகக் கொள்ள முடியாதது எது?
(1) தகவலை சிறப்பாக நெறிப்படுத்தி வழங்கலாம்.
(2) தகவலை உறுதிப்படுத்தலாம்.　　(3)தகவலை விளக்கமாக வழங்கலாம்.
(4) தகவலை வலியுறுத்தலாம்
(5) தகவலை பெறுபவரின் சூழ்நிலைக்கேற்ப வழங்கலாம்
(----------------------)

16. தனிப்பட்ட தொடர்பாடல் தேவைகருதி தனிப்பட்ட கணனிகளும் தனிப்பட்ட வேலைத்தளங்களும் இணைக்கப்பட்டிருப்பது எவ்வாறு அழைக்கப்படும்?
(1) உள்ளக வலையமைப்பு　　(2) வெளியக வலையமைப்பு
(3) பரந்த வலையமைப்பு　　(4) கணனி மாநாடு
(5) கணனி தொழில்நுட்பம்　　(----------------------)

17. காசோலை ஒன்று தொடர்பில் கட்டளை இடப்பட்டவர் எனப்படுவது?
(1) காசோலையை வரைபவர்　　(2) காசோலைக்குப் பணம் பெறுபவர்
(3) காசோலைக்குப் பணம் செலுத்தும் வங்கி
(4) காசோலையை தீர்வு செய்யும் நிறுவனம். (5) இலங்கை வங்கி
(----------------------)

18. பின்வரும் ஆவணங்களுள் எது விற்பனை நடைபெறும் ஒவ்வொரு வேளையிலும் வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்?
(1) பட்டியல்　　(2) கூற்று　　(3) விநியோகக் குறிப்பு
(4) செலவுத் தாள்　　(5) வரவுத் தாள்
(----------------------)

19. பண்டங்கள் மீது உரித்தினைக் கொண்டுள்ள நடுவர்?
(1) தரகர்　　(2) தரகு முகவர்　　(3) பொறுப்பு முகவர்
(4) அனுப்பு முகவர் (5) பாதையோர வியாபாரி
(----------------------)

20. தகவல் தொழில்நுட்பத்தில் பின்வருவனவற்றில் எது மென்பகுதியாக கருதப்படும்?
(1) மைய செயன்முறைப்படுத்தல் அலகு (CPU)
(2) கணனி தட்டச்சு விசைப்பலகை (Key Board)
(3) கணனிசார் செயல்நிரல் (Programme)
(4) கணனி மொனிட்டர் (Monitor)
(5) கையுருட்டி (Mouse)　　(----------------------)

21. கொடுக்கல் வாங்கல்களுக்குப் பிரபல்யம் பெற்ற சாதனங்களாக ---------------------------------- காணப்படுகின்றன.

22. இலங்கையின் இறக்குமதிகளின் மூன்று பிரதான வகுதிகளையும் பெறுமதி ஒழுங்கில் எழுதுக?

-----------------------------------------------------------

23. உள்நாட்டிற்குள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடமுடியாத கம்பனி எவ்வாறு அழைக்கப்படும்?

-----------------------------------------------------------

24. பல்வேறுவகைப் பொருட்களை மிகப் பெரும்ளவில் கடல் மார்க்கமாக எடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான சாதனம் எது?

-----------------------------------------------------------

25. வணிகநிறுவனம் ஒன்று அதன் விநியோக நடவடிக்கைக்கு தேவைப்படும் மோட்டார் வாகனம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் அதேவேளையில் தொழிற்படுமூலதன பிரச்சினைகளையும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு எண்ணியுள்ளது. இதற்கு மிகப்பொருத்தமான முறை யாது?

-----------------------------------------------------------

26. நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை உருவாக்கலில் ஒன்றிணைக்கப்பட்ட அமைப்புக்கள் எவை?

.....................................................................

27. (அ). தற்போது ஒழுங்குபடுத்தப்பட்டுவரும் புதிய காசோலைத் தீர்ப்பனவு முறை எது?

.....................................................................

(ஆ). அதற்கு அறிமுகப்படுத்தப்படும் காசோலைகள் எப்பெயரில் அழைக்கப் படுகின்றன?

.....................................................................

28. சூழலை மாசுபடுத்தாத வகையில் வணிகத்தில் ஈடுபடுத்துவதும் வாடிக்கையாளரை மதிக்கின்ற அவர்களை பெறுமதிமிக்கவர்களாக கருதுகின்ற நடவடிக்கை எவ்வாறு அழைக்கப்படும்?

.....................................................................

29. கடலபாயக் காப்புறுதியில் காப்புறுதி பெறும் உரிமை ............................ ....................காலத்தில் இருந்தாலே போது மானதாகும்.

30. வீதிப்போக்குவரத்தின் பயணிகளின் நலனைப்பேணும்வகையில் செயற்படும் அமைப்பு எது?

.....................................................................

31. பின்வரும் நாணயங்களைக் கொள்வனவு செய்ய எவ்வளவு ரூபா செலுத்த வேண்டும்?
(அ). ஐக்கிய அமெரிக்க டொலர் ........................................
(ஆ). இங்கிலாந்து ஸ்ரேலிங் பவுன் ........................................
(இ). யூரோ ........................................................

32. மாற்றுமுறை ஆவணத்தின் மீதான உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றுவது .................. ......................................... ஆகும்.

33. அண்மையில் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த வங்கி எது?

.....................................................................

34. GATT எனும் அமைப்புக்குப் பதிலாக எது நிறுவப்பட்டது?

.....................................................................

35. ரூபா 10 இலட்சம் பெறுமதியான கட்டடத்திற்கு ரூபா 5 இலட்சத்திற்கு வெறும் தீ அபாயக்காப்புறுதி செய்யப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட கலவரத்தால் கட்டடம் முழுமையாக சேதமடைந்தது. நட்ட ஈடு தொடர்பாக உமது கருத்து யாது?

.....................................................................

36. பிறநாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் இலங்கையில் வைப்பு செய்த பணத்தை பிற நாடுகளில் பெற வசதியாக வங்கிகள் அறிமுகப்படுத்திய அட்டை யாது?

.....................................................................

37. பணியாளர்களின் நேர்மையின்மையால் பணியளிப்போருக்கு ஏற்படவல்ல நட்டத்தை ஈடுசெய்ய உதவும் காப்புறுதி எது?

.....................................................................

38. இறக்குமதி செய்யப்படும் ஆடைகளை துறைமுகத்தில் இருந்து தீர்வை செலுத்தி அப்புறப்படுத்தும் வரை பாதுகாத்து வைக்கும் இடம் எது?

.....................................................................

**பின்வருவன உண்மையா அல்லது பொய்யா என அதன் கீழ் கோடிடுக**

39. (அ). நுகர்வோருக்குப் பொருட்களை விநியோகிப்பவர் சில்லறை வியாபாரி ஆவார்
உண்மை / பொய்
(ஆ).மொத்த வியாபாரி உற்பத்தியாளனுக்கும் சில்லறை வியாபாரிக்கும் பொருட் களை விநியோகிப்பவர்
உண்மை / பொய்

40. (அ). ஒரு மீன்பிடி தொழிலாளரின் வேலை முதன்நிலைத் துறை சார்ந்தது
உண்மை / பொய்
(ஆ). பல் வைத்தியரின் வேலை மூன்றாம் நிலைத் துறை சார்ந்தது
உண்மை / பொய்

## வணிகக்கல்வி I பகுதி II

முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(முதலாம் இரண்டாம் வினாக்களுக்கு 18 புள்ளிகள் வீதமும் ஏனைய வினாக்களுக்கு 12 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்)

1. (i). கைத்தொழில் புரட்சி எனப்படுவது யாது? அதனால் வணிக நடவடிக்கைகளில் ஏற்பட்டமாற்றங்கள் எவை?
   (ii). வணிக நிறுவனத்துடன் தொடர்புபடும் அகச்சூழல், புறச்சூழல் காரணிகளை வேறுபடுத்துக?
   (iii). கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் எதிர்ப்படும் பிரச்சினைகள் எவை?
   (iv). நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் குறிக்கோள்கள் எவை?
   (v). அங்கீகாரம் பெற்ற வியாபாரத்தில் அங்கீகாரம் அளிப்பவரினதும் அங்கீகாரம் பெறுபவரினதும் கடமைகளைக் கூறுக?
   (vi). பின்வருவனவற்றை விளக்குக?
   (அ). இலத்திரனியல் வர்த்தகம் (ஆ). வரவு அட்டை
   (இ) நுகர்வோர் பொறுப்பு
2. (i). (அ). இலங்கையில் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்து வருவதனால் எழவல்ல பாதிப்புக்கள் எவை?
   (ஆ). இலங்கையில் சேவைத்துறையின் பங்களிப்பு அதிகரித்து வருவதற்குரிய காரணங்கள் யாவை?
   (ii). தனியார் கம்பனியில் காணப்படக் கூடிய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விபரிக்குக?
   (iii). கம்பனியின் பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்புக்கள் எவை?
   (iv). சிறிய நடுத்தர வணிக நிறுவனங்களுக்கு வெவ்வேறு சேவைகளை வழங்கும் மூன்று அரச நிறுவனங்களை பெயரிட்டு அதன் பிரதான சேவையையும் குறிப்பிடுக?
   (v). (அ). இலங்கையில் சூழல் பாதுகாப்பில் ஈடுபடும் அமைப்பு எது?
   (ஆ). ஒரு வணிக நிறுவனம் கடைப்பிடிக்க வேண்டிய வணிக விழுமியங்கள் எவை?
   (vi). பின்வருவனவற்றை விளக்குக?
   (அ). முற்பகர்வு (ஆ). ஆண்டறிக்கை
   (இ). பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பனி
3. (i). (அ). பணத்தின் மெய்ப் பெறுமானம் எனப்படுவது யாது? அதை எவ்வாறு மதிப்பிடலாம்?
   (ஆ). "நாணயம்", "கடனட்டை" என்பவற்றை வேறுபடுத்துக?
   (ii). இலங்கை மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகளை வேறுபடுத்திக் காட்டுக?
   (iii). அரச நிறுவனம் ஒன்றை தனியார் மயப்படுத்தும் போது அரசு எதனை எதிர்பார்க்கின்றது?
   (iv). இன்னொருவரின் பெயரில் வரையப்பட்ட காசோலையைக் கைமாற்றாகப் பெறும் ஒருவர் எவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்?
4. (i). வணிக முயற்சி ஒன்றிற்கு காப்புறுதியின் முக்கியத்துவத்திற்கான ஆறு காரணங்களைத் தருக?
   (ii). (அ). பூரண மோட்டார் விபத்துக் காப்புறுதியுடன் வேறு எவ் அபாயங்களுக்கும் சேர்த்துக் காப்புறுதி செய்யலாம்?
   (ஆ). காப்புறுதியாளரிடையே நிலவும் போட்டியால் வாடிக்கையாளர் அடையும நன்மைகள் எவை?
   (iii) ஒரு வணிக அமைப்பிற்கு அகத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தினைத் தருக?
   (iv) பின்வருவனவற்றை விளக்குக?
   (அ). அங்கத்துவத் தத்துவம் (ஆ). பரந்த வலையமைப்பு
   (இ). வாக்குரிமையற்ற பங்கு
5. (i). நிறுவனங்கள் தரவு செய்முறைப்படுத்தலில் (Data processing) கணனிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய நன்மைகள் எவை?
   (ii). இலங்கையில் தெருப் போக்குவரத்தில் நெரிசல் தன்மை ஏற்படுவதனால் எழுந்துள்ள பாதிப்புக்கள் எவை?
   (iii). ஓர் ஏற்றுமதியாளன் தான் ஏற்றுமதிச் சந்தையினுள் பிரவேசிப்பதற்கு எவ்விடயங்களை ஆராய்ந்து கொள்ள வேண்டும்?
   (iv). பின்வருவனவற்றை விளக்குக?
   (அ). வர்த்தக நிலுவை (ஆ).கோட்டா முறை (இ) எதிர் வர்த்தகம்
6. (i). சர்வதேச ரீதியாக வணிகத்தில் எதிர்நோக்கப்பட்டு வரும் சவால்களை விபரிக்குக?
   (ii). சில்லறை வியாபாரியின் ஆறு தொழிற்பாடுகளைக் கூறுக?
   (iii). (அ) மொத்த வியாபாரத்தில் ஈடுபடுபவரிடம் எம் முன்னேற்பாடுகள் காணப்பட வேண்டும்?
   (ஆ) தரகரையும் தரகு முகவரையும் வேறுபடுத்துக?
   (iv). பின்வருவனவற்றை விளக்குக?
   (அ). வரவுத்தாள் (ஆ). பருவகாலக் கழிவு (இ).தோற்றுவாய் சான்றிதழ்

## வணிகக்கல்வி II பகுதி I

எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்திலேயே விடை தருக.

01 - 20 வரையான பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகச்சரியான விடைக்குரிய இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக. சுருக்கமானதும் நேரடியானதுமான வினாவுக்குரிய விடையை உரிய புள்ளிக்கோட்டில் சரியாக எழுதுக.

ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் மொத்தம் 40 புளளிகள் வழங்கப்படும்.

1. முயற்சியாளர் ஒருவரின் பிரதான தொழிற்பாடு பின்வருவனவற்றில் எதுவாகக் கருதப்படும்?
(1) உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்தல்.
(2) மனித தேவைகள் விருப்பங்களை திருப்தி செய்ய வெளியீடுகளை வழங்குதல்.
(3) பிறர்மீது ஆதிக்கம் செலுத்துதல்.
(4) முகாமைப் பணிகளை நிறைவேற்றுதல்.
(5) பல்வேறு சமூக அமைப்புக்களில் அங்கம் வகித்தல்.
2. பின்வருவனவற்றில் முயற்சியாண்மை ஒன்றின் சிறப்பியல்பாக கருதப்பட முடியாதது எது?
(1) ஆக்கத்திறன் (2) அர்ப்பண சிந்தை (3) நெகிழும் தன்மை
(4) இடர்கள் எதையும் ஏற்றுக் கொள்ளல். (5) தன்னம்பிக்கை
3. வளங்களை விரயமாக்காது இழிவுக் கிரயத்துடன் பயன்படுத்துவது?
(1) வினைத்திறன் (2) விளைதிறன் (3) உள்ளீடு
(4) வெளியீடு (5) கொள்கை
4. வேலை ஒப்பந்தம் ஒன்றில் இடம்பெறும் விடயமாகக் கருதப்படாதது?
(1) வேலையின் தலைப்பு (2) கொடுப்பனவு (3) வேலை நேரம்
(4) சுகவீன தன்மை (5) வரிக் கொடுப்பனவு
5. தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் தொழில் வழங்குனரால் வழங்கப்படும் பாதுகாப்பு எச்சரிக்கைகளையும் அடையாளங்களையும் மதிப்பதில்லை. பாதுகாப்பு ஆடைகளையும் அணிவதில்லை. இதற்கான முழுப்பொறுப்பு யாருடையது?
(1) தொழில் வழங்குனருடையது. (2) மேற்பார்வையாளருடையது.
(3) அந்த வேலையாளருடையது. (4) அரசுடையது.
(5) ஒருவருமில்லை
6. நிறுவனங்கள் இலாபம் உழைப்பது மட்டுமல்லாமல் வாடிக்கையாளரை ஏமாற்றாது அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் எனும் நோக்கம்?
(1) இலக்கு (2) குறிக்கோள் (3) விதி
(4) வணிக விழுமியம் (5) பொறுப்பு
7. பின்வருவனவற்றில் வளம் என்பதில் அடக்கப்பட முடியாதவை?
(1) மனிதர்கள் (2) நேரம் (3) எண்ணக்கருக்கள்
(4) செலவு (5)வாடிக்கையாளர்.
8. ஓர் உற்பத்தி முகாமையாளருக்கு அதிகம் காணப்பட வேண்டிய திறன்?
(1) எண்ணக்கரு சார்ந்த திறமைகள். (2) மனித தொடர்புசார் திறமைகள்.
(3) தொழில்நுட்ப திறமைகள் (4) கணக்கீட்டுத் திறமைகள்
(5) பகுத்தாராயும் திறமைகள்
9. அதிகாரக் கையளிப்பு எப்பரப்பின் கீழ் வரும்?
(1) திட்டமிடுதல் (2) ஒழுங்கமைத்தல் (3) தலைமைத்துவம்
(4) ஊக்கம் அளித்தல் (5) கட்டுப்படுத்தல்
10. யப்பானிய நவீன முகாமைத்துவ எண்ணக்கருக்களில் எது தரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது?
(1) Seiri (செய்ரி) (2) Seiton (செய்ரென்) (3) Seiso (செய்சோ)
(4) Seiketsu (செய்கெற்சு) (5) Shitsuke (செய்ற்சுகசே)
11. நிறுவன இலக்கை அடைவதற்கு கருமம் ஆற்றுவதற்கு வழிகாட்டுவது?
(1) தொலைநோக்கு (2) கொள்கைகள் (3) ஆய்வுகள்
(4) தீர்மானம் (5) ஊக்கப்படுத்தல்
12. பின்வருவனவற்றில் எது வணிகத்தினை எங்கே நிறுவுவது எனும் தீர்மானம் செய்தலில் தாக்கம் செலுத்துவதில்லை?
(1) மூலப்பொருட்களின் விலை (2) மூலப்பொருட்களுக்கான இடம்.
(3) போக்குவரத்து இணைப்பு (4) தேவைப்படும் ஊழியர்களின் வகை
(5) சமூக பின்னணி
13. சுலபமாக ஒரு பணியை நிறைவேற்றுவதற்கு தொழிற்படையை உந்துவிப்பது?
(1) தலைமைத்துவம் (2) ஊக்கப்படுத்தல் (3)தொடர்பாடல்
(4) ஒழுங்கமைத்தல் (5) திட்டமிடுதல்
14. பின்வருவனவற்றில் எது தையல் கற்பதில் வேலை மீதான பயிற்சி என்பதாகக் கருதப்படும்?
(1) விளக்கங்களுக்கு செவிகொடுத்தல் (2) பாடப் புத்தகங்களை வாசித்தல்
(3) சிலரின் தையலைக் கவனித்தல் (4) தைத்தல்,
(5) தைத்த் ஆடைகளைப் பார்த்தல்
15. உயர்ந்த ஒழுங்கமைப்பின் பண்பாகக் கொள்ள முடியாதது?
(1) குறுகிய விசால அளவு (2) அதிக முகாமை மட்டங்கள்.
(3) நீண்டபடிமுறைச் சங்கிலி (4) தொடர்பாடலில் தாமதம்
(5) குறைந்த முகாமைத்துவ செலவுகள்.
16. செறிந்த விநியோக முறையை பின்பற்றும் பொருள் எது?
(1) வசதிப் பொருள் (2) கடைப் பொருள்(3)விசேட பொருள
(4)நாடப்படாப் பொருள் (5) கைத்தொழிற் பொருள்
17. பின்வருவனவற்றில் எது ஆய்வுக்குரிய முதன்மைத் தரவாகக் கொள்ள முடியாதது?
(1) அவதானம் (2) பரிசோதித்தல் (3) வினாக் கொத்து
(4) தனிப்பட்ட விசாரணை (5) நூலக ஆய்வு
18. பின்வருவனவற்றுள் எது ஆட்சேர்ப்பு செய்முறையில் முதலாவது படியாகக் கருதப்படும்?
(1) விண்ணப்பதாரரைத் தரம் பிரித்தல்
(2) வெற்றிடங்களை விளம்பரப்படுத்தல்
(3) வேலை விபரணத்தை வரைதல்
(4) விண்ணப்பதாரருக்கு நேர்முகப் பரீட்சை வைத்தல்
(5) மருத்துவப் பரிசோதனை செய்தல்
19. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நோக்கம்?
(1) பங்குத்தரகரின் நலனைப் பாதுகாத்தல்
(2) ஊழியர்களின் நலனைப் பாதுகாத்தல்
(3) இலங்கை மக்களின் நலனைப் பாதுகாத்தல்.
(4) முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாத்தல்.
(5) மேற்கூறப்பட்ட எல்லாம் சரி
20. பின்வருவனவற்றுள் எது பணச்சந்தையின் கருவியாகும்?
(1) வாக்குரிமையற்ற பங்கு (2) அரச திறைசேரி உண்டியல்
(3) அரச திறைசேரி முறி (4) ரூபா பிணை
(5) இலங்கை அபிவிருத்தி முறி
21. நிறுவனம் புதிய பொருளை அறிமுகப்படுத்தும் பொழுது குறைந்த அளவை வெளியிட்டு, கூடிய ஆரம்ப விலைக்கு விற்பதும் பின்னர் கேள்வியைக் கவரும் வகையில் விலைக்குறைப்புச் செய்வதுமான விலையிடுதல் ——————————————— ஆகும்.
22. பட்டியல்களின் பெயரில் வெளிநின்ற கடன்களை அறவிடுவதனை விசேடமாக ஒரு கம்பனியிடம் ஒப்படைத்து நிதிபெறுவது ——————————————— என அழைக்கப்படும்
23. வேலைக்கு சேர்க்கப்படும் ஊழியரிடம் எதிர்பார்க்கப்படும் கல்வித் தகமை, உடல்ரீதியான தகமை, அனுபவம் போன்றவற்றைக் கூறுவது ——————————————— என அழைக்கப்படும்.
24. இரசாயன, உணவுப்பொருள் செய்முறை, இணைப்பு, பராமரிப்பு என்பவற்றில் தர உறுதிப்பாட்டிற்கான சர்வதேச நியமம் ——————————————— ஆகும்
25. அரச பிணையங்களினை பத்திரமற்ற முறையில் பரிமாற்றுகின்ற (SSSS) முறைக்கு வழங்கப்படும் பெயரென்ன?

**உயர்தர பிரிவு மாணவர்களே!**

பரீட்சையை எதிர்நோக்கி பல்கலைக்கழக அனுமதிக்காக பலத்த போட்டிகளின் மத்தியில் பரீட்சை எழுதத் தயாராகிக் கொண்டிருக்கும் உங்களுக்கு பரீட்சையை இலகுவாக எதிர் நோக்குவதற்காக இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பாடசாலை, தனியார்நிறுவன முன்னணி ஆசியர்களின் எதிர்பார்ப்பு மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் கல்விச் சுடரில் உங்களுக்காக வெளி வருகின்றது. குறிப்பாக "சற்" புள்ளியில் கூழய நிலையில் இருக்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் எதிர்பார்க்கை மாதிரி வினாப்பத்திரங்கள் உங்களுக்காக பிரசுரிக்கப்படுகின்றது. வழமையாக ஆசிரியரிடம் கற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் எமது கல்விச் சுடருடன் இணையும் போது ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு ஆசிரியர்களின் சிந்தனைகளையும், வியூகங்களையும், விடை அணுகும் ஆற்றல்களையும் அறிந்து பரீட்சையில் வெற்றி நடைபோட முடியும் என்பது கல்விச் சுடரின் அசையாத நம்பிக்கையாகும். எனவே மாணவர்களே எமது கல்விச்சுடருடன் தொடர்ச்சியாக இணைந்திருங்கள்.

-ஆசிரியர்.

**(வணிகக்கல்வி II இன் பகுதி I தொடர்ச்சியும் வணிகக்கல்வி II பகுதி II உம் 27.03.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)**

(IV பக்கத் தொடர்ச்சி)

வளைபரப்பளவை π, r இல் தருக.

II) r ஆரையும் h உயரமுமுடைய செவ்வுருளையொன்றின் வளைபரப்பளவை π, r, hஇல் தருக.

III) நிறமூட்டப்பட்ட நீர் தொடுகையுறாத அரைக்கோளப் பகுதியில் மேற்பரப்ப ளவைக் காண்க.

07.a) ஒரே அடியிலும் ஒரே சமாந்தரக் கோடுகளுக்கு இடையிலும் அமைந்துள்ள முக்கோணி களின் பரப்பளவுகள் சமன் என நிறுவுக.

b) ABCD ஒரு சரிவகம், அதன் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று M இல் வெட்டு கின்றன. $\Delta ADM = \Delta BCM$ என நிறுவுக.

08. காவல்துறையில் சேர்வதற்கு விண்ணப்பித்தவர்களில் 100 பேரின் உயரங்கள் பற்றிய விவரம் கீழேயுள்ள மீடிறன் பரம்பலில் காணப்படுகின்றன.

| உயரம் (cm இல்) | 145-155 | 155-160 | 160-165 | 165-170 | 170-175 | 175-190 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (விண்ணப்பித்தவரின் எண்ணிக்கை) | 14 | 20 | 28 | 16 | 10 | 12 |

I) இப்பரம்பலை வகை குறிப்பதற்கு ஒரு வலையுரு வரையத்தை வரைக.

II) இவ்வலையுரு வரையத்தைக் கொண்டு உரிய மீடிறன் பல்கோணியை அதே படத்தில் வரைக.

III) 1.60m இலும் குறைவாகக் காணப்பட்டோர் எத்தனை பேர்?

IV) இவர்களுள் ஒருவரை எழுமாறாகத் தெரிவு செய்தால் அவர் 1.60m இற்கும் 1.75 m இற்கும் இடைப்பட்ட உயரம் உடையவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

v) மேலே வரைந்த வலையுருவரையத்திற்கும் மீடிறன் பல்கோணிக்கும் உள்ள தொடர்பைத் தருக.

வெளியீடு 01

## முதலாம் தவணைப் பரீட்சை தரம் 10

## மாதிரி வினாப்பத்திரம்

2 மணித்தியாலம் **கணிதம்**

திரு. செ. தவராசா யாழ் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. சுருக்குக. 19.5 + 1.95

02. A ={அ, இ, உ, எ } n(A) ஐ காண்க.

03. சுருக்குக. 9+(-2) - (-2)

04. 3/5 ஐ தசம எண்ணாகத் தருக.

05. $\sqrt{5}$ = 2.236 ........என்பது முடிவில்லாமல் செல்கிறது என்று ராம் கூறினான். $\sqrt{5}$ எப்பெயரால் அழைக்கப்படும்?


06. 
a யின் பெறுமானம் யாது?

07. 25:60 என்பதை எளிய விகிதமாகத் தருக.


08. 3/5 ஐ சதவீதமாகத் தருக.

09. 800 இன் 20% எவ்வளவு?

10. x/3 = 2 எனின் x இன் பெறுமானம் யாது? (10 புள்ளிகள்)

11. 
உருவின் a =.........
b =.........

12. சுருக்குக. $\frac{(-16)x(-15)}{8 x (-5)}$


13. 


1. உருவின் சுற்றளவு
2. பரப்பு


14. $y^2$+18y என்பதை 1. நிறைவர்க்கமாக எழுதச் சேர்க்க வேண்டிய உறுப்பைத் தருக.
2. நிறைவர்க்கக் கோவையாகத் தருக?


15. $3y^2$-12 எனும் கோவையில் 1. பொதுக்காரணியை வேறாக்கி எழுதுக.
2. காரணிப்படுத்துக.


16. 64 செ.மீ$^2$ பரப்பளவுள்ள சதுரம் ஒன்றின்
1. ஒரு பக்க நீளத்தைத் தருக.
2. சதுரத்தின் சுற்றளவு யாது?

17. உருவில் PQRS எனும் நேர்கோடுகள் O இல் இடை வெட்டுகின்றன. (a+b)ஐக் கணிக்க



18. 
உருவில் கோணங்கள் a,b என்பன a:b 5:4 எனும் விகிதத்தில் இருப்பின்
1. a ன் பருமன் யாது?
2. b ன் பருமன் யாது?


19. உருவில 1. வில் AB ன் நீளத்தைக் கணிக்க?
2. ஆரைச்சிறையின் சுற்றளவு யாது?



20. 
அருகிலுள்ள உருவில் முக்கோணி PQR இன் பரப்பளவு யாது? (20 புள்ளிகள்)

21. உருவில் கீழ்வரும் எழுத்துக்களால் குறிக்கப்படும் கோணங்களைக் காண்க.
a=
b=
c=


22. 36, 40, 60 என்பவற்றை
1. முதன்மைக் காரணிகளின் வலுக்களில் எழுதுக.
2. 36, 40, 60 என்பவற்றின் பொ.ம.சி காண்க.
3. மேலுள்ள எண்களில் பொ.கா.பெ காண்க.

23. அருகிலுள்ள வென்னுருவைப் பயன்படுத்தி
1. n (P) =
2. n(E) =
3. தொடை P இற்கு எத்தனை தொடைப்பிரிவு கள் எழுதலாம்?



24. அருகிலுள்ளது ஓர் ஐங்கோணியாகும்.
1. ஐங்கோணியின் அகக்கோணங்களின் கூட்டுத் தொகை யாது?
2. x இன் பெறுமானத்தைத் துணிவதற்கான சமன்பாட்டை எழுதுக.
3. சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் x இன் பெறுமானத்தைக் காண்க.


25. இணைகரம் ABCD ல்
1. x இன் பெறுமானத்தைக் கணிக்க.
2. இணைகரம் ABCD இல் பரப்பு யாது?
3. h இன் பெறுமானத்தைக் காண்க.


26. காரணி அறிவுகொண்டு பெறுமானம் காண்க.
$22/7 \times 15^2 - 22/7 \times 8^2$

27. கிறீன் வீச் கோட்டில் உள்ள நகரம் P ஆகும். அக்கோட்டிற்குக் கிழக்குத் திசையில் $30^o$ நெடுங்கோட்டில் Q என்னும் நகரம் அமைந்துள்ளது. R என்னும் நகரம் கிறீன் வீச் கோட்டிற்கு மேற்குத் திசையில் $30^o$ நெடுங்கோட்டில் அமைந்துள்ளது.
1. Q,R எனும் நகரங்களிற்கிடையிலான நேரவித்தியாசம் எவ்வளவு?
2. R இல் 0600h ஆக இருக்கும் போது Q இல் நேரம் என்ன?
3. Q இல் 1200hஆக இருக்கும் போது P இல் நேரம் என்ன?

28. P:Q = 1:2 ஆகவும் Q:R =4:3 எனத் தரப்படின்
1. P:Q:R ஐக் காண்க.
2. Q பெற்றுக்கொண்டது 4800 எனின் P பெற்ற தொகை எவ்வளவு?
3. R பெற்ற தொகை எவ்வளவு?

29. உருவில் 1. X+Y+Z இன் பெறுமானம் யாது?
2. X=Y=Z எனின் x இன் பெறுமானம் யாது?
3. P, Q, R, S, T, U ஐ இணைப்பதால் உருவாகும் உருவின் பெயர் யாது?


30. ஒருவன் பொருளொன்றை 40 ரூ. இற்கு விற்பதால் 10 ரூ. நட்டம் அடைகின்றான்.
1. பொருளின் கொள்விலை யாது?
2. சதவீத நட்டம் யாது?
3. 25% இலாபம் பெற விற்கவேண்டிய விலையாது? (30 புள்ளிகள்)


### பகுதி II


முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.

1. அ. E = {1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10}
A= {2, 4, 6, 8, 10}
மேலுள்ள தொடைகளைப் பயன்படுத்தி
1. n(A)
2. n(E)
3. மேற்படித் தொடைகளை வென் உரு ஒன்றில் குறித்துக் காட்டுக.
4. தொடை A இற்கான தொடைப் பிரிவுகள் எத்தனை?

ஆ. 1. சுருக்குக.(1 1/3 + 2 1/2) இன் 12/25.
2. சுருக்குக. $\frac{3- 2.75}{2.5}$
3. 24x15=360 எனின் 2.4 x 0.15 இன் பெறுமானத்தைக் காண்க.
4. 7.5 Kg சீனியில் இருந்து 50 g கொண்ட எத்தனை பற்கெட்டுகள் தயாரிக்கலாம்.

இ. 1. காரணிப்படுத்துக. $3a^2 + 18ab$
2. $4x^2$ - 9 ஐக் காரணியாக்குக.
3. $x^2 + 11x + 30$ ஐக் காரணியாக்குக.
4. $5y^2 + 18y + 9$ ஐக் காரணியாக்குக.

ஈ)

1. Y-2x-4=0 எனும் நேர்கோடு X, Y அச்சுக்களை வெட்டும் புள் ளிகளை எழுதுக.
2. Y-2x-4=0 எனும் நேர்கோட்டின் சமன்பாட்டை Y=MX+Cஎனும் வடிவில் தருக?
3. Y-2x-4=0 இந்நேர்கோட்டின் படித்திறனைத் தருக?
4. Y-2x-4=0 இற்குச் சமாந்தரமானதும் உற்பத்தியூடாகச் செல்வதுமான நேர்கோட்டின் சமன் பாட்டை எழுதுக.


2. 1. அரைவட்ட வரைவு யாது?
2. ΔABCஇன் பரப்பளவு?
3. கீழுள்ள ஆரைச் சிறையின் பரப்பளவைக் காண்க.
4. நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க.
(கீழுள்ள ஆரைச் சிறைப்பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது.)


03. எளிய வட்டிக்குக் கடனாகப் பெற்ற 40,000 ரூபா முதலுக்கு 3 வரு டங்களின் பின் 58, 000 ரூபா மொத்தத் தொகையாகச் செலுத்தி னார்.
1. வட்டியாகச் செலுத்திய தொகை யாது?
2. வட்டி அறவிடப்பட்ட எளிய வட்டி வீதம் யாது?
3. கடனாகப் பெற்ற தொகையை வாகனம் ஒன்றை வாங்கி 25 வீத இலாபத்துடன் விற்றிருந்தால், அடைந்த இலாபம் எவ்வளவு?
4. வாகனத்தை என்ன விலைக்கு விற்றிருப்பார்?

04. பின்வரும் கோவைகளின் பொ.ம.சி. யைக் காண்க.
1. $6x^2$, $15x^2y$, $8xy^2$
2. $(x+3)^2$, 4(x+3) (x+2), $5(x+2)^2$
3. $(x^2 - 9)$, $(x+3)^2$, $(x-3)^2$
4. $16-24x+9x^2$, $(8-6x)^2$, $(4+3x)^2$

05. அ) 1. 45, 50, 48, 34, 33 Kg நிறைகளைக் கொண்ட மாணவர்களின் இடை நிறை யைக் காண்க.
2. 50 Kg நிறையைக் கொண்ட மாணவனின் நிறை 11: 10 எனும் விகிதத்தில் அதிகரித்து இருப்பின் அம் மாணவனின் நிறையைக் காண்க.
3. நிறை அதிகரிப்பின் பின் மேற்படி மாணவர்களின் புதிய இடை நிறையாது?

ஆ) ஸ்ரீ, கோபி ஆகியோர் தம்மிடையே குறித்த தொகைப் பணத்தை 3:7 எனும் விகிதத் தில் பங்கிட்டபோது கோபி 3600 ரூபா கூடுதலாகப் பெற்றால்,
1. ஸ்ரீ பெற்றத் தொகை எவ்வளவு?
2. கோபி பெற்ற தொகை எவ்வளவு?

06. அ)

14 cm ஆரையுள்ள வட்டத்தட்டிலிருந்து உருவில் காட்டப்பட்ட வாறான பகுதி வெட்டி அகற்றப்பட்டது.
1. எஞ்சியப் பகுதியின் பரப்பளவைக் காண்க.

ஆ) அருகிலுள்ள பகுதியை குறுக்கு வெட்டாகவும் 20 செ.மீ. நீளமுள்ள குற்றி ஒன்றில்
1. x இன் பருமனைக் காண்க.
2. மேற்றளப் பரப்பளவைக் காண்க.
